தினபூமி
thinaboomi.com
மதுரை, ஞாயிறு, அக்டோபர் 02, 2022 ▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ பாண்டிச்சேரி




எலான் மஸ்க் நிறுவனம் டெஸ்லா சார்பில் மனித வடிவிலான அதி நவீன ரோபோ அறிமுகம்

...2-ம் பக்கம்


இந்தியா முழுவதும் 2023 இறுதிக்குள் 5ஜி சேவை: முகேஷ் அம்பானி உறுதி

...3-ம் பக்கம்

மகளிர் ஆசிய கோப்பை டி-20: இலங்கையை வீழ்த்தி இந்திய அணி வெற்றி

...7-ம் பக்கம்





● நடிகர் திலகம் சிவாஜிகணேசனின் 95-வது பிறந்தநாளை முன்னிட்டு, சென்னை அடையாறில் உள்ள மணிமண்டபத்தில், அவரது திருவுருவச்சிலைக்கு அருகில் வைக்கப்பட்டிருந்த திருவுருவப் படத்திற்கு, முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று மலர்தூவி மரியாதை செலுத்தினார். அருகில் அமைச்சர்கள் துரைமுருகன், மு.பெ.சாமிநாதன், அமைச்சர் பெருமக்கள், மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், சிவாஜிகணேசனின் மகன்கள் ராம்குமார், பிரபு குடும்பத்தினர் உள்ளனர்.

### 95-வது பிறந்த நாளை முன்னிட்டு

# நடிகர் திலகம் சிவாஜியின் சிலைக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் மரியாதை

சென்னை, அக். 02-

நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் 95-வது பிறந்த நாளையொட்டி நேற்று மணிமண்டபத்தில் உள்ள அவரது சிலைக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

நடிகர் திலகம் செவாலியர் சிவாஜி கணேசன் 1.10.1927 ஆம் ஆண்டு பிறந்தார். பராசக்தி திரைப்படத்தின் மூலம் தமிழ் திரைப்பட உலகில் அறிமுகமாகி 300-க்கும் மேற்பட்ட திரைப்படங்கள், 2 இந்தி படங்கள், 9 தெலுங்கு திரைப்படங்கள் மற்றும் ஒரு மலையாளத் திரைப்படத்திலும் நடித்துள்ளார். நடிகர் திலகம், நடிப்புச் சக்கரவர்த்தி என்று மக்களாலும், திரை உலகத்தினராலும் அழைக்கப்பட்டார். அவரது நடிப்பு திறமையை பாராட்டி பத்ம ஸ்ரீ விருது, பத்ம பூஷன் விருது, செவாலியே விருது மற்றும் தாதா சாகிப் பால்கே விருது உள்ளிட்ட விருதுகள் வழங்கப்பட்டன.

இந்த நிலையில் சிவாஜி கணேசனின் பிறந்த நாளையொட்டி நேற்று சென்னை, அடையாறு, தேஷ்முக் சாலையில் உள்ள நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் மணிமண்டப வளாகத்தில் உள்ள அவரது சிலைக்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

மேலும் சிவாஜி கணேசனின் பிறந்த நாளையொட்டி முதல்வர் மு.க. ஸ்டாலின் தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளதாவது,

நடிப்புக் கலைக்கு என்றும் இலக்கணமாகத் திகழுபவர் நடிகர் திலகம். பேரறிஞர் அண்ணா எழுதிய நாடகத்தில் நடித்து, தந்தை பெரியாரால் சிவாஜி என்ற பட்டம் பெற்று, அந்தப் பெயரிலேயே வரலாற்றில் நிலைத்துள்ளவர்.

பராசக்தி ஹீரோவாக புரட்சிக் கனல் கக்கி, வரலாற்று நாயகர்களின் திரை வடிவமாக நம் மனதில் பதிந்துள்ள நடிகர் திலகம், கருணாநிதியின் நண்பர். 1952-ல் வெளியான அவரது முதல் திரைப்படமான பராசக்திக்கு இது 70-ம் ஆண்டு. கலை உள்ள வரை செவாலியே சிவாஜி கணேசனின் புகழ் இந்த மண்ணில் நிலைத்து நிற்கும்.

இவ்வாறு அவர் அதில் பதிவிட்டுள்ளார்.

### தமிழகம், புதுச்சேரி உள்ளிட்ட மாநிலங்களில்

# வடகிழக்கு பருவமழை அக்.20-ல் துவங்குகிறது

## இந்திய வானிலை ஆய்வு மையம் தகவல்

சென்னை, அக். 02-

தமிழகம் புதுச்சேரி உள்ளிட்ட மாநிலங்களில் வடகிழக்கு பருவ மழை வரும் 20-ம் தேதி தொடங்குவதற்கான சாதகமான சூழல் உருவாகி வருகிறது என்றும், அதிக மற்றும் தீவிரமான புயல்கள் உருவாகும் வாய்ப்பு உள்ளதாகவும் இந்திய வானிலை மையம் தெரிவித்துள்ளது.

**45 சதவீதம் அதிகம்...**

தமிழகத்தில் தென் மேற்கு பருவமழை கடந்த ஆண்டு இயல்பை காட்டிலும் 45 சதவீதம் அதிகமாக பெய்து உள்ளது. தென்மேற்கு பருவமழை விடை பெறும் நிலையில் வடகிழக்கு பருவமழை இந்த மாதம் 20-ம் தேதி தொடங்குவதற்கான வாய்ப்பு இருப்பதாக இந்திய வானிலை மையம் தெரிவித்துள்ளது.

**சாதகமான சூழல்...**

இது குறித்து இந்திய வானிலை ஆய்வு மைய இயக்குனர் மிருத்யுஞ்சய் மொகபத்ரா கூறியதாவது:- வடகிழக்கு பருவமழை இந்த மாதம் 20-ம் தேதி தொடங்குவதற்கான சாதகமான சூழல் உருவாகி வருகிறது. தமிழ்நாடு, புதுச்சேரி, கடலோர ஆந்திரா, ராயலசீமா, கேரளா மற்றும் தென் கர்நாடகா ஆகிய 5 வானிலை துணைப் பிரிவுகளை உள்ளடக்கிய தென் தீபகற்ப இந்தியாவில் வடகிழக்கு பருவமழை இயல்பாக இருக்கும். 88 சதவீதம் முதல் 112 சதவீதம் வரை சராசரி மழை பெய்யக் கூடும்.

**புயல் உருவாக...**

வடகிழக்கு பருவமழை வெப்ப மண்டல சூறாவளிகளுக்கு பெயர் பெற்றது. சராசரியாக இந்த வடகிழக்கு பருவத்தில் 3 சூறாவளி புயல்கள் காணப்படுகின்றன. ஆனால் இந்த ஆண்டு வங்காள விரிகுடாவில் நிலவும் லாநினா மற்றும் எதிர்மறை இந்திய பெருங்கடல் இருமுனை நிலைமைகள் காரணமாக அதிக மற்றும் தீவிரமான புயல்கள் உருவாகும் வாய்ப்பு உள்ளது. இந்தோனேசியாவிற்கு அருகில் உள்ள வெப்பமான வங்காள விரிகுடா நீரில் சைக்ளோஜெனீசிஸ் செயல்பாடு அதிகரிக்கிறது. இது கடந்த கால ஆராய்ச்சி கண்டுபிடிப்புகளை அடிப்படையாக கொண்டது. எல்லா நேரங்களிலும் இது உண்மையாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை. இவ்வாறு அவர் கூறினார்.

**அதிகம் தாக்க...**

வானிலை மாதிரிகளின் அடிப்படையில் வட ஆந்திரா, மேற்கு வங்காளம், ஒடிசா, மற்றும் வங்கதேசம் அருகே புயல்கள் கரையை கடக்கும் வாய்ப்புகள் உள்ளன. புயல்கள் தமிழகத்தை தாக்குவதை விட இந்த பகுதிகளை அதிகமாக தாக்க வாய்ப்பு இருப்பதாகவும், வார இறுதியில் வங்க கடலில் புதிய புயல்கள் சுழற்சி உருவாகும் எனவும் இந்திய வானிலை மைய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

**திடீர் ஆலோசனை...**

இதற்கிடைய தமிழ் நாட்டில் வடகிழக்கு பருவமழை வரும் 20ந்தேதி தொடங்க வாய்ப்பு உள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தகவல் வெளியிட்டுள்ள நிலையில், தலைமைச் செயலாளர் இறையன்பு நேற்று உயர் அதிகாரிகளுடன் திடீர் ஆலோசனை மேற்கொண்டார். சென்னை தலைமைச் செயலகத்தில் தலைமைச் செயலாளர் இறையன்பு, வடகிழக்கு பருவமழைக்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து அனைத்து துறை செயலர்களுடன் திடீர் ஆலோசனை நடத்தினார்.

**செயலாளர்கள்...**

இந்த ஆலோசனை கூட்டத்தில் வடகிழக்கு பருவமழையையொட்டி கண்காணிக்கக்கூடிய நீர் ஆதார இடங்கள் மற்றும் மக்கள் பாதிக்கக்கூடிய இடங்கள், அவர்களை தங்கவைப்பதற்கான இடங்கள் தொடர்பாக ஆலோசிக்கப்பட்டதாக கூறப்படுகிறது. இந்த கூட்டத்தில் சென்னை மாநகர ஆணையம் மற்றும் வருவாய் துறை, மின்துறை, நகராட்சி நிர்வாகத்துறை செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

### காங்கிரஸ் கட்சியின் புதிய தலைவர் யார் ?

# சசி தரூர் - மல்லிகார்ஜூன இடையே நேரடி போட்டி

புதுடெல்லி, அக். 02-

காங்கிரஸ் கட்சி தலைவர் தேர்தலுக்கான போட்டியில் சசிதரூர் - மல்லிகார்ஜூன கார்கே இடையே நேரடி போட்டி ஏற்பட்டுள்ளது.

காங்கிரஸ் கட்சியின் தலைவர் பதவிக்கு அக்டோபர் மாதம் 17-ம் தேதி தேர்தல் நடத்தப்படுகிறது. இந்த தேர்தலில் சோனியா காந்தி குடும்பத்தில் இருந்து யாரும் போட்டியிடவில்லை. காங்கிரஸ் கட்சியின் தலைவர் பதவிக்கு மூத்த தலைவர் மல்லிகார்ஜூன கார்கே, சசி தரூர், ஜார்கண்ட் மாநில காங்கிரஸ் தலைவர் கேஎன் திரிபாதி ஆகியோர் வேட்புமனு தாக்கல் செய்தனர்.

முன்னதாக, காங்கிரஸ் தலைவர் தேர்தலில், ராஜஸ்தான் முதல்-மந்திரி அசோக் கெலாட் போட்டியிடாத நிலையில், மத்திய பிரதேச மாநில முன்னாள் முதல்-மந்திரியும், மாநிலங்களவை எம்.பி.யுமான திக்விஜய் சிங் (75), தான் போட்டியிடப்போவதாக அறிவித்தார்.

மல்லிகார்ஜூன கார்கேவுக்கு ஆதரவாக திக்விஜய சிங் போட்டியிடப் போவதில்லை என அறிவித்தார்.

இந்த நிலையில், காங்கிரஸ் தலைவர் தேர்தலுக்கான இறுதி வேட்பாளர் பட்டியலை கட்சியின் தேர்தல் ஆணைய தலைவர் மதுசூதன் மிஸ்த்ரி வெளியிட்டார்.

காங்கிரஸ் தலைவர் பதவிக்கு போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்த மல்லிகார்ஜூன கார்கே மற்றும் சசிதரூர் ஆகியோரின் மனுக்கள் ஏற்கப்பட்டுள்ளது. வேட்புமனுவை விதிமுறைகளின் படி பூர்த்தி செய்யாததால் கே.என் திரிபாதியின் வேட்புமனு நிராகரிக்கப்பட்டதாக தேர்தல் ஆணைய தலைவர் மதுசூதன் மிஸ்த்ரி தெரிவித்தார்.

இதன்மூலம், காங்கிரஸ் கட்சி தலைவர் பதவிக்கு மூத்த தலைவர் மல்லிகார்ஜூன கார்கே, சசி தரூர் இடையே நேரடிப்போட்டி ஏற்பட்டுள்ளது.

# 5ஜி சேவையை தொடங்கி வைத்தார் பிரதமர் மோடி

## முக்கிய நகரங்களில் முதலில் அறிமுகம்

புதுடெல்லி, அக். 02-

அதிவேக அலைக்கற்றை திறன் கொண்ட 5ஜி சேவையை நேற்று தொடங்கி வைத்தார் பிரதமர் மோடி. முதலில் இந்தியாவின் முக்கிய நகரங்களில் முதலில் அறிமுகமாகிறது.

கடந்த 2018 முதல் ஐ.ஐ.டி.கள், பெங்களூர் விஞ்ஞான தொழில்நுட்ப நிறுவனம், மத்திய தகவல் தொழில்நுட்ப துறை அமைச்சகத்தின் நிறுவனமான 'சமீர்' போன்றவற்றின் தீவிர ஆய்வுக்கு பிறகு 5 ஜி சேவையை அளிக்க முடிவு செய்யப்பட்டது.

தற்போது புழக்கத்தில் உள்ள 4 ஜி சேவையை விட பல மடங்கு வேகத்தை 5ஜி வழங்குகிறது. பின்னடைவு இல்லாத இணைப்பையும், நிகழ் நேரத்தில் தரவை பகிரும் உயர் தரவு விகிதம், கோடிக் கணக்கில் இணைக்கப்பட்ட சாதனங்களை இயக்கும் ஆற்றல் திறன், அலைக்கற்றை திறன் உள்ளிட்டவை நெட்வொர்க் செயல் திறனை அதிகரிக்க செய்யும்.

5ஜி அலைக்கற்றை ஏலம் சமீபத்தில் விடப்பட்டது. ஜியோ, ஏர்டெல், வோட போன்-ஐடியா போன்ற நிறுவனங்களோடு அதானியின் நிறுவனம் சுமார் 26 ஜிகா ஹெர்ட்ஸ் அலை வரிசையில் 5 ஜி அலைக்கற்றையை ஏலத்தில் எடுத்துள்ளது. 5 ஜி அலைக்கற்றை ஏலம் மூலம் அரசுக்கு ரூ.1.50 லட்சம் கோடி வருவாய் கிடைத்துள்ளது.

இந்தநிலையில் அதிவேக அலைக்கற்றை திறன் கொண்ட ஐந்தாம் தலைமுறை என்கிற 5ஜி சேவையை பிரதமர் நரேந்திர மோடி நேற்று தொடங்கி வைத்தார். டெல்லி பிரகதி மைதானத்தில் நடந்த 6-வது இந்திய கைப்பேசி மாநாட்டை அவர் தொடங்கி வைத்தார். அப்போது தொலை தொடர்பின் திருப்புமுனையாக இருக்கும் 5 ஜி சேவையையும் மோடி அறிமுகப்படுத்தினார்.

5 ஜி சேவை நாட்டின் முக்கிய நகரங்களில் முதலில் அறிமுகப்படுத்தப்படும். பின்னர் அடுத்த சில ஆண்டுகளில் படிப்படியாக விரிவுப்படுத்தப்படும். இந்த சேவையின் மூலம் நாட்டின் ஒட்டு மொத்த பொருளாதார தாக்கம் 2035 ஆண்டில் சுமார் ரூ.35 லட்சம் கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது.

### 50 ஆண்டுகள் வட்டியில்லா திட்டத்தின் கீழ்

# தமிழகத்திற்கு ரூ.3500 கோடி கடன் வழங்கியது மத்திய அரசு

## டெல்லியில் தமிழக நிதியமைச்சர் பேட்டி

புதுடெல்லி, அக். 02-

தமிழகத்துக்கு 50 ஆண்டு வட்டியில்லா திட்டத்தின் கீழ் ரூ.3,500 கோடியை மத்திய அரசு விடுவித்துள்ளது என்று டெல்லியில் மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனை சந்தித்த பிறகு தமிழக நிதி அமைச்சர் பிடிஆர் பழனிவேல் தியாகராஜன் கூறினார்.

தமிழக நிதியமைச்சர் பிடிஆர் பழனிவேல் தியாகராஜன் நேற்று டெல்லியில் மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனை சந்தித்து பேசினார். அப்போது பல்வேறு விஷயங்கள் குறித்து விவாதிக்கப்பட்டன. டெல்லியில் நார்த் ப்ளாக்கில் உள்ள நிதியமைச்சகம் அலுவலகத்தில் இந்த சந்திப்பு நடந்தது. அதன்பிறகு நிர்மலா சீதாராமன் உடனான சந்திப்பு பற்றி பிடிஆர் பழனிவேல் தியாகராஜன் பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

ஜிஎஸ்டி கவுன்சில் விதிகள்படி ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டம் 3 மாதத்துக்கு ஒருமுறை நடத்தப்பட்ட வேண்டும். ஆகஸ்ட் மாதத்தில் மதுரையில் நடப்பதாக அறிவிக்கப்பட்டது. செப்டம்பர் மாதம் முடிந்தும் இந்த கூட்டம் நடக்கவில்லை. இந்த கூட்டத்தை மதுரையில் நடத்துவது பற்றி விவாதித்தேன். இன்னும் தேதி குறிப்பிடவில்லை. ஆனாலும் விரைவில் அடுத்த கூட்டம் மதுரையில் உறுதியாக நடக்கும்.

மேலும் தமிழ்நாட்டின் பல திட்டங்கள், கணக்குகள் பற்றி நேற்று முன்தினம் அதிகாரிகளிடமும், நேற்று மத்திய நிதி அமைச்சரிடம் பேச்சுவார்த்தை நடத்தினேன். குறிப்பாக சென்னை மெட்ரோ ரயில் 2வது கட்ட பணிக்காக ஜைக்கா, ஏடிபி, எஐபிஐ நிறுவனங்களில் இருந்து பெறக்கூடிய கடனுக்கான அடிப்படை பத்திரங்கள் மத்திய அமைச்சரவையின் ஒப்புதலுக்காக நிலுவையில் உள்ளது. இதனை அவசரமாக ஒப்புதல் அளிக்க கோரினோம். இந்த விஷயத்தில் சில விளக்கங்களை கேட்டனர். அதனை 2 நாட்களுக்கு முன்பு கொடுத்து இருந்தோம். தற்போது இந்த மாத இறுதிக்குள் ஒப்புதல் வழங்கப்படும் என அறிவித்துள்ளார். இதன்மூலம் 2ம் கட்ட திட்டத்துக்கான கடனை

(கடைசி பக்கம் பார்க்க)

# 5 மாவட்டங்களில் இன்றும் கனமழைக்கு வாய்ப்பு

சென்னை, அக். 02-


தமிழகத்தில் 5 மாவட்டங்களில் இன்று கன மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஆந்திர கடலோரப் பகுதிகளின் மேல் நிலவும் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக இன்று (அக்.2 ம் தேதி) தமிழ்நாடு, புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒருசில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என்றும், நீலகிரி, கோவை, திருப்பூர், திண்டுக்கல், தேனி ஆகிய மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னையைப் பொறுத்தவரையில், அடுத்த 48 மணி நேரத்திற்கு வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒரு சில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும். அதிகபட்ச வெப்பநிலை 33 டிகிரி செல்சியஸ் மற்றும் குறைந்த பட்ச வெப்பநிலை 26 - 27 டிகிரி செல்சியஸ் அளவில் இருக்கக்கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**மார்க்கெட் விலை நிலவரம்**

| BSE | NSE |
|---|---|
| ↑ 1,016.96 | ↑ 276.25 |
| பாயின்ட் 57426.92 | பாயின்ட் 17094.35 |




| தங்கம் | வெள்ளி |
|---|---|
| 1 சவரன் ₹37,576 | 1 கிலோ ₹61,500 |
| 1 கிராம் ₹4,697 | 1 கிராம் ₹61.50 |



டாலர் ₹81.35

பெட்ரோல் ₹102.63
டீசல் ₹94.24




### உக்ரைன் பிராந்தியங்கள் ரஷ்யாவுடன் இணைப்பு:

# ஐ.நா. வாக்கெடுப்பை புறக்கணித்த இந்தியா உள்ளிட்ட 4 நாடுகள்

**நியூயார்க், அக். 02-**

உக்ரைன் பிராந்தியங்கள் ரஷ்யாவுடன் இணைக்கப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஐ.நா.வில் நடந்த வாக்கெடுப்பை இந்தியா உள்ளிட்ட 4 நாடுகள் புறக்கணித்தன.

உக்ரைனில் உள்ள டானட்ஸ்க், லூகன்ஸ்க், ஸ்பெரெசியா, கெர்சன் ஆகிய 4 பிராந்தியங்கள் ரஷ்யாவுடன் இணைக்கப்பட்டுள்ளதாக மாஸ்கோவின் க்ரெம்லின் மாளிகையின் புனித ஜார்ஜ் அரங்கில் நேற்று முன்தினம் நடந்த நிகழ்ச்சியில் அதிபர் புடின் அறிவித்தார். இதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். ரஷ்யாவின் இந்த நடவடிக்கை சட்டவிரோதமானது என்று உலக நாடுகள் தெரிவித்து வருகின்றன.



இந்நிலையில், ரஷ்யாவின் நடவடிக்கை குறித்து விவாதிக்க ஐ.நா பாதுகாப்பு கவுன்சில் கூட்டம் நேற்று முன்தினம் நடந்தது. அப்போது ரஷ்யாவின் நடவடிக்கைக்கு எதிராக ஐ.நா பாதுகாப்பு கவுன்சிலில் அமெரிக்க ஆதரவுடன் கண்டனத் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. உக்ரைனின் எல்லைகளில் ரஷ்யாவால் கொண்டு வரப்பட எந்த ஒரு மாற்றத்தையும் உலக நாடுகள் அங்கீகரிக்க கூடாது மற்றும் உக்ரைனில் இருந்து ரஷ்யா உடனடியாக படைகளை வாபஸ் பெறுமாறு அந்த தீர்மானத்தில் கோரப்பட்டது.

இந்தக் கண்டனத் தீர்மானத்தை ரஷ்யா வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி நிராகரித்தது. இந்த தீர்மானத்துக்கு ஆதரவாக 10 நாடுகள் வாக்களித்தன. இதற்கான வாக்கெடுப்பில் சீனாவுடன் சேர்ந்து இந்தியாவும் வாக்களிப்பதில் இருந்து விலகியது. இந்தியா உள்ளிட்ட 4 நாடுகள் தீர்மானத்தைப் புறக்கணித்தன.

# கவர்னர் மாளிகையில் நவராத்திரி கொலு

## பார்வையிட பொதுமக்களுக்கு அனுமதி

**சென்னை, அக். 02-**

கவர்னர் மாளிகையில் வைக்கப்பட்டுள்ள நவராத்திரி கொலு, தற்போது 5-ம் தேதி வரை நாள்தோறும் மாலை 3 மணி முதல் மாலை 5 மணி வரை மாணவர்கள் உட்பட பொதுமக்களின் பார்வைக்காக அனுமதிக்கப்படுகிறது.

இது குறித்து கவர்னர் மாளிகை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது,

சென்னை கவர்னர் மாளிகையில் தமிழக கவர்னர் ஆர்.என்.ரவி மற்றும் கவர்னரின் மனைவி லட்சுமி ரவி ஆகியோரால் கடந்த 26-ம் தேதி அன்று திறந்து வைக்கப்பட்ட நவராத்திரி கொலு, பிரபலங்கள் மற்றும் பல்வேறு சமூகத்தினரின் பாராட்டுகளைப் பெற்றுள்ளது. பொதுமக்களின் வேண்டுகோளுக்கிணங்க, கவர்னர் மாளிகையில் வைக்கப்பட்டுள்ள நவராத்திரி கொலு, தற்போது 5-ம் தேதி வரை நாள்தோறும் மாலை 3 மணி முதல் மாலை 5 மணி வரை மாணவர்கள் உட்பட பொதுமக்களின் பார்வைக்காக அனுமதிக்கப்படுகிறது.

விருப்பமுள்ளவர்கள் தங்கள் பெயர், பாலினம், முகவரி, தொடர்பு எண், அடையாளச்சான்று மற்றும் பார்வையிடும் நாள் ஆகியவற்றை navaratrirb22@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி, அதனை உறுதிப்படுத்தி கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். முதன்முறையாக கவர்னர் மாளிகையில் நவராத்திரி கொலு வைக்கப்பட்டு, பொதுமக்கள் பார்வையிட அனுமதிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

முதலில் வருபவர்கள் முதலில் பார்வையிடலாம் என்ற முன்னுரிமையின் அடிப்படையில் நாளொன்றுக்கு அதிகபட்சமாக 80 நபர்கள் வரை பார்வையிடலாம். பார்வையிடும் நேரம் 4 கட்டங்களாக ஒதுக்கீடு செய்யப்படும். ஒரு கட்டத்திற்கு 20 நபர்கள் அனுமதிக்கப்படுவார்கள் மின்னஞ்சல் வாயிலாக உறுதிப்படுத்தப்பட்ட பின்னர், தங்களுக்கான ஒதுக்கீட்டு நேரத்திற்கு 30 நிமிடங்களுக்கு முன்பாக, பார்வையாளர்கள் மின்னஞ்சலில் வழங்கிய அசல் அடையாளச் சான்றுடன் கவர்னர் மாளிகையின் 2-வது நுழைவுவாயிலுக்கு வர வேண்டும் என கூறப்பட்டுள்ளது.

### இந்திய கம்யூனிஸ்ட் மாநில மாநாட்டில் பங்கேற்க

# திருவனந்தபுரம் சென்ற முதல்வர் ஸ்டாலினுக்கு உற்சாக வரவேற்பு

**திருவனந்தபுரம், அக். 02-**

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கேரள மாநில மாநாடு திருவனந்தபுரத்தில் நடைபெறுகிறது. இதில் பங்கேற்க திருவனந்தபுரம் சென்ற முதல்வர் மு.க. ஸ்டாலினுக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் 24-வது தேசிய மாநாடு விஜயவாடாவில் நடைபெற உள்ளது. இதையொட்டி 4 நாள் நடைபெறும் கேரள மாநில மாநாடு திருவனந்தபுரத்தில் நேற்று முன்தினம் தொடங்கியது. மாநாட்டின் 2-வது நாளான நேற்று காலை பிரதிநிதிகள் மாநாடு நடைபெற்றது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய பொதுச் செயலாளர் டி. ராஜா மாநாட்டை தொடங்கி வைத்தார். தொடர்ந்து மாலை 5 மணியளவில் திருவனந்தபுரம் தாகூர் அரங்கத்தில் கூட்டாட்சியும், மத்திய, மாநில உறவுகளும் என்ற தலைப்பில் சிறப்பு கருத்தரங்கு நடைபெறுகிறது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கேரள மாநில செயலாளர் கானம் ராஜேந்திரன் தலைமை தாங்குகிறார்.

இதில் தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின், கேரள முதல்வர் பினராயி விஜயன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தேசிய செயற்குழு உறுப்பினர் அதுல்குமார் அஞ்சான் ஆகியோர் கலந்து கொண்டு பேசுகின்றனர். மாநாட்டில் கலந்து கொள்வதற்காக தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் நேற்று சென்னையிலிருந்து விமானம் மூலம் திருவனந்தபுரம் புறப்பட்டு சென்றார்.

விமான நிலையத்தில் முதல்வர் மு.க. ஸ்டாலினை கேரள மாநில வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் கே.ராஜன் சால்வை அணிவித்து வரவேற்றார். அப்போது கேரள மாநில உணவு, உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் ஜி.ஆர்.அணில், தமிழக தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் மனோ தங்கராஜ் ஆகியோர் உடன் இருந்தனர். அந்த கருத்தரங்கில் கேரள முதல்வர் பினராய் விஜயனும், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினும் சிறப்புரையாற்றுகின்றனர்.

# ஒரே வாரத்தில் 4-வது முறையாக ஏவுகணை சோதனை நடத்திய வடகொரியா



**சியோல், அக். 02-**

வடகொரியா இந்த ஒரே வாரத்தில் 4-வது முறையாக ஏவுகணை சோதனை நடத்தியுள்ளது.

வடகொரியாவின் அச்சுறுத்தலை எதிர்கொள்ள தயாராகும் வகையில் அமெரிக்கா மற்றும் தென்கொரியாவின் கடற்படைகள் கொரிய எல்லையில் கூட்டுப்போர் பயிற்சியில் ஈடுபட்டுள்ளன. இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக தொடர்ந்து, பாலிஸ்டிக் ஏவுகணையை வடகொரியா சோதித்தது.

இந்த பரபரப்பு அடங்குவதற்குள் வடகொரியா நேற்று மீண்டும் ஏவுகணை சோதனையை நடத்தியது. வடகொரியா சனிக்கிழமை அன்று, இரண்டு பாலிஸ்டிக் ஏவுகணைகளை ஏவி பரிசோதனை செய்தது. என்று ஜப்பானின் கடலோர காவல்படை தெரிவித்துள்ளது. அந்த இரண்டு பாலிஸ்டிக் ஏவுகணைகள் ஜப்பானின் பிரத்தியேக பொருளாதார மண்டலங்களுக்கு வெளியே விழுந்ததாகத் தெரிகிறது.

வடகொரிய தலைவர் கிம், மீண்டும் அணுகுண்டு சோதனை நடத்த தயாராகி வருகிறார் என்று தென் கொரிய மற்றும் அமெரிக்க அதிகாரிகளும் பல மாதங்களாக எச்சரித்து வருகின்றனர். இந்நிலையில், வடகொரியா முன்னெப்போதும் இல்லாத வகையில் இந்த ஆண்டு ஏவுகணை சோதனையை தீவிரப் படுத்தியுள்ளது.

இந்த ஆண்டு தொடங்கியதில் இருந்து கடந்த மாதம் வரை 30-க்கும் அதிகமான ஏவுகணைகளை வடகொரியா ஏவி சோதனை நடத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# கடம்பூர் பேரூராட்சியை தி.மு.க. கூட்டணி கைப்பற்றியது

**சென்னை, அக். 02-**

தூத்துக்குடி மாவட்டம் கடம்பூர் பேரூராட்சியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 9 வார்டுகளுக்கு கடந்த வியாழன்று தேர்தல் நடைபெற்றது. இந்த வார்டுகளில் தி.மு.க. சார்பில் 7 பேர், காங்கிரஸ், ம.தி.மு.க. சார்பில் தலா ஒரு வேட்பாளர்களும், பாரதிய ஜனதா கட்சி சார்பில் ஒரு வேட்பாளரும், சுயேட்சைகள் 13 பேரும் என மொத்தம் 23 பேர் போட்டியிட்டனர். மொத்தம் உள்ள 2,470 ஓட்டுகளில் 1,598 ஓட்டுகள் பதிவானது.

அந்த வாக்கு எந்திரங்கள் அனைத்தும் கயத்தாறு வீரபாண்டிய கட்டபொம்மன் பள்ளியில் வைக்கப்பட்டு நேற்று காலை 8 மணிக்கு வாக்கு எண்ணிக்கை தொடங்கியது. இதனையொட்டி அங்கு பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. நேற்று காலை வாக்கு எண்ணிக்கை தொடங்கிய நிலையில் 3-வது வார்டில் தி.மு.க. சார்பில் போட்டியிட்ட கனகமணி 122 வாக்குகளும், 4-வது வார்டில் தி.மு.க. வேட்பாளர் தாழபுஷ்பம் 119 வாக்குகளும் பெற்று வெற்றி பெற்றனர்.

இதேபோல் 5-வது வார்டில் தி.மு.க. வேட்பாளர் தமிழரசி 158 வாக்குகளும், 6-வது வார்டு தி.மு.க வேட்பாளர் சரஸ்வதி 139 வாக்குகளும், 8-வது வார்டில் தி.மு.க. வேட்பாளர் செல்லத்துரை 132 வாக்குகளும், 9-வது வார்டில் தி.மு.க. வேட்பாளர் பேராட்சி 101 வாக்குகளும் பெற்று வெற்றி பெற்றனர். 7-வது வார்டில் காங்கிரஸ் வேட்பாளர் மாரீஸ்வரி 102 வாக்குகளும், 10-வது வார்டில் ம.தி.மு.க. வேட்பாளர் ரெங்கசாமி 123 வாக்குகளும், 12-வது வார்டில் சுயேட்சை வேட்பாளர் முத்துமாரி 92 வாக்குகளும் பெற்று வெற்றி பெற்றனர்.

கடம்பூர் பேரூராட்சியில் மொத்தம் 12 வார்டுகள் உள்ளன. இதில் ஏற்கனவே 1,2,11-வது வார்டுகளில் சுயேட்சை வேட்பாளர்களான நாகராஜா, ராஜேஸ்வரி, சிவக்குமார் ஆகியோர் போட்டியின்றி வெற்றி பெற்றனர். சமீபத்தில் சுயேட்சை கவுன்சிலரான நாகராஜா தனது ஆதரவாளர்களுடன் தி.மு.க.வில் தன்னை இணைத்து கொண்டார். இதனால் கடம்பூர் பேரூராட்சியை தி.மு.க. கைப்பற்றி உள்ளது.

கடந்த 1964-ம் ஆண்டுக்கு பிறகு கடம்பூர் பேரூராட்சியில் தேர்தலே நடக்கவில்லை. இதுவரை போட்டியின்றி கவுன்சிலர்கள் தேர்வு செய்யப்பட்டு வந்தனர். அதில் நாகராஜா அல்லது அவரது மனைவி ராஜேஸ்வரி ஆகியோரில் யாரேனும் ஒருவரே சேர்மனாக பதவி வகித்து வந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த முறையும் நாகராஜா தி.மு.க.வில் இணைந்து விட்டதால் அவருக்கே சேர்மன் பதவி கிடைப்பதற்கான வாய்ப்பு அதிகமாக இருப்பதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இவர் கயத்தாறு யூனியன் சேர்மனும், அ.ம.மு.க. நிர்வாகியுமான மாணிக்க ராஜாவின் உடன்பிறந்த சகோதரர் ஆவார்.

# அயல்நாட்டு மருத்துவ மாணவர்களுக்கு பயிற்சி ஆரம்பிக்க நடவடிக்கை எடுங்கள்

## ஓ.பன்னீர்செல்வம் வலியுறுத்தல்

**சென்னை, அக். 02-**

அயல்நாட்டு மருத்துவ மாணவர்களுக்கு மருத்துவப் பயிற்சியை உடனடியாக ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முதல்வருக்கு ஓ. பன்னீர் செல்வம் கோரிக்கை விடுத்துள்ளார்.



இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

தேசிய மருத்துவ ஆணையத்தின் வழிகாட்டுதல்படி அயல்நாட்டு மருத்துவப் பட்டதாரிகளுக்கான பயிற்சி கால உதவித்தொகை குறித்த விவரங்களை அனுப்புமாறு அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர்களும் மருத்துவக் கல்லூரி இயக்ககத்தால் கேட்டுக் கொள்ளப் பட்டார்கள். மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரும் இது தொடர்பாக விரிவான =பேட்டி ஒன்றினை 29-07-2022 அன்று அளித்திருந்தார்.

இந்தப் பேட்டி அளித்து 2 மாதங்கள் கடந்துள்ள நிலையில், இந்தக் கோப்பிற்கான ஒப்புதல் இன்னும் அளிக்கப்படவில்லை என்றும், இதற்கான கோப்பு நிதித்துறையில் நிலுவையில் உள்ளதாகவும், பிற மாநிலங்களில் உள்ள அயல்நாட்டு மருத்துவ மாணவர்கள் எல்லாம் தற்போது பயிற்சியில் ஈடுபட்டு வருகின்ற நிலையில் தமிழகத்தில் மட்டும் மேற்படி பயிற்சி கால தாமதப்படுத்தப்படுவது தங்களுக்கு மன வருத்தத்தை அளிப்பதாகவும் மாணவ, மாணவியர் தெரிவிக்கின்றனர்.

அயல் நாடுகளில் மருத்துவம் பயின்று பயிற்சிக்காக காத்திருப்பவர்களில் பெரும்பாலானோர் ஏழை எளிய மாணவ, மாணவியர்கள் என்பதையும், அவர்களின் மருத்துவப் படிப்பு ஏற்கெனவே காலதாமதமாகி இருப்பதையும் கருத்தில் கொண்டு முதல்வர் இதில் உடனடியாகத் தலையிட்டு, அவர்களுக்கான மருத்துவப் பயிற்சியை உடனடியாக ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் அந்த அறிக்கையில் கூறியுள்ளார்.

# எந்த தடுப்பூசிக்கும் கட்டுப்படாத புதிய வைரஸ் கோஸ்டா -2 கண்டுபிடிப்பு

**ஜெனீவா, அக். 02-**

ரஷ்ய வவ்வால்களில் காணப்படும் கோஸ்டா-2 என்ற புதிய வைரஸ் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இது தற்போதுள்ள எந்த தடுப்பூசிக்கும் கட்டுப்படாது என்று விஞ்ஞானிகள் எச்சரித்து உள்ளனர்.

கடந்த 2 ஆண்டுகளாக உலகை ஆட்டிப் படைத்த கொரோனா வைரஸ் பெருந்தொற்று, கிட்டத்தட்ட உலகளவில் கட்டுப்படுத்தப் பட்டு விட்டது.



இதனை உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரஸ் ஜிப்ரியேசிஸ் மகிழ்ச்சியுடன் அறிவித்தார். இந்த நிலையில் கொரோனாவை போன்றே மனிதர்களை அச்சுறுத்தக் கூடிய புதிய வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டு இருக்கிறது. அதற்கு கோஸ்டா-2 என்று பெயரிடப்பட்டு உள்ளது. ரஷ்ய வவ்வால்களில் காணப்படும் இந்த வைரஸ், தற்போதுள்ள எந்த தடுப்பூசிக்கும் கட்டுப்படாது என்று விஞ்ஞானிகள் எச்சரித்து உள்ளனர். இதனால் புதிய பீதி ஏற்பட்டுள்ளது.

# தேர்தலுக்கு முன்பாக அ.தி.மு.க.வில் அனைவரும் ஒன்றிணைவர்: சசிகலா

**சென்னை, அக். 02-**

தேர்தலுக்கு முன்பாக அ.தி.மு.க.வில் அனைவரும் ஒன்றிணையும் சூழல் வரும் என சசிகலா தெரிவித்துள்ளார்.



சென்னை தி.நகர் இல்லத்தில் சசிகலா நேற்று செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது,

இந்தியாவில் உள்ள மாநிலங்களில் பல அரசுகள் உள்ளது. மத்தியில் ஒரே ஒரு ஆட்சி தான் இருக்க முடியும். ஒவ்வொரு மாநிலத்தில் வசித்து வருபவர்களும் அரசுக்கு வரி கட்டுகிறார்கள். இதனால் நமக்கு தேவையானவற்றை இங்குள்ள மாநில அரசு 100 சதவீதம் கேட்டுப் பெற உரிமை உள்ளது.

மக்கள் நம்மை நம்பித் தான் ஓட்டு போட்டு இருக்கிறார்கள். இதனால் மக்களுக்கு நல்லது செய்ய வேண்டும். மத்திய அரசும், மாநில அரசும் சண்டை போட்டுக் கொண்டே இருக்கக் கூடாது. சண்டை போடுவதற்காக மக்கள் ஓட்டு போடவில்லை. தமிழகத்தில் சட்டம், ஒழுங்கு சீரழிந்து விட்டது. தமிழ்நாடு போலீஸ் துறையில் நல்ல அதிகாரிகள் உள்ளனர். அவர்களை சரியாக பயன்படுத்த வேண்டும். மேலும், அ.தி.மு.க.வில் யாரையும் நான் பிரித்து பார்க்கவில்லை. அனைவரும் ஒன்றிணைய வேண்டும். தேர்தலுக்கு முன்பாக அ.தி.மு.க.வில் அனைவரும் ஒன்றிணையும் சூழல் வரும். இவ்வாறு அவர் கூறினார்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

### எலான் மஸ்க் நிறுவனம் சார்பில்

# மனித வடிவிலான ரோபோ அறிமுகம்

**கலிபோர்னியா, அக். 02-**

எலான் மஸ்க்கை தலைவராக கொண்ட பிரபல டெஸ்லா நிறுவனம் சார்பில் மனித வடிவிலான அதி நவீன ரோபோ அறிமுகம் செய்யப்பட்டு உள்ளது.

கலிபோர்னியாவில் நடந்த ஒரு கண்காட்சியில் எலான் மஸ்க் இந்த ரோபோவை அறிமுகப்படுத்தினார். அப்போது அந்த ரோபோ பார்வையாளர்களை பார்த்து கைகளை அசைத்தது.



இந்த ரோபோவுக்கு ஆப்டிமஸ் என பெயரிடப் பட்டு உள்ளது. இந்திய மதிப்பில் இதன் விலை ரூ. 16 லட்சம் ஆகும். இதன் அறிமுக நிகழ்ச்சியில் பேசிய எலான் மஸ்க், மலிவான விலையில் அதிக திறன் கொண்ட ரோபோ தயாரிப்பது தான் எனது கனவு. அது இப்போது நனவாகி இருக்கிறது என்று தெரிவித்தார்.

# நிலவுக்கு மீண்டும் ராக்கெட்டை நவம்பரில் அனுப்ப நாசா திட்டம்

**வாஷிங்டன், அக். 02-**

நிலவுக்கு ராக்கெட் அனுப்பும் திட்டம் புயலால் தாமதமாகியுள்ள நிலையில், நவம்பரில் மீண்டும் ஏவப்படும் என நாசா தெரிவித்துள்ளது.

அமெரிக்க விண்வெளி ஆய்வு மையமான நாசா 1969-ல் முதன்முறையாக மனிதர்களை நிலவுக்கு அனுப்பி சாதனை படைத்தது. தொடர்ந்து பல்வேறு விண்வெளி ஆராய்ச்சில் ஈடுபட்டு வரும் நாசா, தற்போது மனிதர்களை மீண்டும் நிலவுக்கு அனுப்புவதற்கான ஆர்டெமிஸ் திட்டத்தை துவங்கியுள்ளது. 2025-க்குள் மனிதர்களை நிலவுக்கு அனுப்ப நாசா திட்டமிட்டுள்ளது.

இதன் முதல்கட்ட சோதனை முயற்சியாக, ஆர்டெமிஸ் - 1 ராக்கெட்டை நிலவு குறித்த ஆராய்ச்சிக்காக அனுப்ப உள்ளது. இந்த ராக்கெட் விண்வெளி ஆராய்ச்சிக்கான ஓரியன் விண்கலத்தை சுமந்து செல்கிறது. புளோரிடா மாகாணத்தில் உள்ள கென்னடி விண்வெளி ஆய்வு மையத்திலிருந்து ஆர்டெமிஸ் - 1 ராக்கெட் ஏவப்படுவதாக இருந்தது. ஆனால் தொழில்நுட்ப கோளாறு காரணமாக இரண்டு முறை ராக்கெட் ஏவுவது ஒத்திவைக்கப்பட்டது.

இதையடுத்து, ராக்கெட் மீண்டும் கடந்த 27-ம் தேதி ஏவப்படும் என்று அறிவிக்கப்பட்டு இருந்த நிலையில், புயல் காரணமாக ராக்கெட் ஏவுவது ஒத்திவைக்கப்பட்டது. இதனை தொடர்ந்து அக்டோபரில் இந்த ராக்கெட்டை மீண்டும் ஏவ நாசா திட்டமிட்டு இருந்தது. அதை தொடர்ந்து புயலின் பாதிப்பு மிகவும் அதிகமாக இருந்த காரணத்தினால், ஏவு தளத்தில் இருந்த ராக்கெட் கடந்த செவ்வாயன்று கென்னடி விண்வெளி மையத்தில் உள்ள சேமிப்பு பகுதிக்கு கொண்டு செல்லப்பட்டது.

இந்த நிலையில் புயல் புளோரிடாவின் சில பகுதிகளை அழித்தது, ஆனால் ராக்கெட்டுக்கு எந்த சேதமும் ஏற்படவில்லை என்று நாசா தெரிவித்துள்ளது. 98 மீட்டர் உயரம் (320 அடி) ராக்கெட்டை மீண்டும் அதன் ஏவுதளத்திற்கு கொண்டு செல்வதற்கும், புறப்படுவதற்கு அதை தயார்படுத்துவதற்கும் பல நாட்கள் ஆகும். இதனால், ராக்கெட்டை நவம்பரில் ஏவ நாசா திட்டமிட்டு உள்ளது.

# பெங்களூரில் கால்பந்தாட்ட வீரர்களுக்கான தேர்வு என்ஜோகோ சார்பில் ஏற்பாடு

**ஓசூர், அக் 02-**

என்ஜோகோ தனது ரெசிடென்ஷியல் அகாடமிகளுக்கான செலெக்சன் டிரையலுக்கு(கால்பந்து பயிற்சியுடன் கூடிய உறைவிடப் பள்ளி) ஏற்பாடு செய்துள்ளது. BBFSஅரங்கம், HAL, பெங்களூரில், சனிக்கிழமை, 1 அக்டோபர் 2022 அன்றுநடத்துகிறது.என்ஜோகோவின் நோக்கம் என்பது நாடு முழுவதும் கால்பந்தாட்டத்தை கொண்டுச்செல்வதே ஆகும்.

டிரெண்டிங்கான புது முயற்சிகள் மூலம் முன்னெடுப்புகளை எடுத்து வருகிறோம். (100 டிரையல்ஸ், 100 நகரங்கள், எல்லையற்றகனவுகள்) என்ஜோகோ டெக்னிக்கல் டீம், கால்பந்தில் பிரபலமாக உள்ள 100 - க்கும் மேற்பட்ட நகரங்களை தேர்ந்தெடுத்துள்ளது.

அதில், BBFS ரெசிடென்ஷியல் அகாடமிக்குதகுதியான வீரர்களை தேர்வு செய்ய உள்ளனர். இது வெறும் ஆரம்பம் தான்.எங்களது ஆப்ரேஷன் வளர, வளர தொடர்ந்து பயிற்சி மையங்கள் அதிகரிக்கும். இந்தியாவில் உள்ள ஒவ்வொரு மாவட்டங்களையும் கவர் செய்யும் வகையில்திட்டம் உள்ளது என்று என்ஜோகோ மற்றும் பைச்சுங் பூட்டியா கால்பந்து பள்ளிகளின் இணைநிறுவனர் மற்றும் சி.இ.ஓ. கிஷோர் டைட் கூறினார்.

# தமிழகத்தில் அக்.11-ல் சமூக நல்லிணக்க மனித சங்கிலி

## 10 கட்சிகள் கூட்டாக அறிவிப்பு

**சென்னை, அக். 02-**

தமிழகத்தில் சமூக நல்லிணக்க மனித சங்கிலி இம்மாதம் 11-ம் தேதி நடைபெறும் என்று 10 கட்சிகள் மற்றும் 13 அமைப்புகள் கூட்டாக அறிவித்துள்ளன. காந்தியடிகள் பிறந்த நாளான அக்டோபர் 2-ம் தேதி (நாளை) மார்க்சிஸ்ட், சிபிஐ, விசிக கட்சிகளின் சார்பில் சமூக நல்லிணக்க மனிதச் சங்கிலி நடத்துவதாக அறிவிக்கப்பட்டது. இதற்கு நாம் தமிழர் உள்ளிட்ட பல்வேறு அரசியல் கட்சிகளும், மக்கள் அமைப்புகளும் ஆதரவு தெரிவித்தன. இதனிடையே, பாப்புலர் ஃப்ரன்ட் ஆஃப் இந்தியா அமைப்புக்கு தடை காரணமாக ஆர்எஸ்எஸ் பேரணி மற்றும் சமூக நல்லிணக்க மனித சங்கிலி ஆகியவற்றுக்கு காவல் துறை அனுமதி மறுத்தது.

இந்நிலையில், அக்.11-ம் தேதி சமூக நல்லிணக்க மனித சங்கிலி நடைபெறும் என்று மார்க்சிஸ்ட், சிபிஐ, விசிக, மதிமுக, காங்கிரஸ் உள்ளிட்ட 10-க்கு மேற்பட்ட கட்சிகள், 13-க்கு மேற்பட்ட அமைப்புகள் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான அறிக்கையில், "மாநிலத்தில் நிலவும் சட்டம் - ஒழுங்கு நிலவரம் குறித்தும், அக்டோபர் 2 அன்று அனுமதி வழங்க இயலாமைக்குரிய காரணங்கள் குறித்தும் காவல் துறையினர் விளக்கியதோடு, மனித சங்கிலி நிகழ்ச்சியைத் தள்ளி வைக்கும்படி கேட்டுக் கொண்டதன் அடிப்படையில், ஆதரவு நல்கிய அனைத்துக் கட்சிகள் மற்றும் மக்கள் இயக்கங்களின் தலைவர்களோடு தொலைபேசியின் ஊடாகக் கலந்து பேசியதன் அடிப்படையில் சமூக நல்லிணக்க மனித சங்கிலி அறப்போர் எதிர்வரும் அக்டோபர் 11-ம் தேதி மாலை 4 மணிக்கு தமிழ்நாடு முழுவதும் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். மதத்தின் அடிப்படையில் பகைமையை ஏற்படுத்தி, அமைதியை சீர்குலைக்க முயற்சிக்கும் பிரிவினைவாதிகளை இங்கு ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம் என்று மக்களிடையே தொடர்ந்து பரப்புரை மேற்கொள்ளவும், சமூக நல்லிணக்கத்தைப் பாதுகாக்கவுமான இந்த மனித சங்கிலி நிகழ்வில் அனைத்து ஜனநாயக சக்திகளும், பொதுமக்களும் பங்கேற்று அப்போராட்டத்தை வெற்றிபெற வேண்டுமென அழைப்பு விடுக்கிறோம்" என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இதனிடையே, சமய நல்லிணக்க மனித சங்கிலிக்கு அனுமதி மறுத்த உத்தரவை ரத்து செய்யக் கோரி சிபிஎம், சிபிஐ மற்றும் விசிக சார்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இனி ஆன்-லைன் விவரங்களை சேமிக்க இயலாது:

# டெபிட், கிரெடிட் கார்டுகளுக்கான புதிய விதிமுறைகள் அமலானது

**புதுடெல்லி, அக். 02-**




டெபிட் கார்டுகள், கிரெடிட் கார்டுகள், பாயிண்ட் ஆப் சேல் கருவிகளுக்கு ரிசர்வ் வங்கி அறிவித்துள்ள புதிய விதிமுறைகள் நடைமுறைக்கு வந்துள்ளது.

ரிசர்வ் வங்கி அறிவித்துள்ள இந்த டோக்கனைசேஷன் எனப்படும் புதிய தரவுகள் சேர்ப்பு நடைமுறைக்கு ஏற்கெனவே பெரிய வணிகர்கள் ஒப்புதல் அளித்திருந்தனர்.

டோக்கனைசேஷன் செய்வதற்கான காலக்கெடு செப்டம்பர் 30-ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டிருந்தது. ஆன்லைன் பரிவர்த்தனைக்கு உதவும் கிரெடிட் மற்றும் டெபிட் கார்டுகள் ரிசர்வ் வங்கியின் கார்ட் ஆன் ஃபைல் முறையிலான டோக்கன்சேஷனை மாற்றப்பட்டுள்ளன. தற்போது இந்த பணி நிறைவடைந்துவிட்டால் புதிய டோக்கனைசேஷன் விதிமுறைகள் நேற்று முதல் அமலுக்கு வந்தன.

இந்த புதிய விதிமுறைகளின்படி இனி ஆன்லைன் பரிவர்த்தனையின் போது நமது கிரெடிட் மற்றும் டெபிட் கார்டின் முன்னோடியான விவரங்களை எந்த நிறுவனமும் எடுக்கமுடியாது, சேமிக்கவும் முடியாது. டோக்கனைசேஷன் என்பது நமது கார்டுகளின் உண்மையான விவரங்களை டோக்கன் எனப்படும் மாற்று குறியீட்டுடன் மாற்றியமைப்பதாகும். மொபைல் போன்கள், டேப்ளட்கள், மடிக்கணினிகள், டெக்ஸ்டாப்கள், வாட்ச்கள், கையில் அணியும் பேண்டுகள், இன்டர்நெட் ஆப் திங்க்ஸ் போன்ற சாதனங்களிலும் டோக்கனைசேஷன் செய்யமுடியும்.

சமய நல்லிணக்க மனித சங்கிலிக்கு அனுமதி மறுப்பு:

# உத்தரவை ரத்து செய்யக்கோரி ஐகோர்ட்டில் கம்யூ., விசிக மனு

**சென்னை, அக். 02-**

சமய நல்லிணக்க மனித சங்கிலிக்கு அனுமதி மறுத்த உத்தரவை ரத்து செய்யக் கோரி சிபிஎம், சிபிஐ மற்றும் விசிக சார்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சென்னை உயர் நீதிமன்றத்தில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பாலகிருஷ்ணன், விடுதலை சிறுத்தைகள் தலைவர் திருமாவளவன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயலாளர் முத்தரசன் ஆகியோர் தாக்கல் செய்த மனுவில், "காந்தி ஜெயந்தியை முன்னிட்டு அக்டோபர் 2-ம் தேதி தமிழ்நாடு முழுவதும் பல்வேறு இடங்களில் மதச்சார்பின்மையை வலியுறுத்தும் வகையில் சமய நல்லிணக்க மனித சங்கிலி நடத்த அனுமதி கேட்டு கடந்த 29ம் தேதி காவல்துறையிடம் விண்ணப்பிக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை தீவிரமாக மேற்கொண்டு வந்த நிலையில் மனித சங்கிலி நிகழ்ச்சிக்கு அனுமதி மறுத்து கடந்த 29-ம் தேதி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

முன்கூட்டியே எந்த நோட்டீசும் அனுப்பாமல், பாப்புலர் ஃப்ரன்ட் ஆஃப் இந்தியா அமைப்புக்கு தடை விதிக்கப்பட்டதால் சட்டம் ஒழுங்கு பிரச்சினை ஏற்படும் என்றும், அதே நாளில் ஆர்எஸ்எஸ் அணிவகுப்பு நடத்த இருப்பதாகவும் கூறி, எங்களது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டுள்ளது.

மதவாத அமைப்பான ஆர்எஸ்எஸ் அமைப்பையும், எங்களையும் ஒரே மாதிரியாக பாவிக்க முடியாது.எனவே சமய நல்லிணக்க மனித சங்கிலிக்கு அனுமதி மறுத்த உத்தரவை ரத்து செய்து உத்தரவிட வேண்டும்" என்று அந்த மனுவில் கோரப்பட்டுள்ளது. இந்த வழக்கு விரைவில் விசாரணைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# வர்த்தக கியாஸ் சிலிண்டர் விலை 36 ரூபாய் குறைந்தது

**புதுடெல்லி, அக். 02-**

வர்த்தக கியாஸ் சிலிண்டரின் விலை ரூ.36 குறைந்துள்ளது. ரூ.2045-ல் இருந்து தற்போது ரூ.2009 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

வீட்டு உபயோகத்துக்கு பயன்படுத்தப்படும் சமையல் எரிவாயு சிலிண்டர் மற்றும் வர்த்தக பயன்பாட்டுக்கான கியாஸ் சிலிண்டர் ஆகியவற்றின் விலையை எண்ணெய் நிறுவனங்கள் நிர்ணயித்து வருகின்றன. சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விலையில் ஏற்படும் மாற்றங்கள் அடிப்படையில் அவற்றின் விலை நிர்ணயம் செய்யப்படுகின்றன.

ரஷியா-உக்ரைன் போர் காரணமாக கச்சா எண்ணெய் விலை அதிகரித்து பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு சிலிண்டர் ஆகியவற்றின் விலை பன்மடங்கு உயர்ந்தது. தற்போது கச்சா எண்ணெய் விலை குறைய தொடங்கியதையடுத்து அவற்றில் இருந்து தயாரிக்கப்படும் பொருட்களின் விலையும் குறைய தொடங்கியுள்ளது.

இந்த நிலையில் வர்த்தக பயன்பாட்டுக்கான கியாஸ் சிலிண்டரின் விலை குறைந்துள்ளது. 19 கிலோ எடையுள்ள சிலிண்டரின் விலையை எண்ணெய் நிறுவனங்கள் ரூ.25.50 குறைத்துள்ளன.

சென்னையில் வர்த்தக சிலிண்டரின் விலை ரூ.36 குறைந்துள்ளது. ரூ.2045-ல் இருந்து தற்போது ரூ.2009 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. டெல்லியில் ரூ.1885-க்கு விற்பனை இருந்த வணிக பயன்பாட்டுக்கான சிலிண்டர் ரூ.1859 ஆக விற்பனை செய்யப்படுகிறது. கொல்கத்தாவில் ரூ.1959 ஆகவும், மும்பையில் ரூ.1811.50 ஆகவும் விலை இருக்கிறது.

கடந்த மே மாதம் 19-ந்தேதிக்கு பிறகு வணிக பயன்பாட்டுக்கான சிலிண்டர் விலை 6-வது முறையாக குறைக்கப்பட்டுள்ளது.

அதே நேரத்தில் வீட்டு உபயோகத்திற்காக பயன்படுத்தப்படும் சமையல் எரிவாயு சிலிண்டரின் விலையில் மாற்றம் எதுவுமில்லை.

ரூ.1145 கோடி மதிப்பீட்டில்

# கங்கையை தூய்மைபடுத்த 14 திட்டங்களுக்கு அனுமதி

**புதுடெல்லி, அக். 02-**

தேசிய தூய்மை கங்கா திட்டத்திற்கு ரூ.1145 கோடி மதிப்பீட்டில் 14 திட்டங்களுக்கு மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது. தூய்மை கங்கா தேசிய இயக்கத்தின் 45-வது நிர்வாக குழு கூட்டம் அதன் தலைமை இயக்குநர் ஜி.அசோக் குமார் தலைமையில் டெல்லியில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் ரூ.1145 கோடி மதிப்பீட்டில் கங்கை நதியை தூய்மைப்படுத்தும் வகையில் வடிகால் மேலாண்மை, தொழில்துறை மாசு கட்டுப்பாடு, பல்லுயிர் பாதுகாப்பு மரம் நடுதல், ஆற்றுப்படுகை மேம்பாடு மற்றும் பரவலாக்கப்பட்ட கழிவுநீர் சுத்திகரிப்பு உள்பட 14 திட்டங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டது.

உத்தராகண்ட், உத்தரப்பிரதேசம், பிகார், ஜார்க்கண்ட் மற்றும் மேற்கு வங்கம் ஆகிய ஐந்து முக்கிய கங்கை நதிப் படுக்கையில் உள்ள மாநிலங்களில் கழிவுநீர் மேலாண்மைக்கான எட்டுத் திட்டங்கள் இதில் அடங்கும்.ரூ. 308.09 கோடி மதிப்பில் நான்கு வடிகால் மேலாண்மை திட்டங்களை உத்தரப்பிரதேசத்தில் மேற்கொள்ள இந்த கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

அதேபோல அம்மாநிலத்தின் நான்கு மாவட்டங்களில் நான்கு பல்லுயிர் பூங்காக்களை அமைக்கவும் கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டதாக மத்திய ஜல்சக்தி அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காங்கிரஸ் தலைவர் தேர்தல்:

# ராஜ்யசபா எம்.பி. பதவியை ராஜினாமா செய்தார் மல்லிகார்ஜூன கார்கே

**புதுடெல்லி, அக். 02-**



காங்கிரஸ் தலைவர் தேர்தலில் போட்டியிட நேற்று முன்தினம் வேட்புமனு தாக்கல் செய்த நிலையில், மூத்த தலைவர் மல்லிகார்ஜூன கார்கே நேற்று மாநிலங்களவை எதிர்க்கட்சித் தலைவர் பதவியை ராஜினாமா செய்தார்.

அண்மையில் உதய்பூரில் நடந்த காங்கிரஸ் கட்சியின் சிந்தனைக் கூட்டத்தில் ஒரு நபருக்கு ஒரு பதவி என்ற கொள்கையைப் பின்பற்றுவது என்று முடிவு எட்டப்பட்டது. அதன்படி, தான் வகித்து வந்த மாநிலங்களவை எதிர்க்கட்சித் தலைவர் பதவியை கார்கே ராஜினாமா செய்துள்ளதாகத் தெரிகிறது. இது தொடர்பாக கார்கே நேற்று முன்தினம் இரவே காங்கிரஸ் இடைக்காலத் தலைவர் சோனியா காந்திக்கு கடிதம் எழுதியுள்ளார் என்ற தகவலும் தற்போது வெளியாகியுள்ளது.

இதனையடுத்து காங்கிரஸ் நாடாளுமன்றக் குழு தலைவரான சோனியா காந்தி, மாநிலங்களவை எதிர்க்கட்சிப் பதவிக்கு வேறு ஒருவரை நியமனம் செய்துவிட்டு அதனை மாநிலங்களவைத் தலைவருக்கு தெரிவிப்பார்.

கடந்த 25 ஆண்டுகளாக காங்கிரஸ் கட்சிக்கு காந்தி குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமே தலைவராக இருக்கும் சூழலில் கார்கேவை அடுத்த தலைவராக்க காந்தி குடும்பத்தில் முழு ஆதரவு கிடைத்துள்ளது. ஆதலால் மல்லிகார்ஜூன கார்கே காங்கிரஸ் கட்சியின் புதிய தலைவராகத் தேர்வாகும் வாய்ப்பு கிட்டத்தட்ட உறுதியாகியுள்ளது.

# ஆம்னி பஸ்களில் புதிய கட்டணங்கள் அறிவிப்பு

**சென்னை, அக். 02-**

ஆம்னி பஸ் உரிமையாளர்கள் புதிய கட்டணத்தை நிர்ணயித்து அறிவித்துள்ளனர். 6 வகையாக வசதிகளை பிரித்து கட்டணம் வகைபடுத்தப்பட்டுள்ளது.

ஆம்னி பஸ்களில் பண்டிகை காலங்களில் தாறுமாறாக கட்டணம் வசூலிப்பதாக தொடர்ந்து புகார்கள் வந்தன. இதனால் பொதுமக்கள் பாதிக்கப்படுவதால் போக்குவரத்து துறை அமைச்சர் சிவசங்கர் நேரடியாக தலையிட்டு ஆம்னி பஸ் உரிமைாளர்கள் சங்கத்திடம் பேச்சுவார்த்தை நடத்தினார்.

பண்டிகை காலங்களில் கட்டணத்தை திடீரென உயர்த்துவதை தவிர்க்க வேண்டும். நிலையான கட்டணத்தை பொதுமக்கள் பாதிக்காத வகையில் நிர்ணயிக்குமாறு வலியுறுத்தினார். அதன் அடிப்படையில் ஆம்னி பஸ் உரிமையாளர்கள் புதிய கட்டணத்தை நிர்ணயித்து அறிவித்துள்ளனர். 6 வகையாக வசதிகளை பிரித்து கட்டணம் வகைபடுத்தப்பட்டுள்ளது.

ஏ.சி. இல்லாத இருக்கை, ஏ.சி. இல்லாத படுக்கை வசதி, ஏ.சி.யுடன் இருக்கை வசதி, ஏ.சி.யுடன் படுக்கை வசதி மற்றும் வால்வோ பஸ் இருக்கை, வால்வோ பஸ் படுக்கை என கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 10 முதல் 20 சதவீதம் வரை கட்டணம் குறைத்து இருப்பதாக தமிழ்நாடு ஆம்னி பஸ் உரிமையாளர்கள் சங்க தலைவர் அப்சல், பொருளாளர் மாறன் ஆகியோர் தெரிவித்தனர். இந்த கட்டணத்திற்கு மேல் வசூலிக்க கூடாது என அனைத்து ஆம்னி பஸ் ஆபரேட்டர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

புதிய கட்டணம் குறித்து பொதுமக்கள் சிலர் கூறுகையில், "சாதாரண மக்கள் ஆம்னி பஸ்களில் பயணம் செய்ய முடியாத நிலையில் கட்டணம் உள்ளது. சாதாரண இருக்கை கட்டணமே ரூ.1,800 முதல் ரூ.2,500 வரை உள்ளது. நீண்ட தூரம் செல்லக்கூடிய மக்கள் ஆம்னி பஸ்களை நாடமாட்டார்கள்.

விமான கட்டணத்திற்கு இணையாக ஆம்னி பஸ்களின் கட்டணம் உள்ளது" என்று அதிருப்தியுடன் தெரிவித்தனர்.

தவறான கருத்துகளை பரப்புவதாக புகார்:

# நடிகர் சங்கத்தில் இருந்து கே.பாக்யராஜ் நீக்கம்

**சென்னை, அக். 02-**

நடிகர் சங்க தேர்தல் குறித்து உண்மைக்குப் புறம்பான கருத்துக்களைப் பரப்பி வருவதாக கூறி நடிகர் சங்கத்தில் இருந்து கே.பாக்யராஜ், உதயா ஆகியோர் நீக்கப்பட்டுள்ளனர்.

தென்னிந்திய நடிகர் சங்கத்திற்கு கடந்த 2019 ஜூன் மாதம் தேர்தல் நடைபெற்றது. இதில் நாசர் தலைமையிலான பாண்டவர் அணியும், கே.பாக்யராஜ் தலைமையிலான சங்கரதாஸ் அணியும் போட்டியிட்டன. இந்த தேர்தலில் பதிவான வாக்கு எண்ணிக்கையை நடத்தக் கூடாது என சென்னை ஐகோர்ட் தடை விதித்தது. இதனால் இரண்டரை ஆண்டுகளாக நடிகர் சங்க தேர்தலில் பதிவான வாக்குகள் எண்ணப்படாமல் இருந்தன.

இதனையடுத்து கடந்த மார்ச் 20-ம் தேதி நடிகர் சங்கத்தின் வாக்குகள் எண்ணப்பட்டதில் நடிகர் நாசர் தலைமையிலான பாண்டவர் அணி வெற்றி பெற்று நிர்வாகிகள் பதவியேற்றுக் கொண்டனர். இந்த நிலையில் கடந்த ஆகஸ்ட் மாதம் நடிகர் சங்கத்தின் சார்பில் கே. பாக்யராஜூக்கு ஷோகாஸ் நோட்டீஸ் அனுப்பட்டது. அதில் புதிதாக பொறுப்பேற்றுக் கொண்ட நிர்வாகம் மற்றும் நடிகர் சங்க தேர்தல் குறித்து உண்மைக்குப் புறம்பான கருத்துகளை நடிகர் சங்க உறுப்பினர்களுக்கு கடிதம் மூலம் பரப்பி வருவதாக கூறப்பட்டிருந்தது.

இதனால் கே.பாக்யராஜ் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என நடிகர் சங்க உறுப்பினர்கள் கடிதம் அனுப்பி வருவதாக அந்த நோட்டீசில் தெரிவிக்கப்பட்டிருந்தது. மேலும், ஏன் உங்களை நடிகர் சங்கத்தில் இருந்து நீக்கக்கூடாது என விளக்கம் கேட்டு நடிகர் சங்கத்தின் சார்பில் பாக்யராஜ் மற்றும் ஏ.எல்.உதயா ஆகியோருக்கு கடிதம் அனுப்பப்பட்டது. இந்த நிலையில், தென்னிந்திய நடிகர் சங்க விதி 13-ன் படி சங்கத்திற்கு எதிராக உறுப்பினர்கள் யாரும் செய்தி வாயிலாகவே அல்லது உறுப்பினர்களுக்கு கடிதம் வாயிலாகவோ கருத்து சொல்லக் கூடாது என உள்ளதால் நடிகர் சங்கத்தில் இருந்து கே.பாக்யராஜூம், உதயாவும் ஆறு மாத காலத்திற்கு தென்னிந்திய நடிகர் சங்கத்தில் இருந்து நீக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த சம்பவம் தமிழ் சினிமா வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# இந்தியா முழுவதும் 2023 இறுதிக்குள் 5ஜி சேவை

## முகேஷ் அம்பானி உறுதி



**புதுடெல்லி, அக். 02-**

இந்தியா முழுவதும் டிசம்பர் 2023க்குள் 5ஜி சேவை வழங்கப்படும் என்று முகேஷ் அம்பானி உறுதிப்பட தெரிவித்துள்ளார்.

டெல்லி பிரகதி மைதானத்தில் நடந்த 6-வது இந்திய கைப்பேசி மாநாட்டை பிரதமர் மோடி நேற்று தொடங்கி வைத்தார். அப்போது, அதிவேக அலைக்கற்றை திறன் கொண்ட ஐந்தாம் தலைமுறை என்கிற 5ஜி சேவையை பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார். முன்னதாக, மாநாட்டில் உலக பணக்காரர்களில் ஒருவருமான முகேஷ் அம்பானி உரையாற்றினார். அப்போது அவர், "தனது தொலைத்தொடர்பு நிறுவனமான ரிலையன்ஸ் ஜியோ டிசம்பர் 2023க்குள் நாடு முழுவதும் 5ஜி சேவையை அறிமுகப்படுத்தும். ஜியோ இந்த மாதத்திற்குள் 5G சேவைகளை வழங்குவதற்கு வேகமாக நடவடிக்கை எடுத்து வருகிறது. மேலும், ஜியோ மலிவு விலையில் 5ஜி சேவைகளை அறிமுகப்படுத்தும். டிசம்பர் 2023க்குள் நாட்டின் ஒவ்வொரு மூலை முடுக்கையும் 5ஜி சேவை உள்ளடக்கும்" என்று அவர் கூறினார்.

சென்னை விமானநிலையத்தில்

# 2 பயணிகளிடம் ரூ.21 லட்சம் மதிப்புள்ள தங்கம் பறிமுதல்

**சென்னை, அக். 2-**

சென்னை விமானநிலையத்தில் ரூ.1 லட்சம் மதிப்புள்ள சிகரெட்கள் மற்றும் ரூ.21 லட்சம் மதிப்புள்ள தங்கம் பறிமுதல் செய்யப்பட்டன. சென்னை சர்வதேச விமான நிலைய சுங்கத்துறை முதன்மை ஆணையர் மாத்யூ ஜால்லி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது:

கடந்த 29-ந்தேதி, துபாயிலிருந்து வந்த பயணி ஒருவரை சென்னை விமான நிலைய சுங்கத்துறை அதிகாரிகள் இடைமறித்து சோதனையிட்ட போது, ரூ.1 லட்சம் மதிப்புள்ள 50 பெட்டி சிகரெட்டுகளை மறைத்து கொண்டுவந்தது தெரிய வந்தது. அவரிடம் நடத்தப்பட்ட சோதனையில் 260 கிராம் எடைகொண்ட தங்கமும் மறைத்து எடுத்து வந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இதன் மதிப்பு ரூ.11.47 லட்சம் ஆகும்.

மற்றொரு சம்பவத்தில், துபாய் பயணி ஒருவரிடம் இருந்து, தூள் வடிவத்தில் தங்கம் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. மேலும் அவரிடம் இருந்த ஒரு தங்கச் சங்கிலியும், ஒரு தங்க நாணயமும் பறிமுதல் செய்யப்பட்டது. இவற்றின் மொத்த எடை 223 கிராம் ஆகும். இதன் மதிப்பு ரூ.9.84 லட்சம் ஆகும். இரண்டு பயணிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்ட தங்கத்தின் மதிப்பு ரூ.21.31 லட்சம் ஆகும். இரண்டு பயணிகளிடம் தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருகிறது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காங்கிரஸ் தலைவர் தேர்தல்:

# கே.என். திரிபாதி வேட்பு மனு நிராகரிப்பு

**புதுடெல்லி, அக். 02-**

காங்கிரஸ் தலைவர் தேர்தலில் போட்டியிட கே.என். திரிபாதி தாக்கல் செய்த வேட்பு மனு நிராகரிக்கப்பட்டுள்ளது.

காங்கிரஸ் கட்சியின் தலைவர் பதவிக்கு அக்டோபர் மாதம் 17-ந் தேதி தேர்தல் நடத்தப்படுகிறது. இந்த தேர்தலில் அக்கட்சியின் மூத்த தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, காங்கிரஸ் எம்.பி. சசி தரூர், ஜார்கண்ட் மாநில முன்னாள் அமைச்சரும், அம்மாநில காங்கிரஸ் தலைவருமான கேஎன் திரிபாதி ஆகியோர் ஒரே நாளில் வேட்புமனு தாக்கல் செய்தனர்.

இந்த நிலையில், வேட்புமனுக்கள் குறித்து ஆய்வு நேற்று நடைபெற்றதாக கட்சியின் தேர்தல் ஆணைய தலைவர் மதுசூதன் மிஸ்த்ரி தெரிவித்துள்ளார். இதில் மல்லிகார்ஜுன கார்கே மற்றும் சசிதரூர் ஆகியோரின் மனுக்கள் ஏற்கப்பட்டுள்ளது. வேட்புமனுவை விதிமுறைகளின் படி பூர்த்தி செய்யாததால் கே.என் திரிபாதியின் வேட்பு மனு நிராகரிக்கப்பட்டதாக மதுசூதன் மிஸ்த்ரி கூறினார். அவரது வேட்புமனுத் தாக்கலின் போது மொத்தம் 20 படிவங்கள் பெறப்பட்டன. அவற்றில் நான்கு கையொப்பங்கள் மீண்டும் மீண்டும் போடப்பட்டிருந்ததால் நிராகரிக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

# மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு

**சேலம், அக். 02-**

மேட்டூர் அணைக்கு நீர்வரத்து சற்று அதிகரித்துள்ளது. கர்நாடக மாநிலம் காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை குறைந்ததால், ஒகேனக்கல் காவிரியில் நீர்வரத்து குறைந்து வருகிறது. தொடர்ந்து 3-வது நாளாக நேற்று நீர்வரத்து 9,500 கன அடியாக நீடித்தது. காவிரியில் பரிசல் இயக்க அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலையில், அருவியில் குளிக்க விதிக்கப்பட்டுள்ள தடைதொடர்ந்து நீடிக்கிறது. மேட்டூர் அணைக்கு நேற்று முன்தினம் வினாடிக்கு 10 ஆயிரம் கன அடியாக இருந்த நீர்வரத்து சற்று அதிகரித்து நேற்று காலை வினாடிக்கு 11 ஆயிரம் கன அடியாக வந்து கொண்டிருந்தது. அணையில் இருந்து காவிரி டெல்டா பாசனத்திற்கு 10 ஆயிரம் கன அடியும், கிழக்கு, மேற்கு கால்வாய் பாசனத்திற்கு 900 கனஅடியும் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. நீர்வரத்து அதிகரித்ததால் நேற்று முன்தினம் 118.72 இருந்த அணையின் நீர்மட்டம் சற்று உயர்ந்து 118.75 அடியாக உள்ளது.

# கொடநாடு கொலை வழக்கு சி.பி.சி.ஐ.டி.க்கு மாற்றம்

**சென்னை, அக். 02-**

கொடநாடு கொலை, கொள்ளை வழக்கை சி.பி.சி.ஐ.டி.க்கு மாற்றி தமிழக டி.ஜி.பி. சைலேந்திர பாபு உத்தரவிட்டுள்ளார். முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மறைவுக்கு பிறகு, கொடநாடு கொலை, கொள்ளை சம்பவம் கடந்த 2017 ஏப்ரல் 24-ம் தேதி நடந்தது. எஸ்டேட் காவலாளி ஒருவர் கொலை செய்யப்பட்ட நிலையில், அங்கிருந்த ஏராளமான ஆவணங்கள் கொள்ளையடிக்கப்பட்டன. இந்த வழக்கு தொடர்பாக மறுவிசாரணை நடந்து வருகிறது. இதற்காக 5 தனிப்படைகள் அமைக்கப்பட்டு ஒவ்வொரு தனிப்படையினரும் பிரிந்து சென்று பலரிடம் விசாரணை நடத்தி வருகின்றனர்.

வழக்கின் விசாரணை இறுதிக்கட்டத்தை அடைந்துள்ள நிலையில், இந்த வழக்கு விசாரணையை சி.பி.சி.ஐ.டி.க்கு மாற்றி டி.ஜி.பி. சைலேந்திரபாபு உத்தரவிட்டுள்ளார். இதனால் வழக்கு விசாரணை மேலும் தீவிரமடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# உக்ரைனுக்கு தொடர்ந்து ராணுவ உதவி: அமெரிக்கா அறிவிப்பு

**நியூயார்க், அக். 02-**

உக்ரைனுக்கு தொடர்ந்து ராணுவ உதவிகளை வழங்குவோம் என அமெரிக்க அதிபர் ஜோ பைடன் அறிவித்துள்ளார். அமெரிக்க அதிபர் ஜோ பைடன் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:- ரஷ்ய அதிபர் புடின் மற்றும் அவரது பொறுப்பற்ற வார்த்தைகள் மற்றும் அச்சுறுத்தல்களால் அமெரிக்காவும் அதன் நட்பு நாடுகளும் பயப்படப் போவதில்லை. புடினின் செயல்பாடுகள் அவர் போராடிக் கொண்டிருப்பதற்கான அறிகுறியாகும். அவரால் அண்டை நாட்டின் நிலப்பரப்பைக் கைப்பற்றி அதிலிருந்து தப்பிக்க முடியாது.

உக்ரைனுக்கு நாங்கள் தொடர்ந்து ராணுவ தளவாடங்களை வழங்குவோம். நேட்டோ பிராந்தியத்தின் ஒவ்வொரு அங்குலத்தையும் பாதுகாக்க அமெரிக்கா எங்கள் நேட்டோ நட்பு நாடுகளுடன் இணைந்து முழுமையாக தயாராக உள்ளது. எனவே மிஸ்டர் புடின், நான் சொல்வதை தவறாகப் புரிந்து கொள்ளாதீர்கள். நான் எங்கள் நட்பு நாடுகளுடன் நெருங்கிய தொடர்பில் இருக்கிறேன். இன்றும் புதிய தடைகளை அறிவிக்கிறோம் என்று தெரிவித்தார்.

## தலைவர்கள் சொல்வதை படிங்க...



நான் இந்த நடைப்பயணத்தின் போது மக்களின் துயரத்தைக் கேட்கிறேன். அவர்களின் பாடுகளை அறிகிறேன். வெறுப்பைப் பரப்பி ஒற்றுமை யாத்திரையை சிதைக்க வேண்டும் என்பது தான் ஆர்எஸ்எஸ் மற்றும் பாஜகவின் ஒரே இலக்கு.

**- ராகுல் காந்தி**



மதுக்கடைகளை மூடக் கோரி சமூக ஆர்வலர்களால் தொடுக்கப்படுகிற பொதுநல வழக்குகளில், அரசின் கொள்கை முடிவுகளில் தலையிட முடியாதெனக் கூறி, தட்டிக்கழிக்கும் நீதிமன்றம், மதச்சிக்கல் ஏற்பட்டுவிடக் கூடாதென்பதற்காக அரசு எடுத்த கொள்கை முடிவைச் செயல்படுத்த விடாததேன் ?

**- சீமான்**



ஒவ்வொரு மாநிலத்தில் வசித்து வருபவர்களும் அரசுக்கு வரி கட்டுகிறார்கள். இதனால் நமக்கு தேவையானவற்றை இங்குள்ள மாநில அரசு 100 சதவீதம் கேட்டு பெற உரிமை உள்ளது. மத்திய அரசும், மாநில அரசும் சண்டை போட்டுக்கொண்டே இருக்கக்கூடாது. சண்டை போடுவதற்காக மக்கள் ஓட்டு போடவில்லை.

**- சசிகலா**



பல்கலைக்கழக தொகுப்பூதிய பணியாளர்களை பணிநீக்கக் கூடாது. கடந்த 12 ஆண்டுகளுக்கும் மேலாக பணியாற்றி வரும் 205 தொகுப்பூதிய பணி யாளர்களையும் உடனடியாக பணி நிரந்தரம் செய்ய அண்ணாமலை பல்கலைக்கழகம் முன்வர வேண்டும்

**- அன்புமணி**

# மெட்வே மருத்துவனையில் கார்டியாலஜி பிரிவை அமைச்சர் மா.சுப்பிரமணியன் துவக்கிவைத்தார்



சென்னை, அக் 2-

மெட்வே ஹார்ட் இன்ஸ்டிடியூட் மற்றும் மெட்வே மருத்துவமனைகளால் சென்னையில் நடத்தப்படட உலக இருதய தின நிகழ்ச்சியில் தமிழ்நாடு சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் மா.சுப்ரமணியன், மெட்வே குழுமத்தின் தலைவர் டாக்டர். டிபழனியப்பன் முன்னிலையில், என்ற எலக்ட்ரோபிசியாலஜி மற்றும் இன்டர்வென்ஷனல் கார்டியாலஜி' பிரிவை துவக்கி வைத்தார்.

இருதய மருத்துவத்தில் சிறந்த அர்ப்பணிப்பு மற்றும் மதிப்புமிக்க பங்களிப்பிற்காக மருத்துவர்களை மெட்வே ஹார்ட் இன்ஸ்டிடியூட் மற்றும் மெட்வே மருத்துவமனைகள் சார்பில் இந்நிகழ்ச்சியில் இருதயவியல் துறையின் தலைசிறந்த மருத்துவர்களான டாக்டர் கே.எம். செரியன், டாக்டர் ஆர்.அழகேசன், டாக்டர் ஜே.எஸ். சத்தியநாராயண மூர்த்தி, டாக்டர் வி.ஜகந்நாதன், டாக்டர் எஸ்.சண்முகசுந்தரம், டாக்டர் கிருஷ்ணசாமி சுப்ரமணியன், டாக்டர் ஐ.சத்தியமூர்த்தி மற்றும் டாக்டர் டி.வைத்தியநாதன் ஆகியோர் வாழ்த்திப்பேசினர்.

மெட்வே குழும மருத்துவமனைகளின் தலைவர் டாக்டர். டி.பழனியப்பன் நிகழ்ச்சியில் பேசுகையில்,கடந்த வருடம் அக்டோபர் மாதம் மெட்வே ஹார்ட் இன்ஸ்டிட்யூட் தொடங்கிய, ஒராண்டுக்குள் மருத்துவமனை புரிந்துள்ள ஏராளமான சாதனைகளை அவர் எடுத்துரைத்தார். சுகாதார அமைச்சர் மற்றும் மூத்த இருதயநோய் நிபுணர்களுக்கும் அவர் நன்றி தெரிவித்தார். மேலும்," இதுபோன்ற மதிப்புமிக்க பிரமுகர்கள் முன்னிலையில் இன்று தாம் இருப்பது உண்மையிலேயே ஒரு பாக்கியம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நிகழ்ச்சியில் பங்கேற்றுள்ள ஒவ்வொரு மருத்துவரும் இருதயவியல் மற்றும் இருதய அறுவை சிகிச்சையில் குருவாக செயல்படுபவர்கள் என்றும் அவர் கூறினார்.

அவர்கள் அனைவரும் இதய நோய்களுக்கான சிகிச்சையில் புரட்சியை ஏற்படுத்துவதில் ஏராளமான சாதனைகளை நிகழ்த்தியுள்ளனர். நாட்டிலேயே சிறந்த இருதய சிகிச்சைக்கான மையமாக சென்னையை மாற்றியுள்ளனர். எனது ஆசிரியர்களாகவும் வழிகாட்டிகளாகவும் உள்ள இத்தகைய புகழ் பெற்ற மருத்துவர்கள் மற்றும் அறுவை சிகிச்சை நிபுணர்களின் ஆசியோடு வரும் ஆண்டுகளில் மெட்வே ஹார்ட் இன்ஸ்டிட்யூட் மேலும் வளர்ச்சி பெறும் என்றும் இதற்காக அவர்களின் ஆசிகளையும், ஆதரவையும், வழிகாட்டுதலையும் தொடர்ந்து தாம் கோருவதாகவும் அவர் தெரிவித்தார்.

டாக்டர் டி.பழனியப்பன் வரவேற்புரையை தொடர்ந்து சுகாதாரத்துறை அமைச்சர் மா. சுப்ரமணியன் சிறப்புரையாற்றினார். மெட்வே அகாடமியில் இருந்து அடுத்த தலைமுறை இருதய நோய் நிபுணர்கள் மற்றும் இருதய அறுவை சிகிச்சை நிபுணர்களை உருவாக்குவதற்கான பயிற்சித் திட்டமான எலக்ட்ரோபிசியாலஜி மற்றும் இன்டர்வென்ஷனல் கார்டியாலஜியை மெட்வேயில் அமைச்சர் துவக்கிவைத்தார். நிகழ்ச்சியின் நிறைவாக இருதய சிகிச்சைப் பிரிவு நிபுணர்களை அமைச்சர் மா சுப்பிரமணியன் கவுரவித்தார்.

# தலைவர் பால்பாண்டி தலைமையில் தாமரைக்குளம் பேரூராட்சி மன்ற கூட்டம்

தேனி.அக்.2.

தேனி மாவட்டம், தாமரைக்குளம் பேரூராட்சியில் பேரூர் மன்ற கூட்டம் நேற்று நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு தலைவர் பால்பாண்டி தலைமை தாங்கினார். செயல் அலுவலர் ஆளவந்தான், பேரூர் மன்ற துணைத் தலைவர் மலர்க்கொடி பொன்சேது ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில் வசந்தா, முருகன், பாண்டி, மைதிலி, சாந்தி, ராஜேந்திரன், ஜாஹீர் உசேன், கவிதா, பாலாமணி, தேவகி, முத்துலெட்சுமி, முனியம்மாள் ஆகிய பேரூர் மன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் தூய்மை இந்தியா திட்டத்தில் தனி நபர் கழிப்பிடம் 30 கட்டவும், வார்டு 4 பங்களாபட்டியில் சமுதாய கழிப்பிடம் கட்டவும், அலுவலக பின்புறத்தில் 7.50 லட்சம் மதிப்பில் 5000 லிட்டர் கொள்ளளவு கொண்ட இதர பயன்பாட்டிற்கான தொட்டி அமைக்கவும், 6வது வார்டில் 7.35 லட்சம் மதிப்பில் புதிய குடிநீர் மெயின் பைப்லைன் அமைக்கவும், 4வது வார்டில் உள்ள ஒரு சமுதாய கழிப்பிடம், மற்றும் 6வது வார்டில் உள்ள இரு சமுதாய கழிப்பிடங்களை 11 லட்சம் மதிப்பில் புனரமைக்கவும், வளமீட்பு பூங்காவில் 4 லட்சம் மதிப்பில் தளம் அமைக்கவும், 7, 9, 10, 13, 15 வார்டுகளிலும், வடுகபட்டி மெயில் ரோட்டிலும் மொத்தம் 19.80 லட்சம் மதிப்பில் மழைநீர் வடிகால் மற்றும் கல்வெட்டு அமைத்தல் உள்ளிட்ட 8 தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

வார்டு உறுப்பினர்கள் தமது வார்டுகளில் தேவையான அடிப்படை வசதிகளை செய்து தரவும், மேம்படுத்தவும் கோரிக்கை வைத்தனர். துணைத்தலைவர் மலர்க்கொடிபொன்சேது நன்றி கூறினார்.




**திண்டுக்கல் ஜி.டி.என்.கல்லூரியில் நடந்த மனித உரிமைகள் பற்றிய அடிப்படைப் பயிற்சி நிகழ்ச்சியில் கல்லூரியின் முதல்வர் முனைவர் பெ. பாலகுருசாமி, தாளாளர் அரிமா டாக்டர் க.ரெத்தினம், வேடசந்தூர் உட்கோட்டம் துணைகாவல் கண்காணிப்பாளர் துர்க்காதேவி, இயக்குநர் முனைவர் துரை ரெத்தினம் தமிழ்த் துறைத் தலைவர் மற்றும் நிகழ்வு இணை கூட்டுநர் முனைவர் சா. சுஜாதா, முனைவர் ரா. பாலசுப்பிரமணி, முனைவர் மா. முத்துமாரி, ச. கண்ணன் மற்றும் செ. அருண் ஆகியோர் கலந்து கொண்டனர்.**

# மர்ம காய்ச்சலுக்கு சிறுமி பலி

திருமங்கலம். அக்.02.

மதுரை மாவட்டம் திருமங்கலம் அருகே உள்ள சிந்துப்பட்டி போலீஸ் சரக்ம் தும்மக்குண்டு பகுதியைச் சேர்ந்தவர் மாயாண்டி. இவரது மனைவி பாண்டி சுவாதி. இவர்களுக்கு மோஷிகா ஸ்ரீ (வயது 2) குழந்தை இருந்தது. கடந்த சில நாட்களுக்கு முன்பு மாயாண்டிக்கு ஏற்பட்ட உடல்நலக் குறைவு காரணமாக அவர் மதுரையில் உள்ள தனியார் ஆஸ்பத்திரி சேர்ந்து சிகிச்சை பெற்று வருகிறார். அவருடன் மனைவி உதவியாக இருந்தார். இதன் காரணமாக பாண்டி சுவாதி தனது மகள் மோஷிகாவை நாட்டார் மங்கலத்தில் உள்ள உறவினர் வீட்டில் விட்டுச் சென்றிருந்தார்.

இந்த நிலையில் கடந்த சில நாட்களாக மோஷிகா ஸ்ரீவுக்கு காய்ச்சல் பாதிப்பு இருந்தது. மருத்துவரிடம் காண்பித்தும் காய்ச்சல் குறையவில்லை. சம்பவத்தன்று உடல்நிலை மோசமானதால் குழந்தையை செக்கா னூரணி அரசு ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். ஆனால் அங்கு உடல் நிலை மிகவும் மோசமானதால் மதுரை அரசு ஆஸ்பத்திரிக்கு குழந்தை கொண்டு சென்றனர். அங்கு பரிசோதித்த டாக்டர்கள் குழந்தை ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்தனர். மர்ம காய்ச்சலால் சிறுமி இறந்த சம்பவம் அப்பகுதி மக்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதையடுத்து சுகாதாரத் துறையினர் அப்பகுதியில் முகாமிட்டு மருத்துவ வசதிகளை செய்து வருகின்றனர்.

# வத்ராயிருப்பில் மணல் திருட்டு

விருதுநகர் அக் 2.

வத்திராயிருப்பு தாலுகா இலந்தகுளம் அருகே சந்தன பெருமாள் பட்டா நிலத்தில் 3 டிராக்டர்களில் அரசு அனுமதியின்றி மணல் அள்ளியுள்ளனர். இதை தகவல் அறிந்த விஏஓ மாயகிருஷ்ணன் சம்பவ இடத்திற்கு சென்ற போது மணல் அள்ளிக்கொண்டிருந்தவர்கள் மூன்று டிராக்டர்களையும் அங்கேயே விட்டுவிட்டு ஓடி சென்று விட்டனர். இதனை அடுத்து டிராக்டரிகளை பறிமுதல் செய்து வத்திராயிருப்பு போலீசில் ஒப்படைக்கப்பட்டது. இது குறித்து வத்திராயிருப்பு போலீசார் டிராக்டர்களின் உரிமையாளர்கள், டிரைவர்கள், மண் அள்ளி யவர்களை தேடி வருகின்றனர்.

# புற்று நோய் பாதித்த சிறுவனுக்கு அமைச்சர் ராஜகண்ணப்பன் நிதிஉதவி

முதுகுளத்தூர்அக்.2

புற்று நோய் பாதித்த சிறுவனுக்கு அமைச்சர் ராஜகண்ணப்பன் நிதிஉதவி அளித்துள்ளார். இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் அருகே உள்ள மகிண்டியைச்சேர்ந்த உதயப்பன் மகன் அகிலேஷ் (வயது3) இவர் சென்னையில் உள்ள அடையாறு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். குழந்தையின் சிகிச்சைக்காக முதுகுளத்தூர் சட்டமன்ற உறுப்பினரும் பிற்படுத்தப்பட்டோர்நலத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் நிதிஉதவி வழங்கியுள்ளார்.

# திருமலைக்கேணியில் சஷ்டி பூஜை

நத்தம்,அக்,2.

திண்டுக்கல் மாவட்டம், நத்தம் அருகே திருமலைக்கேணி சுப்பிரமணிய சுவாமி கோவிலில் புரட்டாசி மாத சஷ்டி பூஜை நடந்தது. இதில் முருக பெருமானுக்கு பால்,பழம்,பன்னீர்,விபூதி,சந்தனம் உள்ளிட்ட 16 வகையான அபிஷேகங்களும், சிறப்பு அலங்காரம், பூஜைகள், தீபாராதனைகள் நடந்தது.மேலும் அருகிலுள்ள காமாட்சி மவுனகுருசாமி மடத்திலும் சிறப்பு பூஜைகள் நடந்தது. இதைபோலவே நத்தம் கோவில்பட்டி கைலாசநாதர் கோயில் உள்பிரகாரத்தில் அமைந்துள்ள தண்டபாணி சன்னதியிலும் சஷ்டியையொட்டி பூஜைகள் நடந்தது.

# விவோவின் அழகான, நவநாகரிமான ஒய் 16 ஸ்மார்ட்போன் இந்தியாவில் அறிமுகம்

சென்னை, அக் 02-

உலகளாவிய ஸ்மார்ட்போன் பிராண்டாக திகழும் விவோ தனது ஒய் மாடல் வரிசையில் புதிய வரவாக ஒய்16 ஸ்மார்ட்போனை இந்தியாவில் அறிமுகம் செய்துள்ளது. இந்த ஸ்மார்ட்போன் 3 ஜி.பி.ரேம் மற்றும் 32 ஜி.பி. மெமரி கார்டுடன் 9,999 ரூபாய்க்கும், 4 ஜி.பி.ரேம் மற்றும் 64 ஜி.பி. மெமரி கார்டுடன் 12,499 ரூபாய்க்கும் ஸ்டெல்லார் பிளாக் மற்றும் டிர்ஸ்லிங் கோல்டு ஆகிய 2 வித வண்ணங்களில் விவோ இந்தியா இ-ஸ்டோர் மற்றும் இந்தியா முழுவதும் உள்ள அனைத்து ஷோரூம்களிலும் கிடைக்கிறது.

மேலும் கோடக், ஐடிஎப்சி, ஒன்கார்டு, பேங்க் ஆப் பரோடா, பெடரல் வங்கி, ஏ.யூ.வங்கி கார்டுகளை பயன்படுத்தி ஷோரூம்களில் இந்த ஸ்மார்ட்போனை வாங்கும் வாடிக்கையாளர்களுக்கு 1000 ரூபாய் கேஷ்பேக்கும், ஆன்லைனில் எச்டிஎப்சி டெபிட் மற்றும் கிரெடிட் கார்டுகளை பயன்படுத்தி வாங்கும் வாடிக்கையாளர்களுக்கு 750 ரூபாய் கேஷ்பேக்கும் வழங்கப்படுகிறது. 6.51 இன்ச் புல் எச்டி+ டிஸ்பிளே உடன் வெளிவந்திருக்கும் இந்த ஒய் 16 ஸ்மார்ட்போன் அதிக நேரம் ஸ்மார்ட்போன் பயன்படுத்தும் நுகர்வோருக்கு சிறந்த ஒன்றாக இருக்கும். 2.5டி வளைவு வடிவமைப்பைக் கொண்ட இந்த ஸ்மார்ட்போன் முன் மற்றும் பின்புறம் சமச்சீராக இருக்கும் வகையிலும் அதன் நான்கு முனைகளும் வட்ட வடிவில் இருக்கும் வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு வசதியைப் பொறுத்தவரை இதில் கைரேகை ஸ்கேனர் மற்றும் பேஸ் வேக் வசதி உள்ளது.

# வெங்கலகுறிச்சி ஊராட்சியில் பனை விதை நடும் விழா



முதுகுளத்தூர்அக்.2.

வெங்கலகுறிச்சி ஊராட்சியில் பனை விதை நடும் விழா நடைபெற்றது. இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் ஊராட்சி ஒன்றியத்தைச்சேர்ந்த வெங்கலகுறிச்சி ஊராட்சியில் பனை விதை நடும் நிகழ்ச்சி நடைபெற்றது. ஊராட்சி மன்ற தலைவர் எஸ்.டி.செந்தில்குமார் தலைமை தாங்கி பனை விதையினை நட்டு துவக்கி வைத்தார். மண்டலதுணை வட்டார வளர்ச்சி அலுவலர் ஜெயகார்த்திகேயன்-ஊராட்சி செயலர் பொன்னுமணி ஆகியோர் முன்னிலை வகித்தனர். மேலும் பனை விதையினை வெங்கலகுறிச்சி ஊராட்சியில் தேசிய ஊரக வேலைவாய்ப்பு பணியாளர்கள் அனைத்து இடங்களிலும் நட்டனர்.

# குரோமாவின் விழாக் கால கனவு பரவசமூட்டும் தள்ளுபடி விற்பனை

கோவை, அக் 02-

அனைவரும் ஆவலோடு எதிர்பார்த்திருந்த விழாக்கால கொண்டாட்டத்தை சிறப்பாக மாற்ற டாடா குழுமத்தின் விழாக்கால கனவு காத்திருக்கிறது. டிஜிட்டல் படம், குழந்தைகளுக்கு கொலு வைக்க பயிற்சி, மற்றும் விழக்கால சிறப்பு தள்ளுபடியுடன் விற்பைனயும் குரோமா கடைகளில் இடம் பெறுகிறது. ஆந்திரா, கர்நாடகா, கேரளா மற்றும் தெலுங்கானாவில் உள்ள ஸ்டோர்கள் மற்றும் குரோமா இணையத்தளத்தில் அக்டோபர் 5 வரை சலுகை, தள்ளுபடிகளை பெறலாம்.உணர்வு பொங்க கொண்டாடப்படும் இந்தவிழாவை முன்னிட்டு குரோமா ஒரு விழாக்கால கனவு படம் ஒன்றை தயாரித்து வெளியிட்டுள்ளது. மனதை மகிழ்விக்கும் இந்த படத்தில் ஒரு கதை இடம் பெற்றுள்ளது. தாத்தா ஒருவர், ஒவ்வொரு தசரா பண்டிகை காலத்திலும் எடுக்கப்பட்ட படத்தை திருப்பி, திருப்பி பார்க்கிறார். ஒவ்வொரு படத்திலும் யாரவது ஓரிருவர் இல்லாமல் இருப்பதை உணர்கிறார். இந்த ஆண்டு தசரா பண்டிகையின்போது குடும்ப உறுப்பினர்கள் தவறாமல் ஒன்று சேர்ந்து கொண்டாடுகின்றனர்.

குரோமா பிரதிநிதி ஒருவர் ஒரு பேக்கிங் உடன் வருகிறார். உள்ளே வந்து லேப்டாப், கேமரா, பிரிண்டர் போன்றவைகளை நிறுவி இணைக்கிறார். இந்த விழாக் கால கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக, பயிற்சி பெற்ற கலைஞர்கள் குழந்தைகளுக்கு கொலு வைக்கும் முறை பற்றி கற்றுத்தருகின்றனர். 2022 அக்டோபர் 4 வரை இந்த பயிற்சி பட்டறை நடக்கும். குரோமா இன்பினிட்டி ரீட்டைல் லிமிடெட் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் மற்றும் தலைமை செயல் அதிகாரி அவிஜித் மித்ரா கூறுகையில், நாடு முழுவதும் கொண்டாடப்படும் விழாக்களில் விற்பனையை இரட்டை இலக்கத்திற்கு கொண்டு சென்றுள்ளது குரோமா. சமீபத்தில் சுதந்திர தின விழா மற்றும் ஓணம் பண்டிகையின்போது இதை நிரூபித்துள்ளது. எங்களது வாடிக்கையாளர்கள், தங்களது பயன்பாட்டில் உள்ள பொருட்களை, புதுப்பித்து மேம்படுத்தி வாங்கியுள்ளனர். தனித்துவமிக்க தள்ளுபடி சலுகைகளோடு, ஒரு மகிழ்வான அனுபவத்தை இந்த விழாக்கால விற்பனையில் அளித்து வருகிறோம் என்று கூறினார்.

# சர்வதேச முதியோர் தினம்

# மூத்த வாக்காளர்களுக்கு தேர்தல் ஆணையத்தின் வாழ்த்து கடிதத்தினை கலெக்டர் ஜெ.மேகநாதரெட்டி வழங்கினார்



விருதுநகர் அக் 2.

விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு, இந்திய தேர்தல் ஆணையம் மூலம் 80 வயதுக்கு மேற்பட்ட மூத்த வாக்காளர்களுக்கு, நாட்டின் தேர்தல் செயல்பாடுகளில் பங்களிப்பிற்கு நன்றி தெரிவிக்கும் வகையில், இந்திய தலைமை தேர்தல் ஆணையர் வாழ்த்துக் கடிதத்தினை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ஜெ.மேகநாதரெட்டி, வழங்கி சிறப்பு செய்தார். விருதுநகர் மாவட்டத்தில், 80 வயதிற்கு மேற்பட்ட வாக்காளர்கள் இராஜபாளையம் சட்டமன்ற தொகுதியில் 3822 வாக்காளர்களும், திருவில்லிபுத்தூர் சட்டமன்ற தொகுதியில் 4277 வாக்காளர்களும், சாத்தூர் சட்டமன்ற தொகுதியில் 3622 வாக்காளர்களும், சிவகாசி சட்டமன்ற தொகுதியில் 2921 வாக்காளர்களும், விருதுநகர் சட்டமன்ற தொகுதியில் 4571 வாக்காளர்களும், அருப்புக்கோட்டை சட்டமன்ற தொகுதியில் 4341 வாக்காளர்களும், திருச்சுழி சட்டமன்ற தொகுதியில் 3364 வாக்காளர்களும் என மொத்தம் 26,918 வாக்காளர்கள் உள்ளனர். விருதுநகர் சட்டமன்றத் தொகுதியைச் சேர்ந்த 12 மூத்த வாக்காளர்களுக்கு இந்திய தலைமை தேர்தல் ஆணையர் வாழ்த்துக்கடிதத்தினை வழங்கி மாவட்ட ஆட்சித்தலைவர் ஜெ.மேகநாதரெட்டி நன்றி தெரிவித்தும் சிறப்பு செய்யப்பட்டது.

மேலும் 100 வயதிற்கு மேற்பட்ட வாக்காளர்களை சம்பந்தப்பட்ட உதவி வாக்காளர் பதிவு அலுவலர்கள், துணை வட்டாட்சியர் (தேர்தல்) மற்றும் வாக்கு சாவடி நிலை அலுவலர்கள் ஆகியோருடன் அவர்களின் வசிப்பிடத்திற்கு நேரில் சென்று இந்தியா தலைமை தேர்தல் ஆணையர் அவர்களின் கடிதத்தினை வழங்கி சிறப்பு செய்யப்பட்டார்கள். இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் ரவிக்குமார், தேர்தல் வட்டாட்சியர் மாரிசெல்வி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# திருமங்கலம் அருள்மிகு மீனாட்சி சொக்கநாதர் ஆலயத்தில் உலக நன்மைக்காக 301 திருவிளக்கு பூஜை



திருமங்கலம். அக்.02.

மதுரை மாவட்டம் திருமங்கலம் நகரிலுள்ள அருள்மிகு மீனாட்சி சொக்கநாதர் ஆலயத்தில் உலக நன்மைக்காகவும் மழை பொழிய வேண்டியும் 301 திருவிளக்கு பூஜை சநடைபெற்றது. இதில் ஏராளமான பெண்கள் பங்கேற்று சிறப்பு வழிபாடு நடத்தி சுவாமி தரிசனம் செய்தனர்.

மதுரை மீனாட்சி அம்மனுக்கு திருமாங்கல்யம் செய்து கொடுத்த பெருமை பெற்ற, பழமை வாய்ந்த திருமங்கலம் மீனாட்சி சொக்கநாதர் ஆலயத்தில் நேற்று மாலை 301 திருவிளக்கு பூஜை நடைபெற்றது.உலக நன்மை வேண்டியும் மழை பொழிந்து விவசாயம் செழிக்க வேண்டியும் கோவிலின் சார்பில் திருவிளக்கு பூஜை நடத்தப்பட்டது.இந்த பூஜையில் ஏராளமான பெண்கள் பங்கேற்று வழிபாடு செய்தனர். திருவிளக்கு பூஜையை ஒட்டி அம்மன் மலர் மாலைகளாலும் தங்க வைர நகைகளாலும் அலங்காரம் செய்யப்பட்டு தங்க கிரீடம் அணிந்து கையில் கிளியுடன் ஊஞ்சல் அலங்காரத்தில் பக்தர்களுக்கு காட்சியளித்தார்.

இதனை தொடர்ந்து பக்தர்கள் வழிபாட்டு பாடல்களை பாடியபடி திருவிளக்கு பூஜையில் பங்கேற்று அம்மனை தரிசித்தனர்.விழாவின் நிறைவாக அம்மனுக்கு சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றது. பின்னர் விழாவில் பங்கேற்ற அனைவருக்கும் கோவில் நிர்வாகத்தின் சார்பில் பிரசாதம் வழங்கப்பட்டது.



**மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரியில் உணவு மற்றும் பால்வள தொழில்நுட்ப துறை சார்பில் நடைபெற்ற சுயதொழில் பயிற்சி வகுப்பினை கல்லூரி செயலாளர் விஜயராகவன் தொடங்கி வைத்தார். இதில் ஒருங்கிணைப்பாளர் ராமசுப்பையா, இயக்குனர் பிரபு, துறைத்தலைவர் கோபிமணிவண்ணன், மாரியப்பன், பாரதி ஆகியோர் பயிற்சி அளித்தனர். இதில் பேராசிரியர்கள் ராகதீபா, சுப்ரஜனனி, மீனாட்சி, அபிராமி ஆகியோரும் கலந்து கொண்டனர்.**

# புதுஅத்திக்கோம்பையில் இல்லம் தேடி கல்வி சார்பில் அறிவியல் கண்காட்சி



ஒட்டன்சத்திரம்.அக்.2.

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் ஒன்றியத்துக்குட்பட்ட புது அத்திக்கோம்பை ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் இல்லம் தேடி கல்வி இயக்கம் சார்பில் அறிவியல் கண்காட்சி வட்டார கல்வி அலுவலர் குகப்பிரியா முன்னிலையில், மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர் திருப்பதி தலைமையில் நடைபெற்றது,

கண்காட்சியை இல்லம் தேடி கல்வி பொறுப்பாசிரியை கீதா ஒருங்கிணைப்பு செய்து பரிசுகள் வழங்கினார்.

இதில் பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள், தன்னார்வலர்கள் , ஆசிரியர்கள், மாணவ, மாணவியர் கலந்து கொண்டனர் .முடிவில் தலைமையாசிரியை அமுதவல்லி நன்றி கூறினார்.

# முதியோர்களுக்கான உதவி தொகை ஆணையை மாவட்ட கலெக்டர் ஜானி டாம் வர்கீஸ் வழங்கினார்



பரமக்குடி, அக். 02-

பரமக்குடி அருகே பார்த்திபனூரில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சர்பாக பார்த்திபனூர் முதியோர் காப்பகத்தில் உலக முதியோர் தின விழா நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் ஜானி டாம் வர்கீஸ் கலந்து கொண்டு முதியோர்களுக்கு இனிப்புகளை வழங்கி பாராட்டு தெரிவித்தார். அக்டோபர் மாதம் 1 ஆம் தேதி முதியோர் தின விழா கொண்டாடப்பட்டு வருகிறது. முதியவர்கள் பல்வேறு நிலைகளில் மனக் கவலையுடன் வந்து முதியோர் இல்லத்தில் தங்கிவருகின்றனர்.

இவர்கள் கவலையை மறந்து சந்தோசமாக இருக்க வேண்டும் என்பதற்காக அரசு ஒவ்வொரு ஆண்டிலும் முதியோர் தினத்தன்று அவர்களுடைய கோரிக்கைகளை பெற்று நிறைவேற்றி வருகின்றது. குழந்தைகளும் முதியோர்களும் ஒன்றே எதிர்காலத்தைப் பற்றியே சிந்திக்காமல் கவலை இல்லாமல் வாழவேண்டும்.

உறவினர்களை விட்டு முதியோர் இல்லத்தில் தங்கியுள்ள முதியோர்கள் மற்றவர்களுடன் அன்புடன் நட்பாக பழகி சந்தோசமாக இருக்க வேண்டும்.

தமிழக அரசு முதியோர்கள் சந்தோஷமாகவும் ஆரோக்கியத்துடனும் இருக்க எப்பொழுதும் அரசு உறுதுணையாக இருக்கும் எனக் கூறினார். 11 முதியோர்களுக்கு முதியோர் உதவித்தொகை ஆணையினை வழங்கினார். இதனைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் பரமக்குடி வட்டாட்சியர் தமிம் ராஜா, மாவட்ட வழங்கல் அலுவலர் மரகதநாதன், மாவட்ட சமூகநல அலுவலர் சாந்தி,வட்ட வழங்கல் அலுவலர் ஆண்டி, முதியோர் இல்ல ஒருங்கிணைப்பாளர் ஜான் பிரிட்டோ, பார்த்திபனூர் ஊராட்சி மன்ற தலைவர் சுகன்யா சதீஷ்குமார் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

# போடி ஸ்ரீநிவாசப் பெருமாளுக்கு வைகுண்டநாதர் சிறப்பு அலங்காரம்

போடி, அக். 02-

தேனி மாவட்டம், போடிநாயக்கனூரில் புரட்டாசி 2 ஆவது சனிக்கிழமையை முன்னிட்டு ஸ்ரீநிவாசப் பெருமாள், வைகுண்டநாதர் அலங்காரத்தில் அருள்பாலித்தார். போடி ராமர் கோவிலிலும் சிறப்பு பூஜை நடைபெற்றது.



புரட்டாசி சனிக்கிழமைகளில் பெருமாள் கோவில்களில் சிறப்பு பூஜை நடைபெறுவது வழக்கம். போடியில் உள்ள இந்து சமய அறநிலையத் துறைக்கு பாத்தியப்பட்ட அருள்மிகு ஸ்ரீநிவாசப் பெருமாள் கோவிலில் புரட்டாசி 2 ஆவது வார சனிக்கிழமை பூஜை நடைபெற்றது. இதில் ஸ்ரீநிவாசப் பெருமாள் வைகுண்டநாதர் அலங்காரத்தில் அருள்பாலித்தார். இதில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் அதிகாலை முதலே நீண்ட வரிசையில் காத்திருந்து ஸ்ரீநிவாசப் பெருமாளை தரிசித்தனர். பெருமாளுக்கு நெய் தீபமேற்றியும், சர்க்கரை பிரசாதம் வழங்கியும் வழிபட்டனர்.

போடி வினோபாஜி காலனி அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவிலில் உள்ள சங்கரநாராயணன் சன்னதியில் சுவாமிக்கு அலங்காரம் செய்யப்பட்டு வழிபாடு நடைபெற்றது. இதில் நூற்றுக்கணக்கான பெண்கள், பக்தர்கள் பங்கேற்று வழிபாடு நடத்தினர். போடி போஸ்பஜார் அருள்மிகு ஸ்ரீராமர் திருக்கோவிலில் புரட்டாசி சனி வார பூஜை நடைபெற்றது. ஸ்ரீராமர், லட்சுமணன், சீதாதேவி, அனுமன் ஆகியோருக்கு சிறப்பு பூஜை செய்து பொங்கல் வைத்து வழிபாடு நடத்தப்பட்டது.

போடி ஜக்கமநாயக்கன்பட்டி, மேலச்சொக்கநாதபுரம் ஆகிய இடங்களில் உள்ள அருள்மிகு தொட்டராயர் ஒன்னமாள் திருக்கோவிலில் புரட்டாசி சனிக்கிழமையை முன்னிட்டு சிறப்பு பூஜை நடைபெற்றது. சிலமலை அருள்மிகு ஸ்ரீநிவாசப் பெருமாள் கோவில், தேவாரம் அருள்மிகு ரெங்கநாதர் திருக்கோவில், நாகலாபுரம் - கெஞ்சம்பட்டி அருள்மிகு ஸ்ரீ பாமா ருக்மணி சமேத கள்ளழகர் சுவாமி திருக்கோவில் உள்ளிட்ட கோவில்களிலும் புரட்டாசி சனிவார பூஜை சிறப்பாக நடைபெற்றது



சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு திருப்பாலை யாதவர் பெண்கள் கலைக்கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலெக்டர் அனீஷ்சேகர் தலைமையில் அமைச்சர் பி.மூர்த்தி 80 வயதிற்கு மேற்பட்ட வாக்காளர்களை கவுரவிக்கும் வகையில் பாராட்டு சான்றுகளை வழங்கினார். அருகில் வெங்கடேசன் எம்.பி., திட்ட இயக்குனர் சரவணன், வருவாய் கோட்டாட்சியர் சுகி பிரேமலா ஆகியோர் உள்ளனர்.

## திருமணம் குறித்த எடப்பாடியார் பேச்சு:

# அமைச்சர் மூர்த்தியிடம் விவாதம் செய்ய தயார்: ஆர்.பி. உதயகுமார்

மதுரை, அக். 02-

மதுரையில் நடைபெற்ற அ.தி.மு.க. கண்டன பொதுக் கூட்டத்தில் தி.மு.க. அமைச்சர் நடத்திய ஆடம்பர திருமணம் குறித்து எடப்பாடி பழனிசாமி பேசினார்.

அதற்கு பதலளிக்கும் வகையில் கருத்து தெரிவித்த அமைச்சர் மூர்த்தி, அரசியல் நாகரீகம் இல்லாமல் தரம் தாழ்த்தி பேசி உள்ளார். இவ்வாறு பேசுவது அவர் பதவிக்கு அழகு அல்ல. நீங்கள் நடத்திய ஆடம்பர திருமணம் பற்றி நாட்டு மக்களுக்கு நன்றாக தெரியும்.

மதுரையில் எந்த அமைச்சரது குடும்பத்திலும் இது போன்று ஆடம்பரமாக திருமணம் நடந்ததில்லை. இது குறித்து எடப்பாடியார் பேசுவதில் எந்த தவறும் இல்லை. அமைச்சர் மூர்த்தி பழையதை நினைத்துப் பார்க்க வேண்டும். எங்க ஆட்சியில் கனிமவளத் துறை, வணிகவரித் துறையில் நடைபெற்ற புள்ளி விவரங்கள் குறித்து உங்களுடன் விவாதிக்க நான் தயாராக உள்ளேன். கடந்த ஒன்னறை ஆண்டு காலம் நாட்டு மக்களுக்கு நீங்கள் செய்த சேவையை விவாதிக்க தயாரா?

கடந்த நான்கு ஆண்டு கால ஆட்சிக் காலத்தில் எடப்பாடியார் அனைவரையும் அரவணைத்து சென்றார். எடப்பாடியாரிடம் உதவி கேட்காதவர்கள் யாரும் கிடையாது. அமைச்சர் மூர்த்தி பதவி மோகத்தில் பேசுவதை மக்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். அப்படி எடப்பாடியார் கூறியது தவறு என்றால் நீங்கள் நீதி மன்ற அவமதிப்பு வழக்கு தொடரலாம். ஆடம்பர திருமணம் என்பது ஊரே அறிந்த விஷயம். எதிர்க்கட்சித் தலைவருக்கு யாரும் எழுதி கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. ஒரு அமைச்சராக இருந்து கொண்டு மக்கள் முகம் சுளிக்கும் வகையில் நடத்திய திருமணம் பற்றி நியாயம் கேட்க எதிர் கட்சி தலைவருக்கு தார்மீக உரிமை உண்டு. அரசியல் நாகரீகம் கருதி அநாகரிகமான முறையில் பேசுவதை அமைச்சர் மூர்த்தி நிறு த்திக் கொள்ள வேண்டும்.

மதுரையில் முன்னாள் முதல்வர் எடப்பாடியாரை வைத்து 120 ஜோடி ஏழை,எளிய மக்களை தேர்வு செய்து திருமணத்தை நடத்தினோம். ஆனால் நீங்கள் முதல்வரை அழைத்து வந்து உங்கள் வீட்டு திருமணத்தை நடத்தி உள்ளீர்கள். ஜல்லிக்கட்டு விழாவை முதன் முதலில் ஒரு முதல்வர் பச்சை கொடி அசைத்து துவக்கி வைத்தார் என்றால் அது எடப்பாடியாரையே சாரும். ஜல்லிக்கட்டு விழாவிற்கு சாப்பாடு போட்டோம் என்று கூறுகிறீர்கள். கொரோனா காலத்தில்தான் நாங்கள் முகம் தெரியாத நபர்களுக்கு உணவு வழங்கினோம். இவ்வாறு அவர் கூறினார்.

## பொது அறிவிப்பு

காரைக்குடி சம்மந்தர் தெரு சுப்பிரமணியபுரம் 5வது வீதி வடக்கு விஸ்தாரிப்பில் வசிக்கும் வழக்குரைஞர் L.ரமேஷ் கொடுக்கும், வழக்குரைஞர் அறிவிப்பு யாதனில் எனது கட்சிகாரர் திரு சரவணன் த/பெ நாச்சியப்பன் ஆலங்குடியை சேர்ந்தவர் அவர்களுடைய சொத்து ஆவணம் கடந்த 10/08/2022 அன்று மானகிரி பேருந்து நிறுத்தம் அருகில் காணாமல் போய்விட்டது. சர்வே எண்: 175/3 ஆவணம் எண் 499/1978 காரைக்குடி 2 சார்பதிவாளர் அலுவலகம் கீழ் கண்டவர்கள் மேல் கண்ட ஆவணத்தை கண்டுபிடித்தால் கீழ் கண்ட முகவரிக்கு தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிக்கு.
L.ரமேஷ், வழக்ரைஞர்
காரைக்குடி.

## அசல் நிலம்/சொத்து ஆவணம் காணவில்லை

1/233, கிழக்குத்தெரு, செங்கப்படை கிராமம்,கள்ளிக்குடி வட்டம், மதுரை மாவட்டம் என்ற முகவரியில் வசிக்கும் திரு.லேட்.பொன்னையா அவர்களின் மகன் ஆதார் அட்டை எண்.3180 7538 4186, சுமார் 55 வயதுடைய பொ.ராஜகுரு ஆகிய நான் இதன் மூலம் பொது மக்களுக்கு தெரிவித்துக் கொள்வது யாதெனில் திருமங்கலம் சார் பதிவாளர் அலுவலகத்தில் 1980-ல் பதிவு செய்யப்பட்ட எனது அசல் குடும்ப பாகவிஸ்தி விடுதலை ஆவணம் (ஆவணஎண்:2548/1980 dt 04.10.1980) தேதி 05.09.2022 அன்று செங்கப்படை விஏஓ அலுவலம் அருகேயுள்ள ஜெராக்ஸ் கடை பகுதியில் வைத்து தொலைந்து விட்டது. யாரேனும் அதைக் கண்டுபிடித்தால் எனது 6383101235 கைபேசி எண்ணிற்கு அல்லது கீழ்கண்ட முகவரிக்கு தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொ.ராஜகுரு, த/பெ.லேட்.பொன்னையா
1/233,கிழக்குத்தெரு, செங்கப்படை கிராமம்
கள்ளிக்குடி வட்டம், மதுரை மாவட்டம்.
கைபேசி:6383101235.



தேனி மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் அனைத்து துறைகளின் கட்டுப்பாட்டில் உள்ள கட்டிடங்களின் தரத்தினை உறுதி செய்வது தொடர்பான ஆய்வு கூட்டம் கலெக்டர் முரளீதரன் தலைமையில் நடைபெற்றது. அருகில் மாவட்ட வருவாய் அலுவலர் சுப்பிரமணியன், திட்ட இயக்குனர் தண்டபாணி உட்பட பலர் உள்ளனர்.

# போடி குரங்கணி மலைச்சாலையில் இரு சக்கர வாகன விபத்து: 3 பேர் காயம்

போடி, அக். 2:

போடி குரங்கணி மலைச்சாலையில் இரு சக்கர வாகனம் விபத்துக்குள்ளானதில் தாய் மகள்கள் உட்பட 3 பேர் காயமடைந்தனர்.

மதுரை கான்பாளையத்தில் வசிப்பவர் அமிர்தராஜ் மனைவி பத்மபிரியா (44). இவரது மகள்கள் ஜீவ ஆதித்யா (18). பத்மினி (17). பள்ளி விடுமுறை விட்ட நிலையில் மூன்று பேரும் போடிக்கு வந்துள்ளனர். சனிக்கிழமை போடியிலிருந்து குரங்கணிக்கு ஒரே இரு சக்கர வாகனத்தில் மூன்று பேரும் சென்றுள்ளனர். வாகனத்தை பத்மபிரியா ஓட்டியுள்ளார்.

மலைச்சாலை வளைவில் வேகமாக சென்று பிரேக் போட்டதில் சாலையிலிருந்த மண்ணில் வாரிவிட்டதில் இரு சக்கர வாகனம் விபத்துக்குள்ளானது. இதில் மூன்று பேரும் கீழே விழுந்து காயம் ஏற்பட்டது. மூன்று பேரும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

விபத்து குறித்து பத்மபிரியாவின் தங்கை சுலோக்சனா (42) கொடுத்த புகாரின் பேரில் குரங்கணி போலீஸார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

# சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு மூத்த வாக்காளர்களுக்கு பாராட்டு சான்றிதழ்

## சிவகங்கை கலெக்டர் மதுசூதன் ரெட்டி வழங்கினார்



சிவகங்கை, அக். 02-

சிவகங்கை மாவட்டம், சிவகங்கை வட்டம், பெருங்குடி ஊராட்சியில சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் மூலம் ஒருங்கிணைந்த வளாகத்தில் முதியோர் தின விழா, மாவட்ட கலெக்டர் மதுசூதன் ரெட்டி, தலைமையில், சர்வதேச முதியோர் தினத்தையொட்டி, மூத்த வாக்காளர்களின் தொடர் பங்களிப்பை கௌரவப்படுத்தி, பாராட்டுச் சான்றிதழை வழங்கினார்.

அப்போது அவர் பேசுகையில், சிவகங்கை மாவட்டத்தில் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை கட்டுப்பாட்டு கீழ் மேலமங்களம், காமராஜர் காலனி சிவகங்கை, காரைக்குடி, மதகுபட்டி, கண்டவராயன்பட்டி ஆகியப் பகுதிகளில் விடுதிகள் மற்றும் முதியோர் இல்லங்கள் செயல்பட்டு வருகிறது. இதுதவிர, பதிவு செய்யப்பட்ட தனியார் விடுதிகள் மானாமதுரை, கல்லல், பூவந்தி, சிவகங்கை போஸ் ரோடு, கீழசெவல்பட்டி ஆகியப் பகுதிகளிலும் செயல்பட்டு வருகிறது. இது போன்று முதியோர்களின் நலனை பாதுகாத்து, அவர்களுக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் வழங்கப்பட்டு அவர்களை பாதுகாக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என கலெக்டர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், சர்வதேச முதியோர் தினத்தையொட்டி, மூத்த வாக்காளர்களின் தொடர் பங்களிப்பை 21 நபர்களை கௌரவப்படுத்தி, பாராட்டுச் சான்றிதழை கலெக்டர் வழங்கினார். அதனைத்தொடர்ந்து, அங்குள்ள முதியோர்களுக்கு மதிய உணவினை மாவட்ட கலெக்டர் பரிமாறினார். இந்நிகழ்ச்சியில் சிவகங்கை சட்டப்பணிகள் ஆணைக்குழு செயலாளர் சார்பு நீதிபதி எம்.பரமேஸ்வரி, மாவட்ட சமூகநல அலுவலர் அன்புகுளோரியா, ஒருங்கிணைந்த கிராம சமுதாய முன்னேற்ற சங்க இயக்குநர் ஜீவானந்தம், துணை இயக்குநர் (மருத்துவப் பணிகள்) மரு.விஜய்சந்திரன், யோகா பயிற்சி ஆசிரியர் மரு.தங்கம், வட்டாட்சியர்கள் ப.தங்கமணி (சிவகங்கை), கண்ணன் (தேர்தல் பிரிவு), ஊராட்சி மன்றத்தலைவர்கள் சுரேஷ்குமார் (பெருங்குடி), சரஸ்வதி (மதகுபட்டி) மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# மூதாட்டி மீது வழக்கு பதியவில்லை: கோவை மாவட்ட எஸ்.பி. விளக்கம்

கோவை, அக். 02-

மூதாட்டி மீது வழக்கு பதியவில்லை என்று கோவை மாவட்ட எஸ்.பி. விளக்கமளித்துள்ளார்.

கோவை காந்திபுரத்தில் இருந்து பாலத்துறைக்கு அரசு டவுன் பஸ் இயக்கப்பட்டு வருகிறது. சம்பவத்தன்று காலை அந்த பஸ் காந்திபுரத்தில் இருந்து பாலத்துறையை நோக்கி புறப்பட்டது. பஸ்சில் வால்பாறையை சேர்ந்த வினித் என்பவர் கண்டக்டராக இருந்தார். பஸ் மதுக்கரை மார்க்கெட் அருகே வந்தபோது பாலத்துறைக்கு செல்வதற்காக காத்திருந்த துளசியம்மாள்(68) என்ற மூதாட்டி ஏறினார்.

டவுன் பஸ்சில் பயணிக்க பெண்களுக்கு டிக்கெட் இலவசம் என்பதால், கண்டக்டர் பஸ்சில் ஏறியதும் மூதாட்டிக்கு இலவச டிக்கெட்டை கிழித்து கொடுத்தார். அப்போது அந்த மூதாட்டி பணத்தை எடுத்து கண்டக்டரிடம் நீட்டினார்.

உடனே கண்டக்டர் பாட்டிமா இதில் பயணிக்க உங்களுக்கு டிக்கெட் இலவசம். காசு வேண்டாம். நீங்கள் வைத்து கொள்ளுங்கள் என்றார். ஆனால் அந்த மூதாட்டி நீ பணத்தை பெற்று கொண்டு டிக்கெட் கொடு. இல்லையென்றால் எனக்கு டிக்கெட் வேண்டாம் என தெரிவித்தார்.

இருப்பினும் கண்டக்டர் டிக்கெட்டை மூதாட்டியிடம் கொடுக்க முயன்றார். ஆனால் மூதாட்டியோ அதனை வாங்க மறுத்ததுடன், நான் ஓசியில் பயணம் செய்ய மாட்டேன். நான் டிக்கெட்டுக்கு பணம் தருவேன். காசு இல்லாம தரும் டிக்கெட் எனக்கு

வருவாய் கோட்டாட்சியர் மற்றும்
உட்கோட்ட நடுவர் நீதிமன்றம்,
திண்டுக்கல்
ந.க.எண்.7960/2022/ஆ6
இ.ப.வ.எண்.56/2022
சரவணன்,
த/பெ. வெள்ளைச்சாமி,
78/3, வடக்கு தெரு,
சாமியார்பட்டி,
கீழக்கோட்டை கிராமம்,
ஆத்தூர் வட்டம்,
திண்டுக்கல் மாவட்டம்.
...... மனுதாரர்
//எதிர்//
வருவாய் கோட்டாட்சியர் மற்றும்
உட்கோட்ட நடுவர் திண்டுக்கல்
அறிவிப்பு
மேற்படி வழக்கில் மனுதாரர் பாட்டி தாயம்மாள் என்பவர் கடந்த 19.10.1999 ம் தேதி ஷை முகவரியில் இறந்ததை பதிவு செய்ய வேண்டி வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி இறப்பு தொடர்பாக யாருக்கேனும் ஆட்சேபனை ஏதும் இருப்பின் திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் 15 தினங்களுக்குள் நேரில் ஆஜராகி ஆட்சேபனையை தெரிவித்துக்கொள்ளலாம்.தவறும்பட்சத்தில் மேற்படி மனு ஒருதலைபட்சமாக பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பதை அறியவும்.
வருவாய் கோட்டாட்சியர்
திண்டுக்கல்

உயர்திரு வருவாய் கோட்டாட்சியர்
நீதிமன்றம் வருவாய் கோட்டாட்சியர்
அலுவலகம், மேலூர், (இருப்பு
வெள்ளரிபட்டி, மேலூர்)
அ.தி.மு. எண்: 7189/2022/அ3
சி.ரமேஷ், S/o. சிந்தாமணி,
156, வெள்ளலூர்,
வெள்ளலூர் கிராமம்,
மேலூர் வட்டம், மதுரை மாவட்டம்.
....மனுதார்
//எதிரிடை //
உயர்திரு. சார்பதிவாளர் அவர்கள்
மேலூர்
....... எதிர்மனுதாரர்
மனுதார் சி.ரமேஷ் என்பவரின் அப்பத்தா கல்யாணி ஆச்சி 15.03.2013ம் தேதியில் மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், வெள்ளலூர் கிராமம், கிராம வீட்டில் இறந்ததை அவரது இறப்பை வெள்ளலூர் கிராம பதிவேட்டில் பதிவு செய்யக்கோரி மேற்படி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்து மனு சான்றிதழ் வழங்க கோரி உள்ளோம். இது குறித்து யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இன்றிலிருந்து 15 தினங்களுக்குள் மேற்படி மேலூர் வருவாய் கோட்டாட்சியர் ( இருப்பு வெள்ளரிப்பட்டி மேலூர்) அலுவலகத்தில் தெரிவிக்கவும் என இதன் மூலம் அறிவிக்கலாயிற்று.
சி. ரமேஷ்
மனுதாரர்

உயர்திரு வருவாய் கோட்டாட்சியர்
நீதிமன்றம் வருவாய் கோட்டாட்சியர்
அலுவலகம், மேலூர், (இருப்பு
வெள்ளரிபட்டி, மேலூர்)
அ.தி.மு. எண்: 7188/2022/அ3
சி.ரமேஷ், S/o. சிந்தாமணி,
156, வெள்ளலூர்,
வெள்ளலூர் கிராமம்,
மேலூர் வட்டம், மதுரை மாவட்டம்.
....மனுதார்
//எதிரிடை //
உயர்திரு. சார்பதிவாளர் அவர்கள்
மேலூர்
....... எதிர்மனுதாரர்
மனுதார் சி.ரமேஷ் என்பவரின் தாயார் சரோஜா 17.11.1981ம் தேதியில் மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், வெள்ளலூர் கிராமம், கிராம வீட்டில் இறந்ததை அவரது இறப்பை வெள்ளலூர் கிராம பதிவேட்டில் பதிவு செய்யக்கோரி மேற்படி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்து மனு சான்றிதழ் வழங்க கோரி உள்ளோம். இது குறித்து யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இன்றிலிருந்து 15 தினங்களுக்குள் மேற்படி மேலூர் வருவாய் கோட்டாட்சியர் ( இருப்பு வெள்ளரிப்பட்டி மேலூர்) அலுவலகத்தில் தெரிவிக்கவும் என இதன் மூலம் அறிவிக்கலாயிற்று.
சி. ரமேஷ்
மனுதாரர்

வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றம்,
இராமநாதபுரம்
மரியம்பீவி,
க/பெ.மைதீன் பக்கீர்,
9/200, கிழக்குத்தெரு,
மண்டபம், மண்டபம் குரூப்,
இராமநாதபுரம் வட்டம்-மாவட்டம்
.......... மனுதார்
எதிர்
கோட்டாட்சியர் அவர்கள்,
பிறப்பு இறப்பு பதிவுஅதிகாரி,
கோட்டாட்சியர் அலுவலகம்,
இராமநாதபுரம்.
.......எதிர்மனுதார்
அறிவிப்பு
மேற்படி எனது தாய் கமர்நிஷா என்பவர் மேற்கண்ட முகவரியில் கடந்த 07.12.2002 அன்று எனது வீட்டில் வைத்து இறந்துள்ளார். அப்போது எனது அறியாமையின் காரணமாக எனது தாயின் இறப்பை மேற்படி எதிர்மனுதார் அலுவலகத்தில் பதிவு செய்யாமல் விடுபட்டு போனது. எனவே, எனது தாய் கமர்நிஷா இறப்பை எதிர்மனுதாரர் அலுவலக பிறப்பு இறப்பு பதிவேட்டில் இறப்பை பதிவு செய்ய உத்தரவிடக்கோரி இராமநாதபுரம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளேன். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் மேற்படி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்துகொள்ளலாம் என இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது.
மரியம்பீவி,
மனுதாரர்.


தேவகோட்டை உட்கோட்ட
நிர்வாக நடுவர் நீதிமன்றம்
ந.மு.எண்.7446/2022
சிவகங்கை மாவட்டம், காரைக்குடி வட்டம், கதவு எண் 1/333(2), புளியங்குடியிருப்பு பாணான்வயல், பெரியகோட்டை, காரைக்குடி என்ற முகவரியில் வசித்து வரும் சுப்பிரமணி த/பெ. செல்லையா என்பவரின் தந்தை செல்லையா த/பெ.சின்னையா என்பவர் கடந்த 09.03.2003 அன்று மேற்படி முகவரியில் இறந்து விட்டார். மேற்படி இறப்பு பதிவு செய்யப்படவில்லை. இந்த இறப்பினை பதிவு செய்யக் கேட்டு தேவகோட்டை உட்கோட்ட நிர்வாக நடுவர் மற்றும் உதவி ஆட்சியர் அலுவலகத்தில் மனு செய்யப்பட்டுள்ளது. மேற்படி இறப்பினை பதிவு செய்வது தொடர்பாக எவருக்கேனும் ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு செய்யப்பட்ட நாளிலிருந்து 10 தினங்களுக்குள் தேவகோட்டை உட்கோட்ட நிர்வாக நடுவர் மற்றும் உதவி ஆட்சியர் அலுவலகத்தில் தங்களது ஆட்சேபணையை எழுத்துப் பூர்வமாக தெரிவிக்கலாம். அவ்வாறு ஆட்சேபணை ஏதும் வரப்பெறவில்லை எனில் விசாரணை மற்றும் முன்னிடப்பட்டுள்ள ஆவணங்களின் அடிப்படையில் மனுதார் கோரியவாறுள்ள இறப்பினை பதிவு செய்ய உத்தரவுகள் பிறப்பிக்க கோரப்படும் என்ற விபரம் இதன் மூலம் அறிவிக்கலாயிற்று.
S.முருகன் M.A.,B.L.,
வழக்கறிஞர், காரைக்குடி.

தேவகோட்டை உட்கோட்ட
நிர்வாக நடுவர் நீதிமன்றம்
ந.மு.எண்.7447/2022
சிவகங்கை மாவட்டம், காரைக்குடி வட்டம், கதவு எண் 1/333, புளியங்குடியிருப்பு பாணான்வயல், பெரிய கோட்டை என்ற முகவரியில் வசித்து வரும் மருதமுத்து த/பெ. கருப்பையா என்பவரின் மாமனார் கருப்பன் த/பெ.விடத்தன் என்பவர் கடந்த 05.09.1999 அன்று மேற்படி முகவரியில் இறந்து விட்டார். மேற்படி இறப்பு பதிவு செய்யப்படவில்லை. இந்த இறப்பினை பதிவு செய்யக் கேட்டு தேவகோட்டை உட்கோட்ட நிர்வாக நடுவர் மற்றும் உதவி ஆட்சியர் அலுவலகத்தில் மனு செய்யப்பட்டுள்ளது. மேற்படி இறப்பினை பதிவு செய்வது தொடர்பாக எவருக்கேனும் ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு செய்யப்பட்ட நாளிலிருந்து 10 தினங்களுக்குள் தேவகோட்டை உட்கோட்ட நிர்வாக நடுவர் மற்றும் உதவி ஆட்சியர் அலுவலகத்தில் தங்களது ஆட்சேபணையை எழுத்துப் பூர்வமாக தெரிவிக்கலாம். அவ்வாறு ஆட்சேபணை ஏதும் வரப்பெறவில்லை எனில் விசாரணை மற்றும் முன்னிடப்பட்டுள்ள ஆவணங்களின் அடிப்படையில் மனுதார் கோரியவாறுள்ள இறப்பினை பதிவு செய்ய உத்தரவுகள் பிறப்பிக்க கோரப்படும் என்ற விபரம் இதன் மூலம் அறிவிக்கலாயிற்று.
S.முருகன் M.A.,B.L.,
வழக்கறிஞர், காரைக்குடி.

தேவகோட்டை உட்கோட்ட
நிர்வாக நடுவர் நீதிமன்றம்
ந.மு.எண்.7438/2022
சிவகங்கை மாவட்டம், காரைக்குடி வட்டம், கதவு எண் 39/25, காளவாய்பொட்டல் 100அடி ரோடு, காரைக்குடி என்ற முகவரியில் வசித்து வரும் சேவுகன் த/பெ. சின்னையா என்பவரின் தந்தை சின்னையா த/பெ. கிருஷ்ணன் என்பவர் கடந்த 02.03.2006 அன்று மேற்படி முகவரியில் இறந்து விட்டார். மேற்படி இறப்பு பதிவு செய்யப்படவில்லை. இந்த இறப்பினை பதிவு செய்யக் கேட்டு தேவகோட்டை உட்கோட்ட நிர்வாக நடுவர் மற்றும் உதவி ஆட்சியர் அலுவலகத்தில் மனு செய்யப்பட்டுள்ளது. மேற்படி இறப்பினை பதிவு செய்வது தொடர்பாக எவருக்கேனும் ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு செய்யப்பட்ட நாளிலிருந்து 10 தினங்களுக்குள் தேவகோட்டை உட்கோட்ட நிர்வாக நடுவர் மற்றும் உதவி ஆட்சியர் அலுவலகத்தில் தங்களது ஆட்சேபணையை எழுத்துப் பூர்வமாக தெரிவிக்கலாம். அவ்வாறு ஆட்சேபணை ஏதும் வரப்பெறவில்லை எனில் விசாரணை மற்றும் முன்னிடப்பட்டுள்ள ஆவணங்களின் அடிப்படையில் மனுதார் கோரியவாறுள்ள இறப்பினை பதிவு செய்ய உத்தரவுகள் பிறப்பிக்க கோரப்படும் என்ற விபரம் இதன் மூலம் அறிவிக்கலாயிற்று.
S.முருகன் M.A.,B.L.,
வழக்கறிஞர், காரைக்குடி.

உட்கோட்ட நடுவர் நீதிமன்றம்
/வருவாய் கோட்டாட்சியர்
அலுவலகம், பரமக்குடி.
ந.க.பி.6 / 8366 / 2022
திருமதி.வள்ளி,
க/பெ.சண்முகம்,
3/9,கீழச்சிறுபோது,
முதுகுளத்தூர்.
அறிவிப்பு
மேற்படி முகவரியில் வசிக்கும் மனுதாரராகிய நான் எனது மகன் காளிதாஸ் 07.03.1984 அன்று முதுகுளத்தூர் வட்டம் கீழச்சிறுபோது பிறந்ததை பதிவு செய்ய கோரி இந் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன்.எனது மகன் பிறந்ததை அறியாமையின் காரணமாக பதிவு செய்ய தவறி விட்டேன்.மேற்படி விசாரனைக்கான வாய்தா எதிர்வரும் 03.10.2022 ம் தேதியன்று பரமக்குடி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற உள்ளது. இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் அறிவிப்பு வெளியான 15 தினங்களுக்குள் காலை 10. 00 மணிக்கு மேற்படி நடுவர் முன்பு ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ளலாம்.
மனுதாரர்,
வள்ளி

Printed Published and Owned
by S.Manimaran,
Printed at Manimaran
Printers at 9, Dindigul
Main Road, vilangudi,
Madurai - 625 018.
Phone: 0452- 2668165,
0452- 2668185,
E-Mail: maduraiedi@thinaboomi.com
RNI Regn. No.61494 / 94



மதுரை அருள்மிகு மீனாட்சி அம்மன் திருக்கோவிலில் நடைபெற்று வரும் நவராத்திரி திருவிழாவில் நேற்று அன்னை மீனாட்சி அர்த்தநாரீஸ்வரர் திருக்கோலத்தில் பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.

# படைப்புழு தாக்குதலில் இருந்து மக்காச்சோளப்பயிரை பாதுகாக்கும் வழிமுறைகள்

## வேளாண்மை உதவி இயக்குனர் காளிமுத்து அலோசனை

**ஒட்டன்சத்திரம்.அக்.02**

திண்டுக்கல் மாவட்டம், தொப்பம்பட்டி வட்டார பகுதிகளில் உள்ள விவசாய நிலங்களில் கோடை உழவுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு, ரபி பருவத்திற்கு விதைப்பு மேற்கொள்ள விவசாயிகள் தயாராக உள்ளனர். இந்நிலையில் அமெரிக்கன்படைப் புழு என்ற பூச்சி மக்காச்சோளப்பயிரில் அதிக பாதிப்பினை ஏற்படுத்தி, மகசூல் இழப்பை ஏற்படுத்தும். இதன் தாய் அந்துப்பூச்சியானது இலையின் அடிப்பகுதியில் 1500 முதல் 2000 முட்டைகளை ஈடுகின்றது. முட்டையிலிருந்து வெளிவரும் புழுக்கள் முதலில் இலையின் அடிப்பகுதியில் சுரண்டி சேதப்படுத்தும், இதனால் பயிர்கள் பச்சயம் இழந்து, இலைகள் வெண்மையாக காணப்படும்.

இப்புழுக்கள் ஒரு செடியிலிருந்து, அடுத்த செடிக்கு பரவும் தன்மை வாய்ந்தது. இப்புழுக்களின் ஆயுள்காலம் 30 நாட்கள் ஆகும். இதனால் ஒரே பயிர் சாகுபடி செய்யாமல் பயிர் சுழற்சி முறையை விவசாயிகள் கையாள வேண்டும். கோடை உழவுப்பணி முடிந்து, கடைசி உழவின் போது, ஏக்கருக்கு 100 கிலோ வேப்பம் புன்னாக்கு இட வேண்டும். பயிர் சாகுபடிக்கு பின் இனக்கவர்ச்சி பொறிகளை ஹெக்டேருக்கு 12 என்ற எண்ணிக்கையில் அமைத்து, ஆண் அந்து பூச்சிகளை கவர்ந்து அழிக்கலாம். சூரியகாந்தி, எள், தட்டைப்பயிறு, துவரை போன்ற பயிர்களை வரப்பு பயிராக (2-3 வரிசைகள்) விதைப்பதன் மூலம் நன்மை செய்யும் பூச்சிகள், ஒட்டுண்ணிகள் இலை விழுங்கிகளை கவர்ந்து இழுக்கலாம். 20-25 நாட்கள் உள்ள பயிர்களுக்கு உயிரியல் பூஞ்சானகொல்லியான மெட்டாரைசியம் அனிசோபைலி 80 கிராம் வீதம் 10 லிட்டர் தண்ணீரில் கலந்து, அதனுடன் வேம்பு சார்த்து, அசாடிராக்டின் மருந்தை 50 மில்லி கலந்து முதல் தெளிப்பை மேற்கொள்ளவும், 40 முதல் 45 நாட்கள் உள்ள பயிருக்கு குளோர் ஆன்டரிநில்ப்ரோல் 18.5 எஸ்.சி 4 மில்லி அல்லது ஸ்பைனிடோரோம் 11.7 எஸ்.சி 5 மில்லி வீதம் ஏதேனும் ஒரு பூச்சிக்கொல்லியை 10 லிட்டர் தண்ணீரில் கலந்து, பயிரின் குருத்துப்பகுதியில் படுமாறு கைத்தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும். விதைப்பிற்கு முன் பிவேரியாபேசியானா என்ற விதை நேர்த்தி மருந்தை ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் வீதம் கலந்து விதைக்க வேண்டும். இந்த தொழிநுட்ப முறைகளை கையாண்டால் மக்காச் சோளப்பயிரில் அமெரிக்கன் படைப்புழு தாக்குதலை மிகவும் சுழபமாக கட்டுப்படுத்தலாம் எனவும், மேலும் தகவல்களுக்கு தொப்பம்பட்டி வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தை தொடர்பு கொள்ளலாம் என வேளாண்மை உதவி இயக்குனர் காளிமுத்து தெரிவித்துள்ளார்.

# அதிமுக வரவேற்பில் செல்போன் - பணம் திருடிய 2 பேர் கைது

**திருமங்கலம்.அக்.02.**

சில தினங்களுக்கு முன்பு மதுரை மற்றும் சிவகாசியில் அ.தி.மு.க. சார்பில் நடைபெற்ற கண்டன பொதுக் கூட்டங்களில் பங்கேற்பதற்காக முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி மதுரை வருகை தந்தார். அவருக்கு திருமங்கலம் மற்றும் பல்வேறு பகுதிகளில் அதிமுகவினர் திரண்டு வந்து வரவேற்பு கொடுத்தனர்.

அப்போது திருமங்கலம் பகுதியில் நடைபெற்ற வரவேற்பு நிகழ்ச்சியின் போது கூட்ட நெரிசலை பயன்படுத்தி அதிமுக பிரமுகர்களிடம் மர்ம நபர்கள் 3 செல்போன்கள், மற்றும் ரூ. 35 ஆயிரம் ரொக்கத்தை அபேஸ் செய்து கொண்டு தப்பியோடினர்.

இதுதொடர்பாக அச்சம்பட்டியைச் சேர்ந்த சக்திபாபு என்பவர் திருமங்கலம் தாலுகா போலீசில் புகார் செய்தார்.அதன்பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்து தீவிர விசாரணை நடத்திய தில் கூட்டத்தை பயன்படுத்தி செல்போன், பணம் திருடியவர்கள் தஞ்சாவூரை சேர்ந்த நீலகண்டன், தேவகோட்டையைச் சேர்ந்த ராகுல் காந்தி என தெரியவந்தது.

இதையடுத்து 2 பேரையும் போலீசார் கைது செய்து விசாரித்தனர். இந்த விசாரணையில் இவர்கள் 20-க்கும் மேற்பட்ட குழுவாக செயல்பட்டு தமிழகத்தில் எந்த கட்சி பொதுக்கூட்டம் ஆர்ப்பாட்டம் நடத்தினாலும் கூட்ட நெரிசலை பயன்படுத்தி செல்போன், பணத்தை திருடி வந்தது தெரியவந்தது. கைதான 2 பேரிடமும் இந்த சம்பவத்தில் தொடர்புடைய மற்ற நபர்கள் குறித்து போலீசார் தற்போது தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

# அருப்புக்கோட்டையில் விஸ்வ பிரம்ம விரத தின விழா

**அருப்புக்கோட்டை அக் 02.**

அருப்புக்கோட்டை மாவட்ட விஸ்வகர்மா பொற்கொல்லர் சங்க கட்டிடத்தில் விஸ்வ பிரம்ம ஜெயந்தி விழா மாவட்ட தலைவர் துரைப்பாண்டி தலைமையில் நடைபெற்றது. துணைத்தலைவர் பொன்ராஜ் முன்னிலை வகித்தார்.

செயலாளர் நவிராஜன் வரவேற்று பேசினார் .சங்க உறுப்பினர்கள் சந்திரசேகர் விஸ்வகர்மாவின் ஐவர்ணக் கொடி ஏற்றினார். நிகழ்ச்சியில் அருப்புக்கோட்டை டிஎஸ்.பி .சகாயம் ஷோஸ். டவுன் காவல் ஆய்வாளர் பாலமுருகன், தொழிலாளர் உதவி ஆய்வாளர் உமா மகேஸ்வரன், வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் ராஜா பாபு, கைவினைஞர் சங்கத்தின் மாவட்ட தலைவர் இளங்கோ உட்பட பலர் பேசினார்கள். மாவட்ட துணைச் செயலாளர் கருத்த பாண்டி உட்பட பங்கேற்று பேசினார்கள். நிறைவாக பொற்கொல்லர் சங்க பொருளாளர் ரமேஷ் நன்றி கூறினார்.



திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே செந்துறையில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் விவசாயிகளின் நிலங்களுக்கு குறைந்த கட்டணத்தில் பயன்படுத்தப்படும் டிராக்டர் பல மாதங்களாக பயன்பாடின்றி கிடப்பதாக புகார் எழுந்துள்ளது.

# தண்டவாளத்தில் தலை வைத்து ஒருவர் தற்கொலை

**திருமங்கலம்.அக்.02.**

மதுரை மாவட்டம் திருமங்கலம் அருகே குண்டாறு பாலம் பகுதியில் உள்ள ரயில் தண்டவாளத்தில் நேற்று இரவு 35 வயது மதிக்கத்தக்க வாலிபர் தலை வைத்து படுத்துள்ளார். அப்போது அந்த வழியாக மதுரை நோக்கி சென்ற ரயில் அவர் மீது ஏறிச் சென்றது. இதில் தலை துண்டாகி அந்த நபர் பரிதாபமாக இறந்தார். இதுகுறித்து தகவல் அறிந்த விருதுநகர் ரயில்வே போலீஸ் சப் -இன்ஸ்பெக்டர் சுரேஷ் குமார் மற்றும் போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இறந்தவர் யார்? எந்த ஊரை சேர்ந்தவர்? எதற்காக தற்கொலை செய்து கொண்டார்? என ரயில்வே போலீசார் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# நர்சிங் மாணவி உட்பட இருவர் தற்கொலை

**திருமங்கலம்.அக்.02.**

திருமங்கலம் அருகே உள்ள நெடுங்குளம் கிராமத்தைச் சேர்ந்தவர் ரெங்கராஜன். இவரது மகள் கிருத்திகா (வயது 17). இவர் விடத்தகுளத்தில் உள்ள பாட்டி வீட்டில் தங்கி இருந்து திருமங்கலத்தில் உள்ள நர்சிங் கல்லூரியில் படித்து வந்தார். சில மாதங்களாக கிருத்திகாவுக்கு அடிக்கடி வயிற்று வலி ஏற்பட்டதாக கூறப்படுகிறது. இதனால் சம்பவத்தன்று வாழ்க்கையில் விரக்தி அடைந்த கிருத்திகா வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் தூக்கு போட்டு தற்கொலை செய்து கொண்டார். இது குறித்து திருமங்கலம் தாலுகா போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

சிந்துப்பட்டி அருகே உள்ள நாட்டாமங்கலத்தைச் சேர்ந்தவர் பூமிராஜன். இவரது மனைவி கலா ராணி (45). இவர்களுக்கு 2 மகன், ஒரு மகள் உள்ளனர். கடந்த சில நாட்களாக கணவன்- மனைவியிடையே அடிக்கடி பிரச்சினை ஏற்பட்டது. இதனால் வாழ்க்கை விரக்தி அடைந்த கலாராணி சம்பவத்தன்று விஷம் குடித்து மயங்கினார். மதுரை அரசு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட அவர் சிகிச்சை பலனின்றி பரிதாபமாக இறந்தார். இதுகுறித்து சிந்துப்பட்டி போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# எஸ்.பி.ஐ. கார்டு பண்டிகைக்கால சலுகைகளை அறிவித்தது

**கோவை.அக்.02.**

பியூர்-பிளே கிரெடிட் கார்டு வழங்குனர்களில் இந்தியாவின் மிகப் பெரிய நிறுவனமான எஸ்பிஐ கார்ட், செப்டம்பர் 22, 2022 முதல் அக்டோபர் 31, 2022 வரையிலான 2022 ஆண்டின் பண்டிகைக் காலத்தில் இந்தியா முழுவதும் உள்ள தனது வாடிக்கையாளர்களுக்கு, கிளர்ச்சியூட்டும் அற்புதமான பல சலுகைகளை அணிவகுத்திருக்கிறது Tier 1, Tier 2 மற்றும் Tier 3 நகரங்களில் உள்ள ஆன்லைன் மற்றும் ஆஃப்லைன் வணிக நிலையங்கள் முழுவதிலும் 1600+ க்கும் மேற்பட்ட சலுகைகளை வழங்கி, பண்டிகை கால கொண்டாட்டங்களுக்கு கூடுதல் உற்சாகளித்து தனது வாடிக்கையாளர்களின் ஷாப்பிங் அனுபவத்தை மேம்படுத்துவதை SBI கார்டு தனது நோக்கமாகக் கொண்டுள்ளது. மற்றவற்றுக்கிடையில் எலெக்ட்ரானிக்ஸ், மொபைல்கள், ஃபேஷன் & லைஃப்ஸ்டைல், தங்க ஆபரணங்கள்,சுற்றுலா உட்பட்ட மற்றும் ஆன்லைன் சந்தைகள் போன்ற பல பிரபலமான பிரிவுகளில் இந்த மகிழ்ச்சியூட்டும் சலுகைகள் பரவலாக வழங்கப்படுகின்றன .

தேசிய அளவில் 70 க்கும் மேற்பட்ட எண்ணிக்கையில் சலுகைகள் மற்றும் 2600 நகரங்களில் 1550 பிராந்திய மற்றும் மிகச்சிறிய உள்ளூர் அமைவிடங்களுக்கான சலுகைகள் ஆகிய அனைத்தும் SBI கார்டு வாடிக்கையாளர்களின் 2022 ஆம் ஆண்டுக்கான பண்டிகைகால சலுகைகளில் உள்ளடங்கியுள்ளன. பண்டிகைகால சலுகையின் ஒரு பகுதியாக பல்வேறு கூட்டாளிகளின் பிராண்டுகளின் மீது 22.5% வரை ரொக்கச்சலுகையைப் பெற்று வாடிக்கையாளர்கள் பயனடையலாம்.

# எல் ஐ சி முகவர்கள் ஆர்ப்பாட்டம்

**விருதுநகர் அக் 02.**

ஸ்ரீவில்லிபுத்தூரில் எல்ஐசி முகவர்கள் சங்கத்தின் சார்பாக பாலிசிதாரர்களுக்கு போனஸ் உயர்த்தி தரவும், தாமத கட்டணத்தை குறைக்கவும், ஜிஎஸ்டியை நீக்கவும், முகவர்களுக்கு பணிக்கொடை மற்றும் குழு காப்பீட்டு உயர்த்தவும், அனைத்து முகர்களுக்கும் மருத்துவ காப்பீடு வழங்கவும் உட்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு முகவர்கள் சாத்தப்பன் தலைமை வகித்தார். முகவர்கள் வள்ளிநாயகம், பாஸ்கரன், சிவக்குமார், ஆகியோர் முன்னிலை வகித்தனர். அலுவலக ஊழியர்கள் சங்க நிர்வாகிகள் மற்றும் 50க்கும் மேற்பட்ட முகவர்கள் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

# மாணவர்களுக்கான ‘விவோ இக்னைட்’ போட்டி ரூ.25 லட்சம் மதிப்புள்ள பரிசுகள் அறிவிப்பு

**சென்னை.அக்.02.**

உலக அளவில் சிறந்த ஸ்மார்ட்போன் பிராண்டாக திகழும் விவோ நிறுவனம் சமூக மாற்றத்தை கொண்ட வர விரும்பும் 8-ம் வகுப்பு முதல் 12-ம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு உதவிடும் வகையில் ‘விவோ இக்னைட்’ என்னும் முன்முயற்சி திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது. இந்த போட்டியில் வெற்றிபெறும் வெற்றியாளர்களுக்கு மொத்தம் 25 லட்ச ரூபாய் பரிசுகளையும் இந்நிறுவனம் அறிவித்துள்ளது.

இந்த முன்முயற்சி திட்டமானது, சமூகத்தில் உள்ள சிக்கல் மற்றும் பிரச்சினைகளை இந்தியா முழுவதும் உள்ள மாணவர்கள் தீர்ப்பதற்கும், அதற்கு பொருத்தமான அணுகுமுறை மற்றும் தொழில்நுட்பங்களை மேம்படுத்துவதற்கும், நாட்டின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் தேவையான அறிவியல் ஆலோசனைகளை ஒருங்கிணைத்து, பயன்படுத்துவதற்கும் உதவியாக இருக்கும். இது குறித்து விவோ இந்தியா நிறுவனத்தின் வர்த்தக ஆலோசனைப் பிரிவு தலைவர் பைகாம் டேனிஷ் கூறுகையில், ‘விகோ இக்னைட்’ என்பது இந்தியாவிற்கான நமது அர்ப்பணிப்பின் பிரதிபலிப்பாகும் - இது மக்களுக்கு அதிகாரமளிப்பதன் மூலம் மகிழ்ச்சியை அளிக்கிறது. இளம் கண்டுபிடிப்பாளர்களுக்கு அவர்களின் வாழ்க்கையின் துவக்கத்திலேயே புதுமைகளை நோக்கிய பயணத்தைத் தொடங்க நாங்கள் இந்த உலகளாவிய தளத்தை அமைத்துள்ளோம். நமது மாணவர்களின் புதுமையான மற்றும் பகுப்பாய்வு சிந்தனையைக் காண நாங்கள் ஆவலுடன் காத்திருக்கிறோம் என்று தெரிவித்தார்.

# சாயல்குடியில் பிளாஸ்டிக் ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி



**கடலாடி.அக்.02.**

சாயல்குடியில் பிளாஸ்டிக் ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. சாயல்குடி பேரூராட்சி அலுவலக கூட்டரங்கில் பிளாஸ்டிக் ஒழிப்பு விழிப்புணர்வு கருத்தரங்கம் பேரூராட்சி சேர்மன் ரமாரியப்பன் தலைமையில் செயல் அலுவலர் மா.சேகர் முன்னிலையில் நடைபெற்றது.

இளநிலை உதவியாளர் முத்துராமலிங்கம் அனைவரையும் வரவேற்றார். கருத்தரங்கில் பள்ளி மாணவ மாணவியர்கள்இ சுய உதவி குழுவினர் -பொதுமக்கள் பலர் கலந்துகொண்டனர். மேலும் சாயல்குடி பஜாரில் பிளாஸ்டிக் ஒழிப்பு குறித்து விழிப்புணர்வு ஊர்வலம் நடைபெற்றன. பேரூராட்சி அலுவலர்கள் கரிமுல்லா. திருநீலகண்டன் உள்பட பேரூராட்சி ஊழியர்கள் அனைவரும் கலந்துகொண்டனர்.

# தேனி, பெரியகுளத்தில் எல்.ஐ.சி லியாபி சங்க முகவர்கள் ஒய்வுநாள் போராட்டம்




தேனி.அக்.02.

தேனி மாவட்டம், தேனி, பெரியகுளத்தில் எல்.ஐ.சி லியாபி சங்க முகவர்கள் பல்வேறு கோரிக்கைகைளை வலியுறுத்தி நேற்று ஓய்வு நாள் போராட்டம் நடத்தினர்.

தேனி மாவட்டம் தேனியில் துணை அலுவலகம் முன்பு லியாபி சங்க செயலாளர் ராமமூர்த்தி தலைமையிலும், பொருளாளர் கலைச் செல்வன் முன்னிலையிலும் முகவர்கள் ஓய்வுநாள் போராட்டம் செய்தனர்.

பெரியகுளம் கிளை அலுவலகம் முன்பு லியாபி கிளை சங்க தலைவர் நல்லதம்பி தலைமையிலும், உபதலைவர் முருகேசன் முன்னிலையிலும் போராட்டம் செய்தனர்.

இப்போராட்டத்தில் எல்.ஐ.சி அலுவலக ஊழியர் சங்கம் சார்பில் ஷீலா, பிரேம் ஆகியோர் கலந்து கொண்டனர். மேலும் லியாபி சங்க கோட்ட இணை செயலாளர் நாகராஜன், கௌரவ ஆலோசகர், வட்டார தலைவர்கள் கருப்பையா, கணேசன், இணை செயலாளர்கள் கோவிந்தராஜ், கோபிநாத், உள்ளிட்ட முகவர் சங்க நிர்வாகிகள், முகவர்கள் கலந்து கொண்டனர்.

இப்போராட்டத்தில் பாலிசிதாரர்களுக்கு ஜி.எஸ்.டி ரத்து, பாலிசிக்கான போனஸை உயர்த்துதல், முகவர்களுக்கு கமிஷன் உயர்வு, குழு காப்பீட்டை 25 லட்சமாக உயர்த்துதல், நேரடி முகவர்களுக்கு ஊக்கத்தொகை வழங்குதல், முகவர் நலநிதி அமைத்தல், மன்ற முகவர்களுக்கு மட்டுமல்லாது அனைத்து முகவர்களுக்கும் அவர்களின் குடும்பத்தினருக்கும் மருத்துவக் காப்பீடு வழங்குதல், ஆயுள் காப்பீடு முதன்மை ஆலோசக முகவர்களுக்கு உரிய பலன்களை வழங்குதல் உள்ளிட்ட என்பன பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷங்களை எழுப்பினர். முகவர்கள் போராட்டத்தால் எல்.ஐ.சி அலுவலகத்தில் பணிகள் முழுவதும் நடைபெறாமல் பாதிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# இளம் தலைமுறையினர் மத்தியில் இதய நோய்கள் 200 சதவீதம் அதிகரிப்பு

## மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவர்கள் தகவல்

**மதுரை, அக்.02-**

நாட்பட்ட மற்றும் கடுமையான மனஅழுத்தம், உடல் உழைப்பற்ற மந்தமான வாழ்க்கை முறை மற்றும் ஆரோக்கியமில்லாத உணவுகள் ஆகியவை ஒருங்கிணைந்து இளைஞர்களின் இதய ஆரோக்கியத்தை வேகமாக சேதப்படுத்தி வருகின்றன. இதனால், இதய இரத்த நாள நோய்களினால் ஏற்படும் இந்தியாவின் சுமை பன்மடங்காக உயர்ந்து வருகிறது. கடந்த 20 ஆண்டுகளில் இந்தியாவில் அதிக வேலை செய்ய கூடிய 20 முதல் 50 வயதில் உள்ள மக்கள் மத்தியில் கடும் அச்சுறுத்தலாக இதய நோய்களில் 200 சதவீதம் அதிகரிப்பு காணப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக உலகளவில் இதய நோய்களுக்கான சுமையில் 50 சதவீத பங்களிப்பை நமது நாடு கொண்டிருக்கிறது. இருப்பினும், ஆரோக்கியமான வாழ்க்கைமுறை, சரியான சமயத்தில் மருத்துவ பரிசோதனை மற்றும் ஆரம்ப நிலையிலேயே சிகிச்சை ஆகியவையால் 80 சதவீத மாரடைப்பு மற்றும் பக்கவாதங்கள் வராமல் தடுக்க முடியும் என்று மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையத்தின் மருத்துவ நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.




உலக இதய தினம் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 29-ம் தேதி அனுசரிக்கப்படுகிறது. இதையொட்டி நடத்தப்பட்ட நிருபர்கள் சந்திப்பின் போது பேசிய மருத்துவமனையின் இதயவியல் துறை தலைவர் டாக்டர் கணேசன் கூறுகையில்,

மன அழுத்தத்தோடு சேர்த்து இன்றைய இளைஞர்கள் குறைவான நேரமே தூங்குகின்றனர். நள்ளிரவு வரை அவர்கள் பொதுவாக விழித்திருக்கின்றனர். மனதை ரிலாக்ஸாக வைப்பதற்கு அவர்களுக்கு நேரம் இருப்பதில்லை. அடிக்கடி துரித உணவகங்களில் ஆரோக்கியமற்ற உணவுகளை உண்பதும் அவர்களது பழக்கமாக மாறியிருக்கிறது. மேலும், இந்தியாவில் புகைப்பிடிப்பவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. தொழில்துறையில் பணியாற்றுவதால் உடல்சார்ந்த உழைப்பு மிகவும் குறைவாக இருக்கிறது. இந்த காரணிகள் அனைத்தும் ஒருங்கிணைந்து, இதய நோய்களுக்கு ஆளாவதற்கான இடர்வாய்ப்பை இந்திய இளம் தலைமுறையினரிடம் அதிகரித்திருக்கின்றன என்று கூறினார். இரத்தநாள அறுவை சிகிச்சை துறை தலைவர் டாக்டர். ஆர். எம். கிருஷ்ணன் கூறுகையில்,

நாம் உட்கொள்ளும் 75 சதவீத நொறுக்குத்தீனிகள் மற்றும் சிற்றுண்டிகளில் டிரான்ஸ் பேட் எனப்படும் தீங்கு விளைவிக்கும் கொழுப்பு இருக்கிறது. தேனீருக்கான இடைவேளையை சிறிய உடற்பயிற்சிகளுக்கான இடைவேளையாக மாற்றிக் கொள்ளலாம். உடற்பயிற்சிகள் வயது முதிர்ந்த நபர்களுக்கு மட்டுமன்றி, குழந்தைகளுக்கும் இளவயது நபர்களுக்கும் முக்கியமானது. நாள் முழுவதும் போதுமான அளவு நீர் திரவங்களை அருந்தி நீர்ச்சத்து குறையாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். கொழுப்பு, சர்க்கரை மற்றும் உப்பு குறைவாக உள்ள உணவுகள், முழு தானியங்கள், பதப்படுத்தப்படாத புதிதாக சமைத்த உணவுகள், பழங்கள் மற்றும் காய்கறிகள் அடங்கிய உணவுமுறையை நாம் கொண்டிருப்பது அவசியம் என்று கூறினார்.

இதய மயக்கவியல் துறையின் தலைவர் மற்றும் முதுநிலை நிபுணர் டாக்டர். எஸ். குமார், டாக்டர். பி. கண்ணன், டாக்டர். ஆர். சிவக்குமார், டாக்டர். எஸ். செல்வமணி டாக்டர். ஜெயபாண்டியன், டாக்டர் எம் சம்பத் குமார் ஆகியோர் இந்த சந்திப்பின் போது கலந்து கொண்டனர்.

# அடர்வனத்தில் ஊடுருவிய 62 பேர் பிடிபட்டனர்: வனத்துறையினர் விசாரணை

**திருமங்கலம். அக்.02.**

மதுரை மாவட்டம் திருமங்கலம் அருகே மேற்கு தொடர்ச்சி மலையை ஒட்டியுள்ள சாப்டூர் வனப்பகுதி பாதுகாக்கப்பட்ட பகுதியாகும். இந்த பகுதிகளில் அத்துமீறி நுழைய தடை விதிக்கப்பட்டுள்ளது. மீறினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என வனத்துறை அதிகாரிகள் எச்சரித்து இருந்தனர்.இந்த நிலையில் நேற்று வனப்பகுதியில் உள்ள பெருமாள் கோவில் மெட்டு பகுதியிலிருந்து புகை வந்தது. எனவே வனப்பகுதியில் தீ பரவி இருக்கலாம் என கருதி சாப்டூர், வத்திராயிருப்பு பகுதியில் இருந்து வனத்துறையினர், போலீசார் மற்றும் தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்திற்கு சென்றனர். அப்போது அந்தப் பகுதியில் 70-க்கும் மேற்பட்ட நபர்கள் அத்துமீறி ஊடுருவி இருப்பது தெரியவந்தது. அவர்கள் அந்த வழியாக சதுரகிரி செல்ல முற்பட்டதும், இதற்காக 2 ஏக்கர் பரப்பளவில் இருந்த மரம், செடி, புற்களுக்கு தீ வைத்து அழித்ததாகவும் தெரிகிறது. இதையடுத்து வனப்பகுதியில் அத்துமீறி நுழைந்ததாக 62 பேரை போலீசார் பிடித்து பேரையூரில் உள்ள ஒரு திருமண மண்டபத்தில் அடைத்து வைத்து அவர்களிடம் வனத்துறை அதிகாரிகள் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

## மகளிர் ஆசிய கோப்பை டி-20 போட்டி:
# இலங்கையை வீழ்த்தி இந்திய அணி வெற்றி

**சில்ஹெட், அக். 02-**

மகளிர் ஆசிய கோப்பை டி-20 தொடரில் இலங்கையை வீழ்த்தி வெற்றி பெற்றுள்ளது இந்திய மகளிர் கிரிக்கெட் அணி. இதன் மூலம் தொடரை இந்திய அணி வெற்றிகரமாக தொடங்கியுள்ளது.




**7 அணிகள்...**

வங்கதேசத்தில் நடப்பு மகளிர் ஆசிய கோப்பை தொடர் நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரில் இந்திய அணி ஹர்மன்ப்ரீத் கவுர் தலைமையில் பங்கேற்று விளையாடுகிறது. இந்தத் தொடர் டி-20 ஃபார்மெட்டில் நடைபெறுகிறது. மொத்தம் 7 அணிகள் பங்கேற்று விளையாடுகின்றன. ரவுண்ட் ராபின் முறையில் இந்தத் தொடரின் முதல் சுற்று நடைபெறுகிறது.

**151 ரன் இலக்கு..**

இந்தியா மற்றும் இலங்கை அணிகள் இடையே நேற்று நடந்த முதல் போட்டியில் மோதின. டாஸ் வென்ற இலங்கை அணி முதலில் பந்துவீசியது. இந்திய அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்டுகள் இழப்பிற்கு 150 ரன்கள் எடுத்தது. ரோட்ரிகஸ், 53 பந்துகளில் 76 ரன்கள் எடுத்தார். கேப்டன் ஹர்மன்ப்ரீத் 33 ரன்கள் குவித்திருந்தார்.

**இந்தியா வெற்றி...**

151 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை இலங்கை அணி விரட்டியது. இருப்பினும், அந்த அணி 18.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்த 109 ரன்கள் மட்டுமே எடுத்து ஆட்டத்தை இழந்தது.

இதன் மூலம் இந்தியா வெற்றி பெற்றது. வரும் 3-ம் தேதி அன்று மலேசிய அணிக்கு எதிராக இந்தியா விளையாட உள்ளது.

## தேசிய விளையாட்டு போட்டி:
# தமிழகத்தின் பவானிதேவி, பிரவீன் தங்கம் வென்றனர்

**ஆமதாபாத்:**

ஒலிம்பிக்கில் வாள்வீச்சுக்கு தகுதி பெற்ற முதல்இந்தியர் என்ற சிறப்புக்குரிய தமிழகத்தின் பவானிதேவி தேசிய விளையாட்டு போட்டியில் தங்கப்பதக்கத்தை வென்றார். பதக்கப்பட்டியலில் தமிழகம் 2 தங்கம் உள்ளிட்ட பதக்கங்களுடன் 8-வது இடத்தில் உள்ளது.

**வீராங்கனைகள்...**

36-வது தேசிய விளையாட்டு போட்டி குஜராத் மாநிலத்தில் உள்ள ஆமதாபாத், காந்தி நகர், சூரத், வதோதரா, ராஜ்கோட், பவநகர் ஆகிய நகரங்களில் நடந்து வருகிறது. நாட்டில் உள்ள அனைத்து மாநிலங்கள், யூனியன் பிரதேசம், சர்வீசஸ் ஆகிய அணிகளைச் சேர்ந்த 7 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ளனர்.

**மீராபாய் சானு...**



இதில் நடந்த பெண்களுக்கான பளுதூக்குதலில் 49 கிலோ எடைப்பிரிவில் எதிர்பார்த்தபடியே ஒலிம்பிக்கில் வெள்ளிப்பதக்கம் வென்றவரும், காமன்வெல்த் விளையாட்டு சாம்பியனுமான மணிப்பூர் வீராங்கனை மீராபாய் சானு தங்கமங்கையாக ஜொலித்தார். அவர் ஸ்னாட்ச் முறையில் 84 கிலோ, கிளீன் அண்ட் ஜெர்க் பிரிவில் 107 கிலோ என்று மொத்தம் 191 கிலோ எடை தூக்கி முதலிடத்தை பிடித்தார். மற்றொரு மணிப்பூர் வீராங்கனை சஞ்சிதா சானு (187 கிலோ) வெள்ளிப்பதக்கமும், ஒடிசாவின் சினேகா சோரன் வெண்கலப்பதக்கமும் (169 கிலோ) பெற்றனர்.

**கையில் காயம் ...**

பின்னர் மீராபாய் சானு கூறுகையில் ‘சமீபத்தில் பயிற்சியின் போது இடது கைமணிக்கட்டில் காயம் ஏற்பட்டது. அதனால் ‘ரிஸ்க்’ வேண்டாம் என்று தான் இந்த போட்டியில் 3-வது முயற்சியை பயன்படுத்தவில்லை. அடுத்து டிசம்பரில் நடக்கும் உலக சாம்பியன்ஷிப் போட்டிக்கு தயாராக வேண்டி இருக்கிறது’ என்றார்.

**டிரிபிள் ஜம்பில்...**

தடகளத்தில் ஆண்களுக்கான டிரிபிள் ஜம்பில் (மும்முறை தாண்டுதல்) தமிழக வீரர் பிரவீன் சித்ரவேல் 16.68 மீட்டர் நீளம் தாண்டி புதிய போட்டி சாதனையுடன் தங்கப்பதக்கத்தை தட்டிச் சென்றார். இதற்கு முன்பு இந்த பந்தயத்தில் 2015-ம் ஆண்டு ரஞ்சித் மகேஷ்வரி 16.66 மீட்டர் தாண்டியதே சாதனையாக இருந்தது. அதனை முறியடித்து அசத்திய 21 வயதான பிரவீன் திருவாரூர் மாவட்டம் செட்டிசத்திரம் அருகே உள்ள பெரியார் நகரைச் சேர்ந்தவர் ஆவார். கேரளாவின் ஏ.பி.அர்ஜூன் வெள்ளிப்பதக்கமும் (16.08 மீட்டர்), பஞ்சாப்பின் அர்பிந்தர் சிங் வெண்கலப்பதக்கமும் (15.97 மீட்டர்) கைப்பற்றினர்.

**பவானிக்கு தங்கம்...**

ஒலிம்பிக்கில் வாள்வீச்சுக்கு தகுதி பெற்ற முதல்இந்தியர் என்ற சிறப்புக்குரிய தமிழகத்தின் பவானிதேவி தங்கப்பதக்கத்தை உச்சிமுகர்ந்தார். வாள்வீச்சு சாப்ரே பிரிவின் இறுதி ஆட்டத்தில் அவர் 15-3 என்ற புள்ளி கணக்கில் பஞ்சாப்பின் ஜக்மீத் கவுரை தோற்கடித்து ‘ஹாட்ரிக்’ சாதனை படைத்தார். சென்னையில் வசிக்கும் 29 வயதான பவானிதேவி ஏற்கனவே 2011, 2015-ம் ஆண்டுகளில் நடந்த தேசிய விளையாட்டிலும் வாகை சூடியிருக்கிறார். இதன் ஆண்கள் பாயில் பிரிவில் தமிழக வீரர் வினோத்குமாருக்கு வெண்கலப்பதக்கம் கிடைத்தது.

**இளவேனில் தங்கம்...**

துப்பாக்கி சுடுதலில் 10 மீட்டர் ஏர் ரைபிள் பிரிவில் குஜராத் வீராங்கனை இளவேனில் 16-10 என்ற கணக்கில் கர்நாடகாவின் திலோத்தமா சென்னை வீழ்த்தி தங்கப்பதக்கத்துக்கு முத்தமிட்டார். இளவேனில் குஜராத் அணிக்காக களம் இறங்கினாலும் அவரது சொந்த ஊர் கடலூர் என்பது நினைவு கூரத்தக்கது.

**ஸ்வப்னா பர்மன்...**

பெண்களுக்கான உயரம் தாண்டுதலில் ஸ்வப்னா பர்மன் (மத்தியபிரதேசம்) 1.83 மீட்டர் உயரம் தாண்டி புதிய சாதனையுடன் தங்கப்பதக்கத்தை வசப்படுத்தினார். கர்நாடகாவின் அபினயா ஷெட்டி வெள்ளிப்பதக்கமும் (1.81 மீட்டர்), தமிழகத்தின் கிரேஸ் மெர்லி (1.81 மீட்டர்) வெண்கலப்பதக்கமும் பெற்றனர். கிரேஸ் மெர்லி கன்னியாகுமாரியைச் சேர்ந்தவர்.

**முனிதா பிரஜபதி...**

20 கிலோமீட்டர் நடைபந்தயத்தில் உத்தரபிரதேச வீராங்கனை முனிதா பிரஜபதி போட்டி சாதனையுடன் தங்கப்பதக்கத்தை சொந்தமாக்கினார். அவர் இலக்கை அடைய 1 மணி 38.20 நிமிடங்கள் எடுத்துக் கொண்டார். பெண்களுக்கான கபடியின் அரைஇறுதியில் தமிழக அணி 25-45 என்ற புள்ளி கணக்கில் மராட்டியத்திடம் தோற்று இறுதி வாய்ப்பை இழந்தது.

**8-வது இடத்தில்...**

பதக்கப்பட்டியலில் மேற்கு வங்காளம் 5 தங்கம், ஒரு வெள்ளி, 5 வெண்கலம் என்று 11 பதக்கத்துடன் முதலிடத்திலும், அரியானா 8 பதக்கத்துடன் (4 தங்கம், 2 வெள்ளி, 2 வெண்கலம்) 2-வது இடத்திலும் உள்ளன. தமிழகம் 2 தங்கம், 4 வெண்கலம் வென்று 6 பதக்கத்துடன் 8-வது இடம் வகிக்கிறது.

# 5 போலீஸ் அதிகாரிகளுக்கு காந்தியடிகள் காவல் விருது
## தமிழக அரசு அறிவிப்பு

**சென்னை, அக். 02-**

மதுவிலக்கு அமலாக்கப் பிரிவில் சிறப்பாக பணியாற்றிய 5 போலீஸ் அதிகாரிகளுக்கு காந்தியடிகள் காவல் விருதை தமிழக அரசு அறிவித்துள்ளது.

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

1) சென்னை மத்திய நுண்ணறிவு பிரிவு போலீஸ் இன்ஸ்பெக்டர் பிரியதர்ஷினி.

2) தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டை மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு போலீஸ் இன்ஸ்பெக்டர் கா.ஜெயமோகன்.

3) சேலம் மண்டலம் மத்திய நுண்ணறிவு பிரிவு சப்-இன்ஸ்பெக்டர் சகாதேவன்.

4) விழுப்புரம் மண்டலம் மத்திய நுண்ணறிவு பிரிவு சப்-இன்ஸ்பெக்டர் பா.இனாயத் பாஷா.

5) செங்கல்பட்டு மாவட்டம் பாலூர் போலீஸ் நிலைய போலீஸ்காரர் சு.சிவனேசன்.

ஆகியோருக்கு மதுவிலக்கு அமலாக்கப் பணியில் பாராட்டத்தக்க வகையில் பணியாற்றியமைக்காக காந்தியடிகள் காவலர் விருது வழங்க முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டார்.

இந்த விருது முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினால் வருகிற ஜனவரி 26-ந்தேதி குடியரசு தினத்தன்று வழங்கப்படும். இந்த விருதுடன், பரிசுத்தொகையாக ரூ.40 ஆயிரம் ஒவ்வொருவருக்கும் வழங்கப்படும் என அதில் கூறப்பட்டுள்ளது.

# பாப்புலர் பிரண்ட் அமைப்பின் சென்னை அலுவலகத்துக்கு சீல்
## தமிழக அரசு அதிரடி நடவடிக்கை

**சென்னை, அக். 02-**

பாப்புலர் பிரண்ட் அமைப்பின் சென்னை அலுவலகத்துக்கு தமிழக அரசு சீல் வைத்து நடவடிக்கை எடுத்துள்ளது. பாப்புலர் பிரண்ட் ஆப் இந்தியா அமைப்புக்கும் அதன் 8 துணை அமைப்புகளுக்கும் விதிக்கப்பட்ட 5 ஆண்டுகள் தடை உடனடியாக அமலுக்கு வருவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

டெல்லியை தலைமை இடமாக கொண்டு செயல்படும் பாப்புலர் பிரண்ட் ஆப் இந்தியா அமைப்பு சட்டவிரோத செயல்களில் ஈடுபடுவதாக தொடர்ந்து புகார்கள் எழுந்தன. இதையடுத்து தேசிய புலனாய்வு முகமையும், அமலாக்கத்துறையும் பாப்புலர் பிரண்ட் ஆப் இந்தியா அமைப்பின் செயல்பாடுகளை கண்காணித்து வந்தன. அப்போது அந்த அமைப்புக்கு வளைகுடா நாடுகளில் இருந்து ஹவாலா அடிப்படையில் ரூ.120 கோடி திரட்டப்பட்டு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

மேலும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் பாப்புலர் பிரண்ட் ஆப் இந்தியா அமைப்பு சட்ட விரோத செயல்களில் ஈடுபடுவதையும் புலனாய்வு அமைப்புகள் உறுதிபடுத்தின. இதையடுத்து கடந்த 22-ந்தேதி 15 மாநிலங்களில் என்.ஐ.ஏ. அதிகாரிகளும், அமலாக்கத்துறை அதிகாரிகளும் ஒருங்கிணைந்து “ஆபரேசன் ஆக்டோபஸ்” என்ற பெயரில் அதிரடி சோதனையில் ஈடுபட்டனர்.

93 இடங்களில் செயல்பட்டு வந்த பாப்புலர் பிரண்ட் ஆப் இந்தியா அமைப்பு அலுவலகங்களிலும், அதன் நிர்வாகிகள் வீடுகளிலும் சோதனை நடத்தப்பட்டது. அப்போது ஏராளமான ஆவணங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. நாடு முழுவதும் 106 பேர் கைது செய்யப்பட்டனர்.

கைதானவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணையின் போது பல திடுக்கிடும் தகவல்கள் கிடைத்தன. அதன் அடிப்படையில் கடந்த மாதம் 27-ந்தேதி 8 மாநிலங்களில் என்.ஐ.ஏ. அதிகாரிகள் மற்றும் உள்ளூர் போலீசார் சோதனையில் ஈடுபட்டனர். இதில் 250-க்கும் மேற்பட்டவர்கள் கைதானார்கள். 2 தடவை நடந்த சோதனையில் பாப்புலர் பிரண்ட் ஆப் இந்தியாவின் பணபரிமாற்றங்கள் தொடர்பாக ஆவணங்கள் சிக்கியது. அந்த ஆவணங்களை மத்திய உள்துறை அமைச்சகம் தீவிரமாக ஆய்வு செய்தது. மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா இது தொடர்பாக ஆய்வு செய்து வந்தார்.

இந்த நிலையில் கடந்த 27-ந்தேதி இரவு மத்திய உள்துறை அமைச்சகம் அறிவிப்பு ஒன்றை வெளியிட்டது. அதில் பாப்புலர் பிரண்ட் ஆப் இந்தியா அமைப்பு சட்ட விரோதமான அமைப்பு என்று அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே பாப்பு லர் பிரண்ட் ஆப் இந்தியா அமைப்புக்கு 5 ஆண்டுகள் தடை விதிப்பதாகவும் அறிவிக்கப்பட்டு இருக்கிறது.

பாப்புலர் பிரண்ட் ஆப் இந்தியா அமைப்புக்கு ரீகேப் இந்தியா பவுண்டேஷன், கேம்பஸ் பிரண்ட் ஆப் இந்தியா, ஆல் இந்திய இமாம் கவுன்சில், மனித உரிமை கழக தேசிய கூட்டமைப்பு, தேசிய பெண்கள் முன்னணி, ஜூனியர் பிரண்ட், எம்பவர் இந்தியா பவுண்டேஷன், ரீகேப் பவுண்டேஷன் கேரளா ஆகிய 8 துணை அமைப்புகள் இருக்கின்றன. அந்த 8 அமைப்புகளுக்கும் 5 ஆண்டுகளுக்கு செயல்பட தடை விதிக்கப்பட்டுள்ளது.

பாப்புலர் பிரண்ட் ஆப் இந்தியா அமைப்புக்கும் அதன் 8 துணை அமைப்புகளுக்கும் விதிக்கப்பட்ட 5 ஆண்டுகள் தடை உடனடியாக அமலுக்கு வருவதாக அறிவிக்கப்பட்டது. அதன்படி பாப்புலர் பிரண்ட் ஆப் இந்தியா அமைப்பின் நடவடிக்கைகள் அனைத்தும் முடக்கப்பட்டு உள்ளன. அந்த அமைப்பின் டுவிட்டர் மற்றும் சமூக வலைதளங்களின் தொடர்புகள் அனைத்தும் தடுக்கப்பட்டு உள்ளன. இதன் தொடர்ச்சியாக அனைத்து மாநிலங்களிலும் உள்ள பாப்புலர் பிரண்ட் அமைப்புகளின் அலுவலகங்களை மூட மத்திய அமைச்சகம் உத்தரவிட்டு உள்ளது.

தமிழகத்தில் பாப்புலர் பிரண்ட் ஆப் இந்தியா அமைப்புக்கு சென்னை புரசைவாக்கம் மூக்காத்தாள் தெருவில் தலைமை அலுவலகம் உள்ளது. அங்கிருந்து தான் தமிழகத்தின் இதர பகுதிகளில் உள்ள கிளை அலுவலகங்களுக்கு ஆவணங்கள், பொருட்கள் அனுப்பப்பட்டு வந்தன. தமிழக பாப்புலர் பிரண்ட் ஆப் நிர்வாகிகள் இந்த அலுவலகத்தில் அமர்ந்து தான் ஆலோசனை செய்வார்கள். மத்திய அரசின் நடவடிக்கைகளை தொடர்ந்து இந்த அலுவலகத்தை மூடுவதற்கு தமிழக அரசு முடிவு செய்தது.

இதற்கான நடவடிக்கைகள் நேற்று காலை எடுக்கப்பட்டன. சென்னை மாநகராட்சி அதிகாரிகளும், போலீசாரும் ஒருங்கிணைந்து இந்த நடவடிக்கையில் ஈடுபட்டனர். காலை 7 மணியளவில் பாப்புலர் பிரண்ட் ஆப் இந்தியா தலைமை அலுவலகத்துக்கு அதிகாரிகள் சீல் வைத்தனர். அதோடு அந்த அலுவலகத்தின் நுழைவு வாயில் பகுதியில் அமைக்கப்பட்டு இருந்த கொடிக்கம்பத்தையும் அகற்றினார்கள். பெயர் பலகையும் அப்புறப்படுத்தப்பட்டது. இதனால் அந்த பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

பாப்புலர் பிரண்ட் ஆப் இந்தியாவின் தமிழக தலைமை அலுவலகம் சீல் வைக்கப்பட்டதால் அதன் உறுப்பினர்கள் கடும் அதிருப்தியும், வேதனையும் அடைந்து உள்ளனர். இதையடுத்து அந்த தலைமை அலுவலகம் பகுதியில் கூடுதல் போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டு உள்ளது. தமிழகம் போலவே கேரளா உள்பட பல்வேறு மாநிலங்களிலும் பாப்புலர் பிரண்ட் ஆப் இந்தியா அமைப்பின் அலுவலகங்கள் சீல் வைக்கப்பட்டு முடக்கப்பட்டு இருப்பது குறிப்பிடத்தக்கது.

# பும்ரா தொடரில் இருந்து இன்னும் விலகவில்லை
## பி.சி.சி.ஐ. தலைவர் கங்குலி தகவல்

**கொல்கத்தா, அக். 02-**

இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஜஸ்ப்ரீத் பும்ரா எதிர்வரும் டி20 உலகக் கோப்பை தொடரில் இருந்து இன்னும் விலகவில்லை என இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரிய தலைவர் கங்குலி தெரிவித்துள்ளார்.

**எலும்பு முறிவு ?**

முதுகு பகுதியில் ஏற்பட்ட எலும்பு முறிவு காரணமாக தென்னாப்பிரிக்க அணிக்கு எதிரான தொடரில் இருந்து விலகி உள்ளார் பும்ரா. தற்போது அவர் பெங்களூருவில் உள்ள தேசிய கிரிக்கெட் அகாடமியில் உள்ளார். அவரை அங்குள்ள மருத்துவக் குழுவினர் கண்காணித்து வருகின்றனர். தென்னாப்பிரிக்க அணிக்கு எதிரான டி20 தொடரில் பும்ராவுக்கு மாற்றாக முகமது சிராஜ் இடம் பிடித்துள்ளார்.




**விலகவில்லை...**

டிஜிட்டல் சேனல் ஒன்றுக்கு கங்குலி தெரிவித்துள்ளதாவது., “பும்ரா, இன்னும் டி20 உலகக் கோப்பை தொடரிலிருந்து விலகவில்லை. அவர் தொடரில் பங்கேற்பது குறித்து முடிவு அடுத்த 2 அல்லது 3 நாட்களில் எடுக்கப்படும்” என்றார்.

**ஆஸி.க்கு பயணம்...**

வரும் 6-ம் தேதி வியாழன் அன்று இந்திய அணி ஆஸ்திரேலியாவுக்கு புறப்பட அல்லது. அங்கு இந்திய அணி தொடருக்கான பயிற்சிகளை மேற்கொள்ள உள்ளது. அக்டோபர் 16-ம் தேதி உலகக் கோப்பை தொடர் ஆரம்பமாகிறது. இந்திய அணி சூப்பர் 12 சுற்றில் தனது முதல் போட்டியில் பாகிஸ்தானுக்கு எதிராக விளையாட உள்ளது.

## இன்று 2-வது டி-20 போட்டி:
# தென் ஆப்பிரிக்காவுக்கு எதிரான தொடரை வெல்லுமா இந்தியா?

**மும்பை, அக். 02-**

இன்று 2-வது டி-20 போட்டியில் இந்திய அணி தென்னாப்பிரிக்காவுடன் பலப்பரீட்சை நடத்துகிறது. இதில் இந்திய அணி வெற்றிப் பெற்று தொடரை வெல்லுமா என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது. இந்திய அணியின் வேகப் பந்து வீச்சாளர் ஜஸ்பிரித் பும்ரா டி-20 உலகக் கோப்பையில் இடம்பெறுவாரா மாட்டாரா என்பது குறித்து இந்திய அணியின் தலைமைப் பயிற்சியாளர் ராகுல் டிராவிட் பதிலளித்துள்ளார்.



**ஆஸ்திரேலியாவில்...**

இந்த மாதம் டி-20 உலகக் கோப்பை ஆஸ்திரேலியாவில் நடைபெற உள்ளது. ஆசியக் கோப்பைக்குப் பிறகு இந்திய அணி தனது சொந்த மண்ணில் ஆஸ்திரேலியாவிற்கு எதிரான டி-20 தொடரில் விளையாடி 2-1 என்ற கணக்கில் தொடரைக் கைப்பற்றியது.

இதனையடுத்து, தற்போது இந்திய அணி தென்னாப்பிரிக்காவிற்கு எதிராக மூன்று போட்டிகள் கொண்ட டி-20 தொடரில் விளையாடி வருகிறது. தென்னாப்பிரிக்க அணிக்கு எதிரான முதல் டி-20 போட்டியில் இந்திய அணி வெற்றி பெற்று 3 போட்டிகள் கொண்ட தொடரில் 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

**காயம் காரணமாக...**

முதுகில் ஏற்பட்ட காயம் காரணமாக இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஜஸ்பிரித் பும்ரா தென்னாப்பிரிக்காவிற்கு எதிரான தொடரில் இருந்து விலகினார். உலகக் கோப்பைக்கு முன்னதாக இந்திய அணியின் நட்சத்திர பந்து வீச்சாளர் பும்ரா காயம் காரணமாக விலகியுள்ளது இந்திய அணிக்கு மட்டுமில்லாமல் இந்திய அணியின் ரசிகர்களுக்கும் பெரிய அதிர்ச்சியாக அமைந்தது.

தென்னாப்பிரிக்காவிற்கு எதிரான தொடரில் இருந்து பும்ரா விலகிய நிலையில் அவர் டி-20 உலகக் கோப்பையில் விளையாடுவாரா மாட்டாரா என்ற கேள்வி எழுந்தது.

**இன்று 2-வது போட்டி...**

இந்நிலையில், உலகக் கோப்பை தொடரில் பும்ரா இடம் பெறுவது குறித்து இந்திய அணியின் பயிற்சியாளர் ராகுல் டிராட் பேசியுள்ளது முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது. இந்தியா மற்றும் தென்னாப்பிரிக்கா அணிகளுக்கு இடையேயான 2வது டி-20 போட்டி இன்று (அக்டோபர் 2) நடைபெறும் நிலையில் பத்திரிக்கையாளர்களிடம் பேசிய அவர் இதனை தெரிவித்தார்.

**காத்திருக்கிறோம்...**

பும்ரா குறித்து ராகுல் டிராவிட் கூறியதாவது: “ நாங்கள் அதிகாரபூர்வ அறிவிப்பிற்காக காத்திருக்கிறோம். தென்னாப்பிரிக்காவிற்கு எதிரான தொடரில் இருந்து பும்ரா முழுவதுமாக விலகியுள்ளது அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுவிட்டது.

அதனால், அடுத்த சில நாட்களுக்கு நாங்கள் காத்திருந்து அவரது உடல் நிலை குறித்து கவனிக்க உள்ளோம். சாதாரணமாக வீரர் ஒருவர் முதுகில் காயத்தினால் அவதிப்படும்போது அதிலிருந்து குணமடைந்து திரும்ப 6 மாதங்கள் தேவைப்படும்.

இருப்பினும், பும்ரா குணமடைந்து அணிக்கு விரைவில் திரும்புவார் என நம்புகிறோம். நேர்மையாக சொல்ல வேண்டும் என்றால் அவரது காயம் எந்த அளவிற்கு உள்ளது என்பது தெரியவில்லை. நாங்கள் எப்போதும் அவரது சிறப்பான பங்களிப்பை அணிக்குத் தர வேண்டும் என விரும்புகிறோம்.” என்றார்.

# தப்பியதற்கு கடவுளுக்கு நன்றி: கிரிக்கெட் வீரர் உன்முக்த் சந்த்



19 வயதுக்குட்பட்ட இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டன் உன்முக்த் சந்த், கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்தபோது அவருக்கு கண்ணில் காயம் ஏற்பட்டுள்ளது. அமெரிக்காவில் விளையாடுவதற்காக இந்திய கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்ற சந்த், அமெரிக்காவில் நடந்த மைனர் லீக் கிரிக்கெட் போட்டியில் சிலிக்கான் வேலி ஸ்ட்ரைக்கர்ஸ் அணிக்காக விளையாடும் போது இந்த காயம் ஏற்பட்டுள்ளது. இதுகுறித்த புகைப்படங்களை தன்னுடைய சமூக வலைதள பக்கத்தில் அவர் பகிர்ந்துள்ளார். அந்த படத்தில் அவரது இடது கண் கடுமையாக வீங்கியுள்ளது. இதனால் அவரால் கண்ணை திறக்க முடியவில்லை. அவர் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில், “ஒரு தடகள வீரருக்கு இது ஒரு போதும் சுமூகமான சவாரி அல்ல. சில நாட்களில் நீங்கள் வெற்றியுடன் வீட்டுக்கு வருகிறீர்கள், மற்ற நாட்களில் ஏமாற்றத்துடன் வருவீர்கள். மேலும் சில நாட்களில் காயங்கள் மற்றும் தழும்புகளுடன் வீட்டுக்கு வருவீர்கள். பேரழிவில் இருந்து தப்பியதற்கு கடவுளுக்கு நன்றி. கடினமாக விளையாடுங்கள் ஆனால் பாதுகாப்பாக இருங்கள். இது ஒரு மெல்லிய கோடு. வாழ்த்துக்களுக்கு நன்றி” என்று கூறியுள்ளார்.

# கோலியின் சாதனையை சமன் செய்த அசாம்

இங்கிலாந்து, பாகிஸ்தான் இடையிலான 6-வது டி20 போட்டி லாகூரில் நடைபெற்றது. முதலில் பேட் செய்த பாகிஸ்தான், கேப்டன் பாபர் அசாம் அதிரடியால் 20 ஓவர் முடிவில் 6 விக்கெட் இழப்பிற்கு 169 ரன்கள் குவித்தது. பாபர் அசாம் 59 பந்தில் 7 பவுண்டரிகள் மற்றும் 3 சிக்ஸர்களுடன் 87 ரன்களை குவித்து கடைசி வரை ஆட்டமிழக்காமல் இருந்தார் . தொடர்ந்து 170 ரன்கள் இலக்குடன் களமிறங்கிய இங்கிலாந்து அணி பில் சால்ட் அதிரடியால் 8 விக்கெட்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இந்நிலையில், இந்தப் போட்டியில் 87 ரன்கள் அடித்ததன் மூலம் பாபர் அசாம் சர்வதேச டி20 போட்டிகளில் 3 ஆயிரம் ரன்களைக் கடந்துள்ளார். இதன்மூலம் டி20 போட்டிகளில் அதிவேகமாக 3 ஆயிரம் ரன்களை கடந்த வீரர் என்ற விராட் கோலியின் சாதனையை சாதனையை பாபர் அசாம் சமன் செய்துள்ளார்.

# இந்தியாவில் 3,805 பேருக்கு புதிதாக கொரோனா தொற்று

**புதுடெல்லி, அக். 02-**

இந்தியாவில் 3 ஆயிரத்து 805 பேருக்கு கொரோனா பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. நாட்டில் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களில் 38 ஆயிரத்து 293 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நாட்டில் கொரோனாவால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 5 லட்சத்தை தாண்டியது. நேற்று காலை 9 மணியுடன் முடிந்த 24 மணி நேரத்தில், நாட்டில் கொரோனாவால் புதிதாக பாதித்தவர்கள், குணமடைந்தோர், பலியானோர், இறப்பு விகித நிலவரம் குறித்து மத்திய சுகாதார அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

நாட்டில் புதிதாக 3,805 பேர் பாதித்துள்ளனர். இதன் மூலம், மொத்த பாதிப்பு எண்ணிக்கை 4,40,24,164 ஆக உள்ளது. கொரோனாவுக்கு புதிதாக 26 பேர் இறந்துள்ளனர். இதனால், நாட்டின் மொத்த உயிரிழந்தோர் எண்ணிக்கை 5,28,655ஆக உயர்ந்தது. கொரோனாவில் இருந்து குணமடைந்தோர் எண்ணிக்கை 4,40,24,164-ஆக உயர்ந்துள்ளது.

நாட்டில் தற்போது தொற்றால் பாதிக்கப்பட்டவர்களில் 38,293 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# செப்டம்பர் மாத ஜி.எஸ்டி. வசூல் ரூ.1.47 லட்சம் கோடியாக உயர்வு

**புது தில்லி, அக். 02-**

நாட்டில் கடந்த செப்டம்பர் மாதம் சரக்கு மற்றும் சேவை வரியில் (ஜிஎஸ்டி) ஆகஸ்ட் மாதத்தை விட 26 சதவீதம் உயர்ந்து ரூ.1.47 லட்சம் கோடியாக உள்ளது.

மத்திய நிதியமைச்சகம் நாடு முழுவதும் செப்டம்பர் மாதம் வசூலான ஜிஎஸ்டி வசூல் விவரங்களை சனிக்கிழமை வெளியிட்டுள்ளது. நாடு முழுவதும் ஆகஸ்ட் மாதத்தில் ரூ.1,47,686 கோடி ஜிஎஸ்டி வரி வருவாய் வசூலாகியுள்ளதாக தெரிவித்துள்ளது.

இது குறித்து மத்திய நிதியமைச்சகம் வெளியிட்டிருக்கும் அறிக்கையில், நாட்டின் ஒட்டுமொத்த ஜிஎஸ்டி வருவாய் செப்டம்பரில் ரூ.1,47,686 கோடியாக இருந்தது. இதில் மத்திய ஜிஎஸ்டி ரூ.25,271 கோடியாகவும், மாநில ஜிஎஸ்டி ரூ.31,813 ஆகவும், ஒருங்கிணைந்த ஜிஎஸ்டி ரூ.80,464 கோடியாகவும், செஸ் வரி ரூ.10,137 கோடியாகவும் உள்ளது.

கடந்த ஆண்டு இதே செப்டம்பர் மாதத்துடன் ஒப்பிடுகையில், 2022ஆம் ஆண்டு செப்டம்பர் ஜிஎஸ்டி 26 சதவீதம் அதிகமாகும்.



● கேரள மாநிலம், திருவனந்தபுரம் வழுதக்காட்டில நேற்று நடைபெற்ற இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில மாநாட்டில் கலந்து கொண்டு "கூட்டாட்சி மற்றும் மத்திய-மாநில உறவுகள்" குறித்த கருத்தரங்கில், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் உரையாற்றினார். இம்மாநாட்டில் கேரள முதல்வர் பினராயி விஜயன், தமிழக தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் த.மனோதங்கராஜ், அமைச்சர்கள் கே.ராஜன், ஜி.ஆர்.அணில் மற்றும் டி.ராஜா, முத்தரசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



● புதுடெல்லியில் நேற்று, மத்திய அரசின் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனை, தமிழக அரசின் நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் சந்தித்து பேசினார்.

# நாட்டை காப்பாற்ற வேண்டுமானால் அனைத்து மாநிலங்களும் காப்பாற்றப்பட வேண்டும்

## கம்யூ. மாநாட்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேச்சு

திருவனந்தபுரம்,அக்.02-

நாட்டை காப்பாற்ற வேண்டுமானால் அனைத்து மாநிலங்களும் காப்பாற்றப்பட வேண்டும் என்றும், இந்திய அளவில் கூட்டாட்சியை ஒப்புக் கொண்டவர்களால் கேட்கப்படுவது தான் மாநில சுயாட்சி என்றும் திருவனந்தபுரத்தில் நடைபெற்ற இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநாட்டில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசினார்.

கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநாடு நேற்று தொடங்கி நாளை 3-ம் தேதி வரை நடைபெறுகிறது. இந்த மாநாட்டில் கலந்து கொள்ள திருவனந்தபுரம் சென்ற தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலினுக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

மாநாட்டின் ஓர் அங்கமாக கூட்டாட்சி மற்றும் மத்திய, மாநில உறவு என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது. இந்த மாநாட்டில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:

ஜி.எஸ்.டி. மூலம் நிதி உரிமைகள் பறிக்கப்பட்டு விட்டது. நீட் தேர்வு மூலம் கல்வி உரிமைகளும் பறிக்கப்படுகிறது. இந்தியை திணிக்கும் முயற்சியே, தேசிய கல்வி கொள்கை ஆகும். நாட்டை காப்பாற்ற வேண்டுமானால் அனைத்து மாநிலங்களும் காப்பாற்றப்பட வேண்டும்.

பா.ஜ.க. அரசால் மக்கள் விரோத சட்டங்கள் கொண்டு வரப்படுகின்றன. அனைத்து மொழிகளையும் காப்பாற்ற வேண்டும். இந்தியாவை ஒற்றுமைப்படுத்தும் மந்திர சொல் தான் கூட்டாட்சி. நேரடியாக செய்ய முடியாத அரசியல் தலையீடுகளை, மத்திய அரசு சட்டத்தின் மூலம் நிறைவேற்ற முயற்சி செய்கிறது. ஆளுநர்களை ஏவி மாநிலங்களில் இரட்டை ஆட்சியை கொண்டு வர மத்திய அரசு முயற்சி மேற்கொள்கிறது. ஒரே உணவு, ஒரே நாடு, ஒரே தேர்தல் என நோக்கி சென்றால் ஒரே கட்சியாகி விடும். இதற்கு எதிரான குரல்தான் மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி ஆகும்.

நாம் கேட்பது அதிக அதிகாரங்கள் கொண்ட மாநிலங்கள் தானே தவிர, பிரிவினை மாநிலங்களை அல்ல, இந்திய அளவில் கூட்டாட்சியை ஒப்புக் கொண்டவர்களால் கேட்கப்படுவது தான் மாநில சுயாட்சி. இவ்வாறு அவர் பேசினார். இந்த மாநாட்டில் பேசிய முதல்வர் மு.க.ஸ்டாலின், தொடக்கத்தில், மலையாளத்தில் பேசியது குறிப்பிடத்தக்கது.

# 5ஜி சேவை இந்தியர்களுக்கான தொலைத்தொடர்பு துறையின் பரிசு

## பிரதமர் நரேந்திரமோடி பெருமிதம்

புதுடெல்லி,அக்.02-

5ஜி அறிமுகம் அனைத்து இந்தியர்களுக்கும் தொலைத்தொடர்பு துறை அளித்த பரிசு என்று பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

இந்திய மொபைல் காங்கிரசின் 4 நாள் மாநாடு, புதுடெல்லியில் உள்ள பிரகதி மைதானத்தில் நேற்று நடைபெற்றது. 'இந்தியா மொபைல் காங்கிரஸ்-2022' மாநாட்டின் தொடக்க விழாவில், நேற்று பிரதமர் நரேந்திர மோடி 5ஜி இணையத்தை முறைப்படி காலை 10 மணிக்கு தொடங்கி வைத்தார்.

நாட்டின் மூன்று பெரிய தொலைத்தொடர்பு நிறுவனங்கள், இந்த நிகழ்ச்சியில் பிரதமர் மோடியின் முன் 5ஜி இணையத்தின் மாதிரியை காண்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. 5ஜி அடிப்படையிலான டிரோன்கள், கழிவுநீர் கண்காணிப்பு அமைப்புகள், சுகாதாரம் தொடர்பான தொழில்நுட்பம் மற்றும் இணைய பாதுகாப்பிற்கான செயற்கை நுண்ணறிவு சார்ந்த தளங்கள் மூலம் விவசாயத்தின் தொழில்நுட்பத்தையும் அவர் மேற்பார்வையிட்டார்.

இதனை தொடர்ந்து பிரதமர் மோடி பேசியதாவது., 5ஜி அறிமுகமானது 130 கோடி இந்தியர்களுக்கு தொலைத்தொடர்பு துறையின் பரிசு. இது நாட்டில் புதிய சகாப்தத்தை நோக்கிய ஒரு படியாகும், உலகில் தொழில்நுட்ப வளர்ச்சியை முன்னெடுப்போம்.

டிஜிட்டல் இந்தியாவின் வெற்றியானது சாதனத்தின் விலை, டிஜிட்டல் இணைப்பு, தரவு செலவுகள் மற்றும் டிஜிட்டல் முதல் அணுகுமுறை உள்ளிட்ட 4 தூண்களை அடிப்படையாகக் கொண்டது. அவை அனைத்திலும் நாங்கள் வேலை செய்தோம்:

நாட்டின் ஏழைகள் கூட எப்போதும் புதிய தொழில்நுட்பங்களை பின்பற்ற முன்வருவதை நான் பார்த்திருக்கிறேன். தொழில்நுட்பம் அதன் உண்மையான அர்த்தத்தில் ஜனநாயகமாகி விட்டது.

முன்னதாக, 1ஜிபி டேட்டாவின் விலை சுமார் ரூ.300 ஆக இருந்தது, தற்போது ஒரு ஜிபிக்கு ரூ.10 ஆக குறைந்துள்ளது. சராசரியாக, இந்தியாவில் ஒரு நபர் மாதத்திற்கு 14 ஜிபி பயன்படுத்துகிறார். இதற்கு மாதம் ரூ.4200 செலவானது. ஆனால் தற்போது ரூ.125 முதல் 150 வரைதான் செலவாகும். அரசின் முயற்சியே இதற்கு வழிவகுத்தது.

டிஜிட்டல் இந்தியா ஒவ்வொரு குடிமகனுக்கும் ஒரு இடத்தை அளித்துள்ளது. சிறிய தெரு வியாபாரிகள் கூட யுபிஐ வசதியை பயன்படுத்துகின்றனர் என தெரிவித்தார்.



● இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கேரள மாநில மாநாட்டில் கலந்து கொள்ள வருகை தந்த தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினை திருவனந்தபுரம் விமான நிலையத்தில், கேரள மாநில அமைச்சர்கள் கே.ராஜன், ஜி.ஆர்.அணில் ஆகியோர் வரவேற்றனர். அருகில் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் த.மனோதங்கராஜ் உடனிருந்தார்.

# மின்சார வாகன பயன்பாட்டுக்கு ஊக்கம் அளித்து வருகிறோம்

## மத்திய அமைச்சர் நிதின் கட்கரி தகவல்

புனே, அக். 02-

மின்சார வாகன பயன்பாட்டுக்கு நாங்கள் ஊக்கம் அளித்து வருகிறோம் என்று மத்திய அமைச்சர் நிதின் கட்காரி தெரிவித்துள்ளார். மேலும் ப்ரீமியம் ரக கார் உற்பத்தி நிறுவனமான மொ்சடிஸ் பென்ஸ் நிறுவனம் இந்தியாவில் அதிகளவில் கார்களை உற்பத்தி செய்ய வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். அதன் மூலம் கார்களின் விலை குறையும். நடுத்தர வர்க்கத்தினரும் பென்ஸ் கார்களை வாங்க முடியும் என்று அவர் கருதுகிறார்.

இந்தியாவில் உள்ள உற்பத்தி கூடத்தில் முதன் முதலில் உற்பத்தி செய்யப்பட்ட EQS 580 4MATIC EV ரக மின்சார காரை அறிமுகம் செய்து வைத்தபோது அவர் இதனை தெரிவித்திருந்தார். மின்சார வாகனங்களுக்கு நாட்டில் மிகப் பெரிய சந்தை வாய்ப்பு இருப்பதாகவும் அவர் சொல்லியிருந்தார்.

"நீங்கள் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். அப்போதுதான் உங்களது கார்களின் விலை குறையும். நாங்கள் எல்லோரும் நடுத்தர வர்க்கத்தினர். இப்போது என்னால் கூட உங்களது கார்களை வாங்க முடியாது" என ரூ.1.55 கோடி காரை அறிமுகம் செய்தபோது அவர் தெரிவித்திருந்தார்.

மாற்று எரிபொருளுக்கான வாகனங்களின் பக்கமாக தேசத்தின் கவனம் இருந்து வருகிறது. சூழல் மாசுபாடுதான் இதற்கு முதல் காரணம். அதனால்தான் ஆட்டோமொபைல் துறையில் மின்சார வாகன பயன்பாட்டுக்கு நாங்கள் ஊக்கம் அளித்து வருகிறோம். உங்களது 101 சதவீத பார்ஃபெக்ஷன் கொண்ட உற்பத்தியை நாங்கள் கற்றுக் கொள்ள விரும்புகிறோம். அதை நடைமுறைப் படுத்துவது நாட்டுக்கு மிகவும் முக்கியம். பெட்ரோலுக்கு மாற்றாக எத்தனால் வேண்டும் என நினைக்கிறேன். எங்களது அரசு பெட்ரோல் மற்றும் டீசல் வாகனங்களை ஊக்குவிக்க போவதில்லை" என்று நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.

# தமிழகத்திற்கு ரூ.3,500 கோடி... (1-ம் பக்க தொடர்ச்சி)

விரைவாக பெற முடியும்.

அதோடு அனைத்து மாநிலங்களுக்கும் ஒரு லட்சம் கோடி வரை 50 ஆண்டு வட்டியில்லா கடன் வழங்குவதாக மத்திய அரசு அறிவித்தது. இதில் தமிழகத்தின் பல துறைகளில் இருந்து விண்ணப்பங்கள் செய்யப்பட்டு இருந்தது. இதுவரைக்கும் நிதி எதுவும் வராத நிலையில் தற்போது 3,500 கோடி ரூபாய் வட்டியில்லா கடனை விடுவித்துள்ளனர்.

அதன்படி ஆப்டிக்கல் பைபர் கேபிள் திட்டத்துக்கு ரூ.194 கோடி, ஊரக நெடுஞ்சாலை துறைக்கு ரூ.3,263 கோடி எனவும் இதுமட்டுமின்றி பிற திட்டங்களுக்கு நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.

மேலும் வருமானவரி மற்றும் இபிஎப்ஓ டேட்டாக்கள் கொடுக்கும்படி மத்திய அரசிடம் கேட்டு இருந்தோம். தமிழகத்தில் கடன் தள்ளுபடி, பிற திட்டங்களில் தமிழக மக்கள் எந்த நிலையில் உள்ளனர் என்பதை அறிந்து திட்டங்கள் செயல்படுத்த வசதியாக இருக்கும் என்ற அடிப்படையில் கேட்டு இருந்தோம்.

இதுபற்றி பட்ஜெட்டிலேயே குறிப்பிட்டு இருந்தேன். வருமான வரித்துறையில் இருந்து கர்நாடகத்துக்கு டேட்டா ரீலிஸ் செய்தனர்.

அதேபோல் தமிழகத்துக்கும் வருமான வரி மற்றும் இபிஎப்ஓ டேட்டாக்களை வழங்க கேட்டேன். தருவதாக கூறியுள்ளார்.

மதுரையில் நைபர் (national institute of pharmacology and research) திட்டம் செயல்படுத்தப்படும் என்ற அறிவிப்பு வெளியானது. அதன்பிறகு இதில் எந்த நடவடிக்கையும் இல்லை. இது பற்றி கேட்டபோது நைபர் திட்டம் அமலில் இல்லை என்றார். இதனால் நைமர் (National Institute of Medical Equipments research) திட்டத்தில் ஆய்வு மையத்தை மதுரைக்கு ஒதுக்க கோரிக்கை விடுத்துள்ளேன். மதுரையில் ஏய்ம்ஸ் வரும் நிலையில் இது பயனுள்ளதாக இருக்கும்'' என்றார்.

# காபூலில் கல்வி மையம் மீதான தாக்குதலுக்கு இந்தியா கண்டனம்

புதுடெல்லி,அக்.02-

காபூலில் கல்வி மையம் மீதான தாக்குதலுக்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இந்திய வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் அரிந்தம் பாக்சி டுவிட்டரில் கண்டனம் தெரிவித்துள்ளார். காபூலில் உள்ள தாஷ்ட்-இ-பார்ச்சி பகுதியில் கல்வி நிறுவனம் மீது நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலில் 20க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். மேலும் பலர் காயமடைந்தனர். இந்த தாக்குதல் சம்பவத்திற்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

காஜ் கல்வி மையத்தில் நடந்த தற்கொலைப் படை தாக்குதலில் பலியானவர்களில் பெரும்பாலானோர் மாணவிகள் என காபூலில் இருந்து தகவல் வெளியாகியுள்ளன. இதுகுறித்து இந்திய வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் அரிந்தம் பாக்சி டுவிட்டரில் கண்டனம் தெரிவித்துள்ளார்.

அந்த பதிவில் கூறப்பட்டுள்ளதாவது:- காபூலின் தாஷ்ட்-இ-பார்ச்சியில் உள்ள காஜ் கல்வி மையத்தில் பயங்கரவாதத் தாக்குதலால் நாங்கள் வருத்தமடைகிறோம். மேலும் பலியானவர்களின் குடும்பங்களுக்கு எங்கள் இரங்கலைத் தெரிவிக்கிறோம். கல்வி இடங்களில் அப்பாவி மாணவர்கள் தொடர்ந்து குறி வைக்கப்படுவதை இந்தியா வன்மையாகக் கண்டிக்கிறது.

இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## நாட்டின் தூய்மையான நகரம்:

# தொடர்ந்து 6-வது முறை முதலிடம் பிடித்த இந்தூர்

புதுடெல்லி,அக்.02-

நாட்டின் தூய்மையான நகரம்; தொடர்ந்து 6-வது முறையாக முதலிடம் பிடித்து இந்தூர் சாதனை படைத்துள்ளது. மாநிலங்கள் பட்டியலில் மத்திய பிரதேசம் முதல் இடத்தை பெற்றுள்ளது.

தூய்மையில் சிறப்பாக செயல்படும் நகரங்களை கண்டறிந்து கவுரவப்படுத்தி ஊக்குவிக்கும் வகையில், ஸ்வஸ் சர்வேக்ஷான் என்ற தூய்மையான நகரங்களுக்கான விருது வழங்கும் திட்டத்தை 2016-ல் பிரதமர் நரேந்திர மோடி அறிமுகம் செய்து வைத்தார்.

இதன்படி பல்வேறு பிரிவுகளின் கீழ் நாட்டில் தூய்மையில் சிறந்து விளங்கும் நகரங்கள் குறித்த தரவரிசை பட்டியலை ஒவ்வொரு ஆண்டும் மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற அமைச்சகம் வெளியிட்டு வருகிறது.

அந்த வகையில் 2022-ம் ஆண்டுக்கான நாட்டின் தூய்மையான நகரங்கள் பட்டியலை மத்திய அரசு நேற்று வெளியிட்டுள்ளது. அதன்படி, நாட்டின் தூய்மையான நகரங்கள் பட்டியலில் மத்தியபிரதேச மாநிலத்தின் இந்தூர் முதலிடம் பிடித்துள்ளது.

கடந்த 5 முறை தூய்மை நகரங்களில் பட்டியலில் முதலிடத்தில் இருந்த இந்தூர் தொடர்ந்து 6-வது முறையாக முதல் இடத்தை தக்கவைத்துள்ளது.

இதன் மூலம் 'ஸ்வஸ் சர்வேக்ஷான்' தூய்மை நகரத்திற்கான விருதை இந்தூர் தொடர்ந்து 6-வது முறையாக வென்றுள்ளது. முதல் இடம் பிடித்துள்ள இந்தூருக்கு வெற்றிக்கான விருதை ஜனாதிபதி திரவுபதி முர்மு மத்தியபிரதேச அரசு அதிகாரிகளிடம் வழங்கினார்.

இந்தூருக்கு அடுத்தபடியாக தூய்மையான நகரங்கள் பட்டியலில் குஜராத்தின் சூரத் 2-வது இடத்தையும், மராட்டியத்தின் நவி மும்பை 3-வது இடத்தையும் பிடித்துள்ளது.

ஒட்டுமொத்தமாக 'ஸ்வஸ் சர்வேக்ஷான்' திட்டத்தின் கீழ் சிறப்பாக செயல்படும் மாநிலங்கள் பட்டியலில் மத்திய பிரதேசம் முதல் இடத்தையும், சத்தீஸ்கர் 2-வது இடத்தையும், மராட்டியம் 3-வது இடத்தையும் கைப்பற்றியுள்ளது.

# பி.எப்.ஐ. அமைப்பின் தலைமை அலுவலகத்துக்கு சீல் வைப்பு

## என்.ஐ.ஏ. அதிகாரிகள் நடவடிக்கை

திருவனந்தபுரம்,அக்.02-

பி.எப்.ஐ. அமைப்பின் தலைமை அலுவலகத்துக்கு சீல் வைத்து என்.ஐ.ஏ. அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இந்தியாவில் செயல்பட்டு வந்த பாப்புலர் பிரண்டு அமைப்புக்கு பயங்கரவாத அமைப்புகளுடன் தொடர்பு இருப்பதாக மத்திய அரசு குற்றம்சாட்டியது. இது தொடர்பாக தேசிய புலனாய்வு அமைப்பு அதிகாரிகள் கடந்த சில நாட்களுக்கு முன்பு நாடு முழுவதும் உள்ள பாப்புலர் பிரண்டு அமைப்பின் அலுவலகங்கள் மற்றும் நிர்வாகிகள் வீடுகளில் அதிரடி சோதனை நடத்தியது. இதில் பல முக்கிய தஸ்தாவேஜுகளை அதிகாரிகள் கைப்பற்றினர். அதன் அடிப்படையில் பாப்புலர் பிரண்டு அமைப்புக்கு மத்திய அரசு தடை விதித்தது.

என்.ஐ.ஏ. அதிகாரிகளின் சோதனைக்கு எதிர்ப்பு தெரிவித்து கேரளாவில் கடந்த 23-ந் தேதி முழு அடைப்பு போராட்டம் நடைபெற்றது. அப்போது பல இடங்களில் வன்முறையும் மூண்டது. இதில் ஈடுபட்டவர்களை போலீசார் கைது செய்தனர்.

மேலும் பாப்புலர் பிரண்டு அமைப்பின் நிர்வாகிகளும் கைது செய்யப்பட்டனர். இந்நிலையில் கோழிக்கோட்டில் உள்ள பாப்புலர் பிரண்டு அமைப்பின் தலைமை அலுவலகத்துக்கு சீல் வைத்தனர்.

இதற்கிடையே தேசிய புலனாய்வு அமைப்பு அதிகாரிகளால் கைது செய்யப்பட்ட பாப்புலர் பிரண்டு அமைப்பு நிர்வாகிகளின் காவல் முடிந்தது.

இதையடுத்து அவர்கள் அனைவரும் என்.ஐ.ஏ. கோர்ட்டில் ஆஜர்படுத்தப்பட்டனர். அவர்களுக்கு வருகிற 20-ந் தேதி வரை 21 நாட்கள் காவலை நீட்டித்து என்.ஐ.ஏ. கோர்ட்டு உத்தரவிட்டது.